ISSN 2424-6654




தமிழ்த் தூது

# தாயக ஒலி

THAYAKA OLI

இரு திங்கள் ஏடு 27





தை-மாசி 2017

விலை ரூபா: 100/=



Since 1986
Rabeena
We've Mastered Taste
2017
அன்பார்ந்த ஏக இறக்குமதியாளர்கள்,
விநியோகஸ்தர்கள், மற்றும்
வாடிக்கையாளர்களுக்கு
இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
CURRY POWDER
MIXTURE
Rabeena Food (Pvt) Ltd
90, Reclamation Road, Colombo - 11, Sri Lanka.
Tel: 94-11-2336602/03, Fax : 94-11-2332997
E-mail : info@rabeena.com Web Site : www.rabeena.com


Dream Big | Think Big | Achieve Big
இனிய
தைத்திருநாள்
நல்வாழ்த்துக்கள்!
LAE
Little Asia
WELLAWATTE / PETTAH
"Little Asia: for 6-yards of bridal splendour"
317, 317A, Galle Road, Wellawatte, Colombo 06. | T: +94 11 250 4470, 250 0098 | F: +94 11 2508934
E: info@littleasia.lk | www.littleasia.lk | skype: little.asia.emporium
73, Main Street, Colombo 11. | T: +94 11 2391592, 2391593 | F: +94 11 2391745
E: info@littleasiasilk.com | www.littleasiasilk.com | Skype: little.asia.silk


AA Accounting & Business Solutions Associates
265 Haydons Road / London SW19 8TY
Accountants and Management Consultants
for Efficient and Quality Professional Accounting Services
We Specialise in
Year End Accounts Preparation
Management Accounts
Solicitors Accounts
Book Keeping
Self Assessment Tax Returns
Vat and TAX Investigations
Payroll Preparation
Business Startup Advice
Business Plans and Cash Flow Forecasts
Management Consultancy
Also through our contacts we are able to raise Finance for New Business
Contact:
Uthayanan or Sasi
Mob : 0774 7794 358 / 07786 966 207 Tel : 020 8545 0205
www.aa-accounts.co.uk

சட்டத்தரணிகளும் குடிவரவு ஆலோசகர்களும்

# Rasiah & Co
## Solicitors


- *Conveyancing*
- *Residential & Commercial*
- *Matrimonial*
- *Immigration*
- *Landlord & Tenants*

**Tel : 020 8543 4040**
**Fax : 020 8543 2400**

180A Merton High Street,
South Wimbledon,
London SW 19 1AY

DX: 300004 Wimbledon South

rasiahsolicitors@btconnect.com



# Kanaga Solicitors

**KEY PERSONNEL**


Name : Kanakavalli Nadarajanpillay
Kanaga Solicitors
108 High Street, Colliers Wood
London - SW 19 2 BT

Position in the firm : Principal Solicitor

**Academic/ professional Qualifications:**
L.L.B(Hons), Barrister of Lincoln's Inn, Masters at Law (L.L.M), Advocate & Solicitor of High Court of Malaya, Solicitor of the Supreme Court of England and Wales.

**Relevant and present Experience:**
Immigration asylum, Residental conveyancing, Commercial conveyancing, Civil litigation, Criminal litigation, Family & divorce cases, Land loard & tenant, wills and probate.

Successful practitioner of 16 years.





**Tel: 07878278131**
**020 8544 1100**
**108 High Street, Colliers Wood**
**London - SW 19 2 BT**
email : kanakavalli_ek@yahoo.com

ISSN 2424-6654

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

# தாயக ஒலி

(தாயக மண்ணின் தனித்துவம் காக்கும் இருதிங்கள் ஏடு)

வள்ளுவர் ஆண்டு 2047 தை - மாசி 2017 வில்-05 ஒலி-27

இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும், இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வெளியிடும்

## தாயக ஒலி

**பிரதம ஆசிரியர்**
த.சிவசுப்பிரமணியம் (தம்பு சிவா)
தொலைபேசி : 0094(0)718676482

**துணை ஆசிரியர்கள்**
தாயகன் (இலண்டன்), சி.பவன் ( இலங்கை)

**மதியுரைக் குழு**
பேராசிரியர் சபா ஜெயராசா
வவுனியூர் இரா உதயணன்
சைவப்புலவர் சு.செல்லத்துரை
ந.கருணை ஆனந்தன்
எஸ்.ஈஸ்வரநாதன் (இலண்டன்)
வைத்திய கலாநிதி தாஸிம் அகமது

**சஞ்சிகைக் குழு**
மூ.சிவலிங்கம்
கா.வைத்தீஸ்வரன்
கதிரவேலு மகாதேவா
செ.ராஜேந்திரா
இ.ஜீவகாந்தன்

**வெளிநாட்டுப் பிரதிநிதிகள் :**

| | | |
|---|---|---|
| கனடா | : | முருகேசு கிருபாகரன் |
| | | து.நடராஜா, அ.பற்குணன் |
| இலண்டன் | : | இ.பாலேந்திரநாதன் |
| அமெரிக்கா | : | வே.பிரேமதயாளன் |
| அவுஸ்திரேலியா | : | தி.திருநந்தகுமார் |
| பிரான்ஸ் | : | ச.சச்சிதானந்தம் |

**ஐரோப்பிய நாடுகளுக்கான விசேட ஒருங்கிணைப்பாளர்**
**திருமலை பாலா**
தொ.பேசி : 0044(0) 7956486014

தொடர்பு : 9-2/1, நெல்சன் இடம்,
கொழும்பு - 06, இலங்கை
தொ.பேசி. : 0094(0)112364124
Email : editorthayakaoli@gmail.com

தாயக ஒலியில் இடம்பெறும் படைப்புக்களுக்குப் படைப்பாளிகளே பொறுப்புடையவர்கள். ஆக்கங்கள் ஆசிரியரின் அவதானிப்புடன் பிரசுரமாகும்
– ஆசிரியர்

## உள்ளே ஒலிப்பவை


பேனா முனையிலிருந்து... 02

**கட்டுரை :**
- மரம் நடுகையின் முக்கியத்துவம் 03
- விசேட தேவைக்கல்வி அறிக்கை 11
- சிறுவர் இலக்கியப் பரப்பில் பாரதி 15
- தமிழரின் கடவுட் கோட்பாடு 33
- இலட்சிய வாழ்வு 43
- நமது காடுகள் 46
- விளையாட்டு இலக்கியம் 49

**சிறுகதை :**
- நிழல் தின்னும் மனக்குரங்கு 06
- வளைவுகள் 22

**கவிதை :**
- அப்போதே தமிழ் செம்மொழிதான் 13
- நாட்டுக்கூத்து 32
- தமிழ்த் தாயே வாழியவே 32
- அம்பியின் சிறுவர் பாடல்கள் 55

**நூல் விமர்சனம் :**
- தாயக ஒலி 53

**கலைஞர்கள் கௌரவம் :**
- சோக்கல்லோ சண்முகம் 38
- பாடும்நிலா எஸ்.பி.பாலசுப்பிரமணியம் 42

**சிறுவர்கதை :**
- எல்லாரும் முட்டாள்கள் 14
- தாகம் தீர்த்த முயல் 37
- இலங்கைக் காகம் 48

**கேட்டதைச் சொல்ல வந்தோம் :**
- பொருளாதார முன்னேற்றத்துக்கா கல்வி 45

**உங்கள் விருந்து:**
- அற்புதத்திலும் அற்புதம் 56

**ஏனையவை :**
- மாமலை சரிந்தது 52


**அட்டையில்....**
உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்

பேனா முனையிலிருந்து...



# குற்றச்செயல்களைத் தடுத்தல்

நமது நாட்டில் குற்றச்செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை அவதானிக்கும் போது, நாம் எல்லோரும் அதற்குக் காரணமாக இருக்கின்றோம் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். நாமே குற்றச் செயல்களைச் செய்பவர்களுக்கு ஆதரவாக இருக்கின்றோம் என்று பலருக்குத் தெரிவதில்லை. மனிதனின் மறைமுகமான செயற்பாடுகள் குற்றம் செய்பவர்களுக்குச் சாதகமாக அமைந்துவிடுகின்றது. அவதானக்குறைவும் மதி மயக்கமும் குற்றம் ஏற்படுவதற்குத் துணையாய் இருக்கின்றன. தன்னை மறந்த நிலையில் மனிதன் குற்றம் புரிந்தவனாகவும் சில சந்தர்ப்பங்களில் குற்றத்திற்குள்ளாகுபவனாகவும் இருப்பதைக் காண முடிந்துள்ளது.

கொலை, களவு, சூதாட்டம், பாலியல்வல்லுறவு, சிறுவர் துஷ்பிரயோகம், கப்பம் கோரல், ஆட்கடத்தல், போதைப்பொருள் கடத்தல், விற்றல், நம்பிக்கை மோசடி, ஏமாற்றுதல் போன்ற பல்வேறுபட்ட குற்றச் செயல்களுக்கு நம் நாட்டு மக்கள் முகம் கொடுத்து வருகின்றார்கள். உயிர்ச் சேதம், அங்கவீனம், பொருள் இழப்புகள், தற்கொலை போன்றவை குற்றச்செயல்களின் விளைவுகளாக அமைந்து மக்களுக்கு அச்சத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கின்றன. சமூக விரோதச் செயல்கள், தற்போதைய சமுதாயத்தை பயமுறுத்தல்களுக்கு உள்படுத்தப்பட்டுள்ளமையைச் சாதாரண விடயமாகக் கொள்ள முடியாது.

கடந்த ஐந்து வருடகாலத்திற்குள் கணிக்கப்பட்ட புள்ளி விபரத்தை அவதானிப்போமானால் ஒவ்வொரு பத்து விநாடிக்கும் ஒரு பாரதூரமான குற்றச் செயல் நடந்தேறியுள்ளமையைக் காணலாம். ஒவ்வொரு ஏழு மணித்தியாலத்திற்கு ஒரு ஆட்கொலையும், ஒவ்வொரு ஏழு மணித்தியாலத்திற்கு ஒரு பாலியல் வல்லுறவும், ஒவ்வொரு முப்பது நிமிடங்களுக்கு ஒரு வீடுடைத்து களவும், ஒவ்வொரு நான்கு மணித்தியாலத்திற்கு ஒரு வீதி விபத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளதைப் பார்க்கும்போது ஒவ்வெருவருடைய மனத்திலும் பயப்பீதி தோன்றலாம்.

அனேகமான குற்றம் புரியப்படுவது ஒருவருடைய கவனயீனத்தாலும், தவறுதலாலும் ஆகும். ஆகையால் குற்றம் நடைபெற்றபின் அதை 'அநியாயம்' என்று விபரிப்பதால் பயன் இல்லை. அதனால் எமது நாளாந்த நடவடிக்கைகளைச் சரியான முறையில் செய்து கொண்டால் குற்றங்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும். மதுபானம், போதைப்பொருட்கள் பாவிப்பவர்கள் வாகனம் ஓட்டுவதைத் தவிர்ப்பது அவசியம். வாகன விபத்துக்கள் ஏற்படுவதற்குப் பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. மதுபோதையில் வாகனம் ஓட்டுதல், வேகக்கட்டுப்பாட்டை கவனத்தில் கொள்ளாமை, வீதி ஒழுங்குகளை கவனிக்காமை, தொடர்ச்சியாக நித்திரை இன்றிவாகனத்தை ஓட்டுதல், கையடக்கத் தொலைபேசியில் கதைத்துக்கொண்டு வாகனம் ஓட்டுதல், ஆசனப்பட்டி அணியாமை போன்றவை விபத்துக்கள் ஏற்படுவதற்குக் காரணங்களாகின்றன. மோட்டார் சயிக்கிள் ஓடுபவர்கள் அவருடன் சேர்ந்து பயணிப்பவர்கள் தலைக்கவசம் அணிவது மிக அவசியம்.

பெண்கள், பிள்ளைகள் சமுதாயத்தல் அனேகமாகத் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்படுவதனால் அவர்களுக்குத் துன்புறுத்தலோ பயமுறுத்தலோ ஏற்படாத வகையில் செயற்படுவது சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவரின் கடமையும் பொறுப்பும் ஆகும் என்பதைக் கவனத்தில் கொள்வதன் மூலம் குற்றச் செயல்களைத் தடுக்க முடியும்.

இலங்கை ஆசிய குற்ற நிவாரண நிறுவகம், குற்றத்திற்கு இலக்காகாமல் இருந்தலும், குற்றத்தைக் குறைத்துக்கொள்ளுதலும் சம்பந்தமாக குற்றத் தடுப்புக் கைநூல் ஒன்றை மும்மொழிகளிலும் வெளியிட்டு அவற்றை மக்களுக்கு இலவசமாக வழங்கி விழிப்புணர்ச்சியை ஊட்டிவருவது ஆரோக்கியமான செயற்பாடாகும். பொது மக்கள் குற்றத்திற்கு இலக்காகாமல் தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்குரிய வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதோடு, அவர்களுடைய உடைமைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்குமான வேலைத்திட்டத்தையும் முன்வைத்துள்ளது. குற்றங்களைத் தடுத்து சுபீட்சமான இலங்கையைக் கட்டியெழுப்ப நாம் எல்லோரும் முனைப்புடன் ஒன்றிணைந்து செயற்படுவோம்.


மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.....

**- ஆசிரியர்**

# மரம் நடுகையின் முக்கியத்துவமும் எமது பாரம்பரிய வளங்களும்

(மரம் நடுகை மாதத்தில் முதலமைச்சர் ஆற்றிய உரை)

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
முதலமைச்சர், வடமாகாணம்



மற்றுமொரு மரம் நடுகை மாதம் மாண்புடன் மலர்ந்துள்ளது. மழை தரும் மாதமான இக் கார்த்திகை மாதத்தில் எமது இந்த மண்ணுக்குச் சொந்தமான மரங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து மரம் நடுகை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. 2014ம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு கார்த்திகை மாதமும் மரம் நடுகைக்கு ஏற்ற மாதங்களாக தெரிவு செய்யப்பட்டு வருடந் தோறும் பல மரங்கள் நாட்டப்பட்டு வருவது அனைவரும் அறிந்த விடயங்கள். வடமாகாணத்தைப் பொறுத்த வரை கார்த்திகை மாதம் மழைவீழ்ச்சி ஆரம்பிக்கின்ற காலமாக காணப்படுவதால் இக் காலத்தில் கூடுதலான மரங்கள் நாட்டப்படுவதன் மூலம் எமது பகுதியில் தறித்து வெட்டி அப்புறப்படுத்தப்பட்ட பல்லாயிரக் கணக்கான மரங்களின் ஒரு பகுதியையாவது இம் மரம் நடுகை நிகழ்வுகள் மூலமாக மீள உருவாக்க முடியும் என்று நம்புகின்றோம். எமது வழிகாட்டலின் கீழ் கௌரவ விவசாய அமைச்சரும் அவரின் அமைச்சும் இப் புனித கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளமை அனைவருக்கும் மகிழ்வைத் தருகின்றது.

மரங்களில் எமது நாட்டிற்கு மட்டும் சொந்தமான மரங்கள், பிற நாடுகளில் இருந்து கொண்டுவந்து இங்கே நாட்டி விருத்தியடைந்துள்ள மரங்கள், அவற்றை' விட இங்கும் பிற நாடுகளிலும் வளரும் மரங்கள் என பல்வேறு வகைப்பட்ட மரங்களை அடையாளம் கண்டுள்ளோம். அவற்றுள் இவ்வருடம் "சொந்த மண் சொந்த மரங்கள்" என்ற கருப்பொருளுக்கு அமைய எம்முடைய பிரதேசத்திற்குரிய மரங்களை வடமாகாணம் பூராவும் நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எமது பாரம்பரிய தருக்களே எமது மண்ணின் செழுமையை இற்றைவரை தக்க வைத்திருப்பவை. அவற்றை அடையாளம் கண்டு மீண்டும் மீண்டும் நடுவதால் எமது பாரம்பரியத்தை வலியுறுத்துகின்றோம். வரலாற்றை வளம்படுத்துகின்றோம். எமது வாழ்விடங்களின் செழுமையின் அடையாளச் சின்னங்களை விருத்தியடைய வைத்து எமது நிலங்களை வளம் பெறக் காக்கின்றோம்.

மரம் நடுகை என்பது ஒரு வைபவ ரீதியான நிகழ்வு அல்லது நடுகை தினத்துடன் முடிவடைந்துவிடுகின்ற நிகழ்வு அல்ல. நடுகை செய்யப்பட்ட மரங்கள் தொடர்ச்சியாக பராமரிக்கப்பட வேண்டும். மரங்களை ஓங்கி வளரச் செய்ய வேண்டும். எமது மண்ணின் பசுமையைப் பாதுகாக்க முன்நிற்க வேண்டும். இதனால்

தான் நாங்கள் இப்புனித கைங்கரியத்தில் பாடசாலைகள், கூட்டுறவு அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள், கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள், வணக்க ஸ்தலங்கள், இளைஞர்

அமைப்புக்கள் என பலரின் கூட்டுமுயற்சியாக பொது மக்களின் பங்களிப்புடன் இந்நிகழ்வை மாற்றியமைத்திருக்கின்றோம்.

மரங்களை நாம் ஏன் நாட்ட வேண்டும்? என்ற கேள்வி எழுகின்ற போது எமது வகுப்பறைகளில் கூறியவை ஞாபகத்திற்கு வருகின்றன. பிராண வாயுவை எமக்குத் தந்து கரியமில வாயுவை தம்முள் உள்ளடக்குவன மரங்கள். எமது உயிர் நாடியாகிய பிராண வாயுவை வெளிக்கொணர்வதால் எமக்கு அவசியம் தேவையானவை மரங்கள் என்றாகின்றது. அத்துடன் மரங்கள் பல வளர்ந்தால் சுற்றுப்புறம் மாசடைதல் குறைவடையும். ஆஸ்துமா போன்ற சுவாசத்தோடு தொடர்புடைய நோய்களும் கட்டுப்படுத்தப்படுவன. அதுமட்டுமல்லாது நாம் சிறுவர்களாக இருந்த போது எமக்கு கற்றுக் கொடுக்கப்பட்ட மரங்கள் நிழல் தருவன, மரங்கள் ஓங்கி வளர்வதன் மூலம் கூடிய மழை வீழ்ச்சி உருவாகும் என்ற விடயங்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

கார்த்திகை, மார்கழி மாதங்களில் மட்டும் மிதமான மழை வீழ்ச்சியை கொண்டுள்ள இப்பகுதிகளில் இருந்த உயர்ந்த விருட்சங்களும் வான் பயிர்களும் பாதுகாப்பு அரண்களாக எதிரிக்கு உதவக் கூடும் என்ற போர்வையில் சாரி சாரியாகத் தறித்து அழிக்கப்பட்டதுடன் எம் பிரதேசம் பெருவாரியாக மரங்கள் அற்ற சூனியப் பிரதேசமாக மாற்றப்பட்டுள்ளமையால் எமது பிராந்தியத்தின் சீதோஸ்ண நிலைமைகளும் மாற்றம் அடைந்துள்ளன. உலகில் காணப்படுகின்ற மொத்த நிலப்பரப்பில் 2 சதவிகித நிலத்தை மட்டுமே வன மரங்கள் மூடி நிற்கின்றன. இந்த குறுகிய இடத்தில் தான் இப் பூமியில் காணப்படுகின்ற மனிதர்கள் தவிர்ந்த பறவைகள், மிருகங்கள், மற்றும் ஜந்துக்கள் தமது வாழ்விடங்களை அமைத்துக் கொண்டுள்ளன.

மனிதன் மரத்தைத் தறித்து நிலத்தில் மண் நிரப்பி மாடமாளிகைகள் அமைப்பதால் அவன் சுயநலத்துடன் வாழலாம். ஆனால் சுற்றுச்சூழலுக்கு அவன் பகைவன் ஆகின்றான் என்பதை நாம் மறத்தல் ஆகாது. இதனால்த் தான் பலர் பல்வேறுபட்ட பாரிய தொழில் முயற்சிகளைத் தோற்றுவிக்க எம்மை நாடி வருகின்ற போதும் நாம் மிக அவதானமாக அம் முயற்சிகளின் சுற்றுப்புறச் ,சூழல் பாதிப்புக்கள் பற்றி கவனித்துப் பார்த்தே அம் முயற்சிகளை உள்வர உதவுகின்றோம். பாரிய தொழில் முயற்சிகள் பலருக்கு வாழ்வாதாரங்களை வழங்கக்கூடும். ஆனால் குறுகிய கால நலன்களைக் குறியாக வைத்து வருங்கால சந்ததியை நாம் வருத்தத்தில் ஆழ்த்திவிடக்கூடாது. சுற்றுலா என்ற போர்வையில் தெற்கில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் எம்மையும் பாதிக்கக் கூடாது என்பதில் நாங்கள் கவனமாக இருக்கின்றோம். ஏற்கனவே எமது நிலங்கள், சுற்றுச்சூழல், நிலத்தடி நீர் ஆகியவை வெகுவாக மாசடைந்துள்ளன. மின்சாரம் தேவை என்பதற்காக பாரிய எண்ணைத் தேக்கக்கிடங்குகளை சுன்னாகத்தில் வடிவமைக்க முனைந்து இன்று எண்ணைக்கசிவின் மூலம் சுன்னாகத்தில் மட்டுமல்லாது மல்லாகத்திற்கு அப்பாலும் நிலத்தடி நீர் மாசுபட்டுள்ளது. எனவே ஒவ்வொரு விடயங்களும் நுணுக்கமாக ஆராயப்படல் அவசியமாகின்றது.

மரங்களை நாட்டுவதன் மூலம் சுற்றுச்சூழலில் எழக்கூடிய ஒலி மாசுக்களைத் தணிக்கலாம். இதுவரை வாகன ஓசைகள் எம்மை அவ்வளவாகப் பாதிக்காத போதும் இப்பொழுது வாகன இரைச்சல்களும் அதன் மாசுகளும் மெல்ல மெல்ல யாழ் நகரப்புறத்தைக் கவ்வி வருகின்றன. மரங்களைப் போதுமானதாக நாட்டி வைப்பது வாகன இரைச்சல்கள் எமது காதைத் துளைப்பதை தடுக்க வல்லன. மரங்கள் உயிரியமான பிராண வாயுவை உற்பத்தி செய்கின்றன. சுற்றியுள்ள சூழலை

சுத்தப்படுத்துகின்றன. சுகமான சூழலை உண்டுபண்ணுகின்றன. சுழன்று வரும் பேய்க்காற்றை தடை போட்டு நிறுத்தும் தகைமையும் மரங்களுக்குண்டு. அதுமட்டுமல்லாது மழை காலங்களில் மண்ணரிப்பை தடுப்பதும் மரங்களே!

எமது இந்து மதத்தில் ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒரு விருட்சத்தை உடன் நிறுத்தி வைத்திருக்கின்றார்கள். இந்தத் தெய்வத்திற்கு இந்த மரம் அல்லது செடி அல்லது மலர் இஷ்டம் என்கின்றார்கள். தாவரங்களுடன் எமக்கிருக்கும் அன்னியோன்னிய நிலை எமது சமயங்களில் கூறப்பட்டிருக்கின்றது. வேம்பு, துளசி, போன்றவை மக்களின் மரியாதையை இன்றும் பெற்ற மரங்கள். ஆலும் வேலும் பல்லுக்குறுதி என ஆலமரம் மற்றும் வேல மரங்களின் சிறப்புக்கள் மருத்துவ ரீதியாகவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

பூட்டான் நாட்டின் மன்னர் அண்மையில் தமது நாட்டிலுள்ள நிலத்தில் 72% மரங்களாகவும் வனமாகவும் இருக்க வேண்டும் என்று கட்டளை பிறப்பித்துள்ளார். வனங்களை, விவசாய நிலங்களை வேறு காரியங்களுக்குப் பாவிக்க விழைபவர்களுக்குக் கடும் தண்டனை விதிக்கின்றார். தாவரங்கள் மக்களை வாழவைக்குந் தெய்வங்கள் என்பதை அவர் உணர்ந்துள்ளார்.

ஒரு கதை ஞாபகத்திற்கு இத்தருணத்தில் நினைவுக்கு வருகின்றது.

ஒரு பெரியவர் தமது தள்ளாத வயதில் ஒரு மாங்கன்றை தனது தோட்டத்தின் ஒரு பக்கத்தில் நாட்டிக் கொண்டிருந்தார். அவரின் பேரன் அவரிடம் "தாத்தா! ஏன் இதை நாட்டுகின்றாய்?" என்று கேட்டான். "மரம் வளர்ந்தால் மாங்கனிகள் கிடைக்கும். அதற்காகத் தான்" என்றார் பெரியவர். சிறுவனோ பெரிதாக சிரித்து "ஏன் தாத்தா! இந்த வயதில் மாங்கன்று நாட்டி அதன் கனியை நீ எப்போது சாப்பிடப் போகிறாய்?" என்று கேட்டான். "இது நான் சாப்பிட அல்ல நீ சாப்பிட" என்றார் பெரியவர். சிறுவனுக்கு வாய் அடைத்துவிட்டது. "என் பேரனே! அன்று என்னுடைய பாட்டனார் தனக்கு மட்டும் மாங்கனி கிடைக்க வேண்டும் என நினைத்திருந்தால் நான் இன்று மாம்பழம் சாப்பிட முடியுமா? அது போன்று நாம் மரம் நாட்டுவது எமக்கல்ல எமது வருங்கால சந்ததியினருக்கு! உனக்காகத் தான் பேரனே நான் மாங்கன்றை நடுகின்றேன்." என்றார் பெரியவர்.

எனவே மரம் நடுகை என்பது வெறும் மரங்களை நாட்டும் ஒரு கைங்கரியமாக எண்ணிவிடாது மனிதர்களை வாழவைக்கும் ஒரு புனித கைங்கரியமாக வருங்காலத்தை வளமுள்ளதாக அமைக்க முன்னெடுக்கப்படும் வலுவான ஒரு நடவடிக்கையாக நாம் கொள்ள வேண்டும். "ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக்கொரு வரம் பெறுவோம்" என்ற எமது 2014ம் ஆண்டிற்குரிய மரம் நடுகை கருப்பொருளுக்கமைவாக எமது வீடுகளில் கட்டாயமாக ஒரு விருட்சம், ஒரு வான் பயிர், மருத்துவ குணாதிசயங்கள் நிறைந்த ஒரு மரம் என அனைத்து வீடுகளிலும் மரங்களை நாட்டி வைப்பதன் மூலம் சுவாசிப்பதற்கேற்ற சுகமான காற்று, சுகாதாரத்துடன் கூடிய இதமான வாழ்க்கை முறை, அமைதியான சுற்றுப்புறச் சூழல் ஆகிய சிறப்புக்களை நாம் உருவாக்குவோம். இவ் விருட்சங்கள் நல்ல நீரைப் பெறுவதற்கு, நல்ல காற்றைப் பெறுவதற்கு, நல்ல சூழலை உருவாக்குவதற்கும் உதவுவன. இந்த மரம் நடுகை மாதத்தில் முடிந்தளவு கூடுதலான மரங்களைத் தனிப்பட்டும் கூட்டாக இணைந்து கொண்டும் நடுகை செய்வோமாக!

நிஜமான சத்திய வாழ்க்கையின் தெய்வீகத்
தடங்கள் பிடிபடாமல் பண வரவு குறித்த மேலோட்டமான
கனவுப் பிரக்ஞையுடன் வாழ்ந்து கழிக்கின்ற நாட்களிடையே வரட்டுத் தத்துவம்
பேசியே உயிர்களைக் கூறு போட்டு மனதை ரணகளமாக்கியே குளிர் காய விரும்பும் நிழல் தின்னும்
அன்பு மகத்துவத்தின் பெருமையிழந்த அற்ப மனக் குரங்குகளாகவே தோற்றம் காட்டி மறைந்து
போகும் மனிதர்களை அவ்வப்போது இனம் கண்டு மனம் வருந்துகின்ற எனது உள்ளியக்கமான
தார்மீக சிந்தனையின் உயிர் வெளிப்பாடாகவே இக் கதையை நான் எழுதினேன்
**- ஆனந்தி-**

# நிழல் தின்னும் மனக் குரங்கு



அகிலனைப் பொறுத்தவரை சுவிஸ் மண்ணோடு அவனின் தடம் பதித்த வாழ்க்கை வேள்வி வெறும் புறம் போக்கான வரட்டுச் சங்கதிகளைக் கொண்ட காசு நிலை பெறுவதற்கு மட்டு மன்று அதையும் தாண்டிப் பெற்ற தந்தையின் கடமை யோகம் தவறிய தடம் புரண்ட போக்கினால் அவன் தோள் மீது விழுந்த மிகப் பெரிய அளவிலான தார்மீகப் பொறுப்புக்களை ஒரு பங்கமும் நேராமல் நிறைவேற்றி வைப்பதற்காகவே அவன் சுவிஸ்ட்லாந்துக்கு வந்து சேர்ந்தான்.

கள்ள விசா எடுத்து அங்கு வருவதற்குக் கூட நிதி நிலைமை இடம் கொடாததால் வேறு வழியின்றிக் கப்பலில் தொழில் புரிந்த மார்க்கமாகவே அவனின் சுவிஸ் கனவு கை கூடியது ஆறு மாதங்களாக அதில் கஷ்டப்பட்டது இன்னும் மறக்கவில்லை யாராவது சொந்தக்காரர் மனம் வைத்திருந்தால் அவன் லண்டனுக்கே வந்து சேர்ந்திருப்பான் அம்மா அதற்காக வட்டிக்குக் கடன் கேட்ட போது சாட்சிக் கையெழுத்துப் போட யாராவது முன் வந்தால் தருவதாக அவர்கள் கூறிய போது அம்மா தன் கையறு நிலைமையை எடுத்துச் சொல்லியும் அது நடக்கவில்லை எல்லோரும் கையை விரித்து விட்டார்கள்.

இருக்கிற காசை வைத்துக் கொண்டு ஒரு கப்பல் பணியாளனாக வந்து சேர்ந்தவன் இடை நடுவில் குதித்துக் கள்ளமாகச் சுவிஸில் இறங்கியது அது ஒரு தனிக் கதை.

சுவிஸ்ட்லாந்து மிகவும் அழகிய நகரம். லண்டனை விடப் பன்மடங்கு அழகு அதை வர்ணிக்க வார்த்தைகள் போதாது அவன் ஒரு நல்ல கவிஞனாக இருந்திருந்தால் அதன் பனிச் சாரல் படிந்து பள பளக்கும் பேரழகை மேலான கவிதை மொழியிலேயே உயிர்ப்பித்துக் காட்டியிருப்பான் அப்படியொரு கவிதை மொழி பேசுகிற அளவுக்கு அவனுக்குத் தமிழும் வராது எனினும் கணக்குப் பாடம் நன்றாக வரும் அப்படியான அறிவுக் கூர்மையும் புத்தித்திறனும் கொண்டவன் அவன் அப்பா மட்டும் தன் கடமையை சரிவரச் செய்திருந்தால் இன்று அவன் கதையே வேறு.

சுவிஸ் வந்த பிறகு ஒரு ரெஸ்ரோரெண்டில் அவனுக்குச் சமையல் வேலை தான். வீட்டில் இருந்த வரைக்கும் ஒரு தேனீர் கூடப் போட

வராது அவனுக்கு. இப்போது தங்கைகளைக் கரை சேர்க்கும் பொருட்டு சுய கௌரவம் விட்டொழிந்த அவனது இந்தத் தியாக வேள்வியின் பலனாக உச்சக் கட்டத் துரித கதியில் இன்றைய நடை முறை வாழ்க்கைப் போக்குக்கு இணையாக அவன் மட்டுமல்ல அவன் குடும்பமும் தலை நிமிர்ந்து ஒளிச் சவாரி செய்வது என்னவோ உண்மை தான் அது மட்டும் தான் வாழ்க்கையென்று நம்பி நிலை சரிகின்ற மந்தப் போக்கையும் தாண்டி எதிலும் பங்கமுற்றுத் தோற்றுப் போகாத ஒழுக்க விழுமியங்களின் நடை பிசகாத பெருமைகளையே தனது வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டு இயங்கி வருகின்ற அவன் பணமொன்றையே பெரிதாக நினைவு கூர்ந்து வாழ்க்கையைக் கழிக்கும் மிகச் சாதாரண மனிதர்களோடு உறவு கொண்டாடும் மனப் போக்கின்றி வேலை நேரம் தவிர்ந்த மிகுதி நேரங்களில் அவனின் பொழுது தனிமையிலேயே கழிந்து போகும் அவனுக்கென்று தனியாக நண்பர்வட்டம் ஏதுமின்றி அவன் கரை ஒதுங்கி இருக்க நேர்ந்ததால் வெள்ளைக்காரனின் கெட்ட பழக்கங்கள் எதுவும் அவனிடம் கிடையாது சிகரெட்டைக் கூட அவன் தொடுவதில்லை.

அவனுக்கு நான்கு தங்கைகள் அவர்களில் மூத்தவளான பூரணிக்குக் கல்யாணம் நடந்த புதிது ஒரு லண்டன் மாப்பிள்ளை தான் அவளுக்கு அதுவும் நிரந்தர விசா கிடைக்காத பையன் என்பதால் சிங்கப்பூரில் வைத்துத் தான் அவர்களின் கல்யாணத்தை முடிக்க வேண்டிய தாயிற்று அகிலனுக்கும் இன்னும் விசா கிடைக்காததால் அவனாலும் போக முடியவில்லை பூரணிக்குத் துணையாக அம்மா மட்டும் தான் போய் வந்தாள் அப்பா ஏனோ இந்தப் பொறுப்பையும் தட்டிக் கழித்து விட்டது அவனுக்குப் பெரும் மனவருத்தத்தை அளித்தது.

அப்படிப் பொறுப்புகளைத் தட்டிக் கழிக்கிற நிலையில் அம்மா என்றுமே இருந்ததில்லை இதற்காக அவள் மனதில் தான் எத்தனை காயங்கள் அவள் இதைப் பற்றி வெளிப்படையாக வாய் திறந்து பேசாவிட்டாலும் அவனுக்குத் தெரியும் எத்தனையோ ரணங்களோடு அவள் சுமக்கின்ற சிலுவையின் வலி அவன் அறியாதது அல்ல.

அச் சிலுவையைப் பிடுங்கி எறிந்து அவளைக் காப்பாற்றி மீட்டெடுத்த சந்தோஷத்தோடு அவன் இருந்த வேளையில் தான் ஒரு எதிர் மறையான விபரீதச் சூழலுக்கு அவன் முகம் கொடுக்க நேர்ந்தது சூரிச்சிலிருந்து தனது மகன் ஒருவனின் பிறந்த நாள் விழாவுக்கு அழைப்பு விடுக்க ஒரு சமயம் கிரி வந்திருந்தான் அவனைக் காண்பதற்கு அவன் ஊரில் வாழ்ந்த காலத்தில் இந்தக் கிரியைப் பணக்காரக் களையில் கொடி கட்டிப் பறக்கும் ஒரு பெரிய மனிதனாகவே கண்ட ஞாபகம் அப்பவெல்லாம் சவூதிப் பணம் தான். சுவிஸ் காசும் அதன் மெருகேறிய மனிதர்களும் பின்னால் வந்த நிழல் தொடரான கதை முடிச்சுக்கள் ஒவ்வொரு நிழலாக முடிச்ச விழ்ந்து வாழ்ந்து மறைவதே இறுதி முடிவு.

இந்தக் கிரி சவூதிப் பணம் போதாதென்று தற்போது சுவிஸ்'க்கு வந்து குடும்பத்தோடு பணக்கடலில் நீச்சலத்து வருவதை எதிர் கொண்டவாறே அவனை மேலோட்டமாக வரவேற்றபடி அகிலன் கேட்டான்.

"வாங்கோ கிரியண்ணை எப்படியிருக்கிறியள்?"

"எனக்கென்ன சோஷல் வேர்க் என்ற பெயரிலை கையிலை காசு புரளுது அதையும் வட்டிக்கு விடுறன் ஊரிலை நாலைஞ்சு காணிகள் வாங்கி விட்டிருக்கிறன் பிரச்சனை தீர்ந்தாலை எக்கச்சக்க விலைக்கு விக்காலாம் தானே"

இதைக் கேட்டு அகிலன் மனம் நொந்தான். எங்கே போனாலும் இந்த வரட்டுப் புத்தி போகாது என்று பட்டது. ஒரு காலத்தில் குடும்பத்தை சுவிஸ்'க்கு எடுப்பதற்காகக் கிரி தன்னி

டம் வட்டியில்லாத கடனாக மூன்று இலட்சம் வாங்கியதே ஒரு கனவு போல் தோன்றியது. இப்போது அவன் இப்படி வட்டிக் காசை விடுவது எந்த விதத்தில் நியாயமாகுமென்று அவனுக்குப் பிடிபட மறுத்தது. இதை எடுத்துச் சொன்னால் அவன் புரிந்து கொள்ளவா போகிறான்? அவன் அப்படியென்றால் மனைவி சுகிர்தம் இன்னும் ஒரு படி மேலே. அவளின் குணங்களை உரசிப் பார்க்க இது ஒரு நல்ல தருணம்.

அதற்குச் சூரிச்சுக்கல்லவா போக வேண்டும். மலை சரிவுகள் தான் வழியெல்லாம்.. ஒரு மணித்தியாலத்திற்கு மேல் பிடிக்கும் போய் வர.. கார் பயணமென்றாலும் மூச்சு வாங்கும்.. இருந்தாலும் கிரியின் முகத்திற்காக மட்டுமே இந்தப் பயணம். அதுவும் நேரில் வந்து அழைத்த பிறகு போகாமல் விடுவது கௌரவக் குறைச்சல்.

பெரிய எடுப்பிலே அந்த பிறந்த நாள் விழா களை கட்டி நிற்கும்.. தங்க முலாம் பூசிய அழைப்பிதழே சொல்கிறது ஒரு ராஜ விழாவாக மண்டபம் முழுக்கக் கலர் கலராக ஒளி பிரகாசித்து அது நிற்குமென்று கூட்டம் வேறு அலை மோதும். குடிக் கச்சேரி கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். அதில் நானும் ஒருவனா? அல்லது வேறானவனா? இல்லை இந்தச் சங்கமிப்புகள் என்ரை புறப்பிரக்ஞையாய் வருகிற நிழல் சங்கதிகள் தான் என்ற தீர்க்கமான முடிவோடு இருக்கிற எனக்குள், இப்படி வரப் போகிற சூழ்நிலைச் சாபம் என்னை ஒன்றும் செய்து விடாது நான் நானாகவே இருப்பேன் இது சத்தியம்.

ஒரு மங்களகரமான வெள்ளிக் கிழமையென்று ஞாபகம் தீட்டுக் குளித்தே பழகிய மனிதர்களுக்குக் கிழமை எதுவாயிருந்தாலென்ன.

பணத்துக்காக எப்படியும் மாறலாமென்ற தளும்பல் நிலை வந்த பின் சத்திய தரிசனமான வாழ்வொழுக்கமென்பது எப்பவோ முடிந்து போன பழங்கதை தான். கிரி தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டாடும் அந்த விழாவிலே தனக்கான வாழ்வியல் சிறப்புகளுடன் அங்கு பிரசன்னமாகித் தான் வந்திருப்பது எவ்வளவு தூரத்துக்கு மிக நெருக்கமான உள்ளார்ந்த பார்வையுடன் எடுபடும் என்பது அகிலனைப் பொறுத்த வரை வெறும் பகற்கனவாகவே தெரிந்தது.

விழாவுக்கு அவன் வரும் போது அலங்கார மேடையில் கேக் வெட்டும் சடங்கு முடிந்து விருந்து களை கட்டி நடப்பதைப் பார்த்து விட்டு வாசலில் நிலை தளர்ந்து அவன் நிற்கும் போது அவனை வரவேற்பதற்காகச் சுகிர்தம் அவசரமாக உள்ளிருந்து ஓடி வந்தாள்.

வேடம் கட்டி ஆடும் ஒரு நிழற் பொம்மை போலப் பணக்காரக்களையினால் மெருகேறிப் பள பளக்கும் டாம்பீக அழகோடு அவள் நிற்பதை வெறும் காட்சி மயக்கமாகவே எதிர் கொண்டு மனம் சலித்து விட்ட நிலையில் ஒன்றும் பேசத் தோன்றாது வாயடைத்து மௌனமாக அவன் நிற்பதைப் பார்த்து விட்டு அவள் குரலை உயர்த்திச் சொன்னாள்.

"வெட்கப்படாமல் உள்ளே வாங்கோ அகில் எல்லாம் எங்கடை ஆட்கள் தான் "

அவள் அப்படிச் சொன்ன போது அவனிடம் நிறையக் கேள்விகள் எழுந்தன. நல்லதொரு வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் உயிர்த் துடிப்புள்ள சத்தியத்தையே மையமாகக் கொண்டு இயங்கும் நடைமுறை வாழ்க்கையின் புனிதங்களே அப்போது நடைபெறுகின்ற அந்த விழாவில் காற்றில் அடிபட்டுக் காணாமல் போயிருப்பது குறித்துத் தன் நெஞ்சில் கொந்தளிக்கின்ற கேள்வி அலைகளின் பலனாக மூச்சு முட்டுகின்ற துயரத்திலே மனம் கனத்துப் போய் அதை வெளிக்காட்ட விரும்பாமல் விளையாட்டாக அவன் கேட்டான் "

"என்ன சொன்னியள்? இதுகள் எங்கடை சனமோ?"

"அகில் இப்ப சண்டை பிடிக்கிற நேரமே? வந்து சாப்பிடுங்கோ பிறகு ஆறுதலாய் நான் இதைப் பற்றி உங்களுக்குக் கதை சொல்லுறன்"

அவள் நெஞ்சை நிமிர்த்திக் கனத்த குரலில் உள் விழிப்பு வராமல் இதைச் சொன்ன போது அவனுக்கு ஏமாற்றமாக இருந்தது. .நான் கேட்டது என்னவோ. இவள் என்ன சொல்லி விட்டுப் போகிறாள்? ஏதோ கதை சொல்லப் போகிறாளாமே!. முதலிலை கை நனைப்பம் . பிறகு இவள் சொல்லுகிற கதையைக் கேப்பம். குளிரிலை பசி வந்தால் பிடுங்கி எடுக்கும். எல் லாம் அசைவ உணவு தான். அங்கு பன்றிக் கறி மாட்டுக் கறி எதுவும் சாப்பிடக் கூடாதென்று அம்மாவின் அன்பு வேண்டுகோள். சைவ உணவு தான் அவளின் பிறவிப் பெருமை. அப்பா அதற்கு விதி விலக்கு. அவர் ஒரு புலால் பிரியன் அவர் பிறந்து வளர்ந்த அந்த மாமிசக் கோட்டைக்குள் அம்மா போய் விழ நேர்ந்தது தான் மிகப் பெரிய கொடுமை. எல்லாம் தலையெ முத்து அப்பாவுக்காக அவள் எவ்வளவோ இழந் திருகிறாள் சுத்தம் பாராது இரத்தம் ஒழுக ஒழுக மீன் வெட்டிச் சமைக்க நேர்ந்தது எதைச் சாதித்துப் பெற?

குடிக் கச்சேரி ஒரு பக்கம். கிரியும் நிறை யக் குடித்திருக்க வேண்டும். அந்தப் பக்கத்தி லிருந்து தள்ளாடியபடி அவன் வருவது நிழற் படமாகக் கண்ணை உறுத்திற்று

அந்த நிழற்படலம் நீங்காத நிலையி லேயே அவன் சாப்பிடும் போது அருகே வந்து நின்று சுகிர்தம் முகத்தில் சிரிப்பு வழியக் கேட்டாள்

"என்ன அகில் சிங்கப்பூரிலை உங்கடை தங்கைச்சி பூரணிக்குக் கல்யாணம் முடிஞ்சு தெண்டு கேள்விப்பட்டனான். கொம்மாதான் கூடப் போனவா என்றும் அறிஞ்சன்.. கையிலை பிடிச்சுக் குழந்தை மாதிரி ஆர் அவவைக் கூட்டிக் கொண்டு போனது?

அம்மாவைப் பற்றி சுகிர்தம் அப்போது கேட்ட அந்தக் கேள்வியின் சாரத்தை மிகப் பாரதூரமான ஒரு தார்மீகக் குற்றமாக உள் வாங்கி உணர்ந்து மன வருத்தம் கொண்ட அவன், கொஞ்சமும் முன் யோசனையின்றி அம்மாவின் எதிலும் நிலை குலையாத ஆன்மீக பலமான புனித செயற்பாடுகளையே கொச்சை படுத்துகிற மாதிரி அவளைச் சந்திக்கு இழுத்துக் கேவலப்படுத்துவதற்கென்றே சுகிர்தம் வாய் திறந்து கேட்டு விட்ட அக் கேள்விக் கணையின் ரணத்தை மனதில் வலியுடன் சுமந்தவாறே பாதி உண்ட நிலையில் மேலே சாப்பிட மனம் வராமல், அவளை நிமிர்ந்து பார்த்துக் கண்கள் கலங்கியவாறே உணர்ச்சி சூடு பறக்கக் கேட்டான் அவன்

"போதும் நிறுத்துங்கோ சுகிர்தமக்கா என்ன கேட்டியள்? அம்மா குழந்தை மாதிரி என்று உங்களுக்கு ஆர் சொன்னது?"

"ஏன் நான் கேட்டதிலை என்ன பிழை யென்று சொல்லும். நான் வாயை மூடுறன். எனக்கென்ன தெரியும்? ஊரிலை எல்லோரும் கதைச்சததைத் தானே இப்ப எனக்குக் கேட்கத் தோன்றியது "

"அப்படிக் கதைச்சதாலை அதுவே உண் மையாகி விடுமா? எங்கடை சனங்கள் நாக்கிலை நரம்பில்லாமல் எவ்வளோ கதைப்பி னம். ஊரிலை வாத்தியாரின் பெண் பிள்ளை களுக்குச் செய்காரியம் ஒன்றும் தெரியாது பால் குடி பபாக்கள் என்று. அங்கை கதைச்சதைக் கேட்டு வைச்சுக் கொண்டு தானே பெரிசாய் அம்மாவைப் பற்றி இப்படியொரு அபத்தக் கதை எனக்குச் சொல்ல வந்திட்டியள். அப்பா என்ற கையாலாகாத மனிசனை வைத்துக் கொண்டு எங்களைப் பெற்றுப் போட்ட பாவத்துக்காக எங் களை வளர்த்து ஆளாக்குறதுக்காக அவ எப்படி யெல்லாமோ தீக்குளிச்சுப் பட்ட காயங்களை அறியாமல் மனம் போன போக்கிலே பேசி விட்ட உங்களை மட்டுமல்ல அப்படியிருக்கிற ஆரை

யும் அவ்வளவு எளிதில் மன்னித்து ஏற்றுக் கொள்கிற நிலையிலை நான் இல்லை இப்படிப் பாவங்களுகே பழக்கப்பட்டிருந்தாலும் வேஷத் தைக் காட்டி மயக்குகிற புத்தி இருக்கும் வரை மனிதரை வார்த்தைகளாலை கொன்று போடு கிற தீட்டுச் சங்கதிகள் மறைந்து தான் போகும் இங்கு இருக்கவே எனக்குப் பிடிக்கேலை. நான் போயிட்டு வாறன்"

பெற்ற தாயையே சந்திக்கு இழுத்துக் கேவலப்படுத்திவிட்ட தர்மாவேசத்தினால் மனம் திறந்து அவன் கூறிய நியாய வார்த்தைகளின் உக்கிரம் தாங்க முடியாமல் விருந்தினர்களை வரவேற்கும் தோரணையில் முகமூடி தரித்து ஓடும் ஒரு கொலையாளி போல் சத்திய தரிசன மாக எரித்தே கொன்று போடும் ஒரு சூரியனாய் அவதாரமெடுத்துப் பேசித்தீர்த்து விட்ட அவன் முகத்தில் விழிக்கவே பின் வாங்கி அஞ்சி ஓடுகிற கணக்கில் அந்தத் தரங்கெட்ட சுகிர்தத்தின் நிலையிருந்தது. அவன் போக எழுந்த போதோ அல்லது அதற்குச் சற்று முன்னதாகவோ அவள் இடத்தைக் காலி செய்து விட்டுப் போய் மறைந்த காலடித் தடங்களை மட்டுமே கண்களுக்கு வெளிச்சமாகக் கண்டு மனம் நொந்த வலி மாறாமலே அவனும் போக எழுந்தான் இப்படி யொரு சம்பவ அனர்த்தம் அதனோடு தொடர்பான சுகிர்தம் கூறி விட்ட அம்மாவைப் பற்றிய மிகவும் அபத்தமான வார்த்தைப் புனிதம் இழந்த பழிச் சொல் இன்று தோன்றி மறைந்து விட்ட வெறும் கனவாகத் தன்னுடனேயே புரையோடி மறைந்து போக வேண்டுமென்பதே இப்போதைய அவனின் மனம் சிலிர்க்கும் பிராத்தனையாக இருந்தது. ஊரிலிருக்கும் அம்மா இதை அறிந்தால் மீண்டும் ஒருமுறை அவள் தன்னைத் தானே பரீட்சித்துத் தீக்குளிக்க நேரிடும் காரிய சாதனைகள் புரிந்தும் கர்ம போகம் ஆற்றியும் வாழ்வின் சிகரத்துக்கே போய் ஒளிர்ந்து பிரகாசிக் கும் உயிர்த் தீபமான என்ரை அம்மாவைப் பற்றி இவ்வளவு மட்டமான கருத்துச் சிதைவா சுகிர்தத்தின் பார்வையில் ? இதைச் சரி செய்து அவளுக்கு ஏற்பட்ட பார்வைக் கோளாறிலிருந்து அம்மாவை விடுவித்து அவ நிஜத்தை சாட்சி கொண்டு நிரூபிக்க வேண்டிய தார்மீகப் பொறுப்புக் காரணமாகவே உள்ளேயும் வெளி யேயும் தீப்பற்றி எரிகிற மாதிரி எனக்குள்ளே கருகி ஒழிந்து விட்ட நிலையில் இதைப் பகிரங்கப்படுத்தி அம்மாவுக்குக் கூறினால் என்ன வாகும்? இதற்காகவே அவவும் தீக்குளித்து மறுபடியும் தன்னைப் பரீட்சித்துப் பார்க்கத் தொடங்கினால் அது இன்னும் கொடுமை"

அதிலிருந்து அவளைக் காப்பாற்றியாக வேண்டிய மிகவும் பொறுப்பு வாய்ந்த கடமை யோகம் கருதியே அவனுள் கனன்று எரியும் இந்த மௌனத்தீ அது ஒரு கவசமாகத் தான் உள்ளே தீப்பற்றி எரிந்து போனாலும் நிச்சயம் அம்மாவைக் காப்பாற்றும் என்று அவனுக்கு நம்பிக்கை வந்தது அந்த உயிர்த்துவமான நம்பிக்கை ஒளியிலேயே வாழ்க்கை இன்னும் இயங்கி கொண்டிருப்பதாக அவன் மிகவும் பெருந்தன்மையுடன் நினைவு கூர்ந்தான்



## நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

'தாயக ஒலி' யின் வாசகர்களுக்கு நத்தார் புதுவருட வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். பிறக்கப்போகும் புதுவருடம் எல்லோருக்கும் சாந்தியையும் சமாதானத்தையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்பதே எமது வேண்டுதலாகும்.

**- ஆசிரியர்குழு -**

# விசேட தேவைக் கல்வியும் சாலமன்கா (Salamanca) உலக மாநாட்டு அறிக்கையும்

அட்டாளைச்சேனை மன்சூர்

"அனைத்துப் பிள்ளைகளுக்கும் சமனான உள்ளடங்கல் கல்வி வழங்குவதற்கு அடிப்படைகல்விக் கொள்கையில் ஏற்படுத்த வேண்டிய மாற்றம்" எனும் தலைப்பில் 1994இல் நடைபெற்ற சாலமன்கா உலக மாநாட்டில் விசேட தேவைசார் கல்வி பற்றி முன்வைக்கப்பட்டது. அதாவது பாடசாலைகள் அனைத்துக் குழந்தைகளையும் பாதுகாக்க வேண்டும். குறிப்பாக விசேட தேவைகள்சார் கல்வி தேவைப்படும் குழந்தைகள், மேல் கரிசனையுடன் செயல்ப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

### Salamanca அறிக்கையில் வலியுறுத்தப்பட்ட விடயங்கள் :

- அனைத்து சிறுவர்களுக்கும் கல்வி ஒரு அடிப்படை உரிமையாகும். எனவே ஒவ்வொருவருக்கும் கட்டாயக்கல்வி அவசியம் என்பதுடன் அவர்களுக்கு கற்றலுக்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.
- ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமான நடத்தைகள், விருப்பங்கள், இயல்புகள் மற்றும் கல்வித் தேவைகளைக் கொண்டுள்ளனர்.
- மேற்படி மாறுபட்ட பண்புகளுக்கும், தேவைப்பாடுகளுக்கும் ஏற்ற வகையில் கல்வித் திட்டங்கள் அமைக்கப்படல் வேண்டும்.
- விசேட கல்வித் தேவைகள் உடைய பிள்ளைகளின் தேவைகள் வழக்கமான பாடசாலை முறை மைகளினூடாகவே நிவர்த்தி செய்யப்படல் வேண்டும்.
- அனைத்து மாணவர்களுக்கும் பாடசாலைகள் பயனுள்ள கல்வியை வழங்குவதுடன் கற்றலை செயல்திறன் மிக்கதாகவும் மற்றும் செலவு குறைந்ததாகவும் மேம்படுத்த வேண்டும்

### Salamanca அறிக்கை ஒவ்வொரு நாட்டு அரசுகளிடமிருந்து எதிர்பார்ப்பவை :

- தனிமனித வேறுபாடின்றி சகல சிறுவர்களுக்கும் உயர்ந்த நோக்கங்களைக் கொண்ட கல்வியை வழங்க வேண்டும் என வலியுறுத்துகின்றது.
- சட்டம் அல்லது கொள்கைக்கு ஏற்ப உள்ளடங்கல் கல்விக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும்
- விசேட தேவையுள்ள மாணவர்களது கல்வியை மையப்படுத்தி செயற்திட்டங்களை விருத்தி செய்ய வேண்டும்
- செயற்திட்டங்களை வழங்கி அவற்றை ஏனைய நாடுகளில் இயங்கும் பாடசாலைகளுடன் பரிமாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்.
- சிறுவர்கள் மற்றும் வளந்தோர்களுக்கான கல்வி வழங்குதல்களைத் திட்டமிட, கண்காணிக்க மற்றும் மதிப்பீடு செய்யப் பொருத்தமான வழிமுறைகளை ஏற்படுத்த வேண்டும்.

- விசேட கல்வித் தேவைகளுக்கு திட்டமிட்டு முடிவுரைகளை மேற்கொள்ளும் போது குறைபாடு உள்ள சமூகம் மற்றும் மாணவர், பெற்றோர்கள் மற்றும் அமைப்புக்கள் பங்கு ஊக்குவிக்கப்பட வேண்டும்.
- பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான கல்வித்திட்டங்கள், விசேட பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டு முறைசார் மாற்றம் ஒன்று ஏற்படுத்த வேண்டும்.

**அம்மாநாட்டில் UNESCO விடம் முன்வைத்த விடயங்கள் வருமாறு :**

- சகலருக்குமான கல்வியில் விசேட தேவைகள் கல்விக்கான முக்கியத்துவம் நிச்சயப்படுத்தப்படல் வேண்டும்.
- ஆசிரியர் அமைப்புகள் போன்றவற்றில் இருந்து ஆதரவினைப் பெறுவதன் ஊடாக ஆசிரியர் கல்வி அபிவிருத்தியை மேம்படுத்தல் வேண்டும்.
- உள்ளார்ந்த கல்விச் செயல்பாடுகளில் அதிக ஆராய்ச்சிகளில் ஈடுபட கல்விச் சமூகத்தினை தூண்டல்
- ஐந்து ஆண்டுகளுக்கான நிதியினை பாடசாலைகளின் நிகழ்ச்சித் திட்டத்திற்கும், சமூக ஆதரவு செயற்றிட்டங்களுக்கும் பயன்படுத்தி முன்னோடிச் செயற்றிட்டங்களை அமைக்க உதவி செய்ய வேண்டும் என்கிற விடயங்களும் அங்கு எதிர்பார்க்கப்படுவதாக வலியுறுத்தப்பட்டன.

**இலங்கையில் விசேட கல்வி :**

இலங்கையின் மக்கள் தொகையில் நூற்றுக்குப் பத்துப்போர் விசேட தேவையுடைய பிள்ளைகளாக அடையாளங் காணப்பட்டுள்ளனர். இத்தொகையானது கடந்த கால யுத்தத்திற்கு முன்னரான காலப்பகுதியில் கண்டறியப்பட்ட ஆய்வாகும். இப்போது அதன் வலிமை அதிகமானதாகவே காணப்படும். எனவே இலங்கையில் காணப்படுகின்ற பாடசாலைகளில் இந்நிலைமைக்குள் உள்ளாக்கப்பட்ட மாணவர்கள் கல்வியை மேற்கொள்ள விரும்புகின்றனர். ஆசிரியர் விசேட உதவி தேவை என்கிற காரணத்தை உணர்ந்து அவர்களும் மாணவர்களே என்கிற நிலைமையை உணர்த்து அனைவரும் கல்வி என்கிற நகர்வினை நோக்கிய கல்வியை வழங்கவும், உடலியல் மனோநிலையால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு விசேடமான முறையில் அனைத்துப் பிள்ளைகளையும் சரி சமமானவர்களாக உணர்ந்து கல்வியை வழங்க வேண்டிய பாரியபொறுப்பு கல்விச் சமூகத்திற்கும் அதாவது பாடசாலையில் கற்பிக்கின்ற அதாவது மாணவர்களை வழிப்படுத்துகின்ற ஆசிரியர்களின் கடமையாகும். இதனையே இன்று கல்விப்புலம் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இலங்கையைப் பொறுத்தளவில் நாட்டின் நாலா பாகங்களிலும் பல்வேறு தேவைகளையுடைய மாணவர்களுக்கான விசேட பள்ளிக்கூடங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் உதவிகொண்டு சகல பிள்ளைகளும் தங்களுடைய வாழ்வின் எதிர்காலத்தைச் சரியான முறையில் கொண்டு செல்லக்கூடிய வகையில் திட்டமிட்டு அவர்களுக்கும் கல்வியை வழங்கக்கூடிய ஆசிரியத்துவத்தை உணர்ந்து கொண்ட ஆசிரிய வாண்மையாளர்களும், பாடசாலைகளும், சமூகமும் உணர்ந்து கல்வியை வழங்க வேண்டுமென்பதே எமது அவா. அதனைச் சீர்படுத்த வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு என்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

# அப்போதே தமிழ் மொழி செம்மொழிதான்

பூவேந்திக் கலைமகளை நாட்காலம்
பூசித்துப் பாடும் பொன் மொழி
நாவேந்தர்கள் - நல்லாசான்கள்
நாளும் நனி நேசிக்கும் நன்மொழி
மூவேந்தர்க ளாட்சியில் அரசு மொழி
முச்சங்கம் வைத்தாய்ந்த மொழி
பாவேந்தர்கள் - ஆன்ற பேரறிஞர்கள்
பாதுகாத் தெடுத்த தாய் மொழி

மொழிகளில் மூத்த மொழி தமிழ் மொழி
முக்கனிச் சுவைதனைத் தரும் மொழி
மொழிகளில் சொற்பஞ்ச மில்லா மொழி
முழுமையில் செழுந்தும் வெள்ளமொழி
மொழிகளில் தனிமரபைக் கொண்ட மொழி
முற்காலமே செல்வாக்கைக் கண்டமொழி
மொழிகளில் நூலதிகம் தந்த மொழி,
மாட்சிக்கு மருமைக்கும் சொந்த மொழி.

எத்தனையோமொழிகள் ஏறுதலையடைய
எஞ்ஞான்றும் ஒத்திசைவா யுள்ளமொழி
எத்தனையோ சொற்களைக் கொடையாக
ஈந்தபெரும் பரோபகார மொழி
அத்தனை மொழிகளுக்கும் அண்டத்தில்
ஆணிவேராயமைந்திட்ட மூத்த மொழி
எத்துகத்தோரழித்த பொழுதிலும்
எல்லோனாய்ப் பிரகாசிக்கும் மொழி

சேர்ந்த மொழிகள் பதின்நான்கைச்
செப்பமாய் மொழிபெயர்த் தெடுக்கவும்
வார்த்தைகள் சிலதுக் கேற்றதான
வாகுசொல் லெந்தமொழியிலிருப்பினும்
அர்த்தம் சேர்தனிச் சொல்லாயின்
அந்தச் சொல்லைத் தேர்ந்து
பார்த்து உபயோகப்படுத்துவது
பற்றி முடிவொன்றினை யெடுக்கவும்.
இந்திய மத்திய அரசு புது
டில்லியில் சிறப்புக் கூட்டத்தைச்
செந்திறத்தோரை யழைத்து நடத்தச்
செவ்வை யேற்பாடு செய்திருந்தது
சுந்தரத் தமிழ் மொழி சார்பில்
ரா.பி.சேதுப்பிள்ளையவர்கள்
செந்தமிழுக மிருந்து போயிருந்தார்.
சீராகக் கூட்டம் நடைபெற்றது.

அங்கே 'Custom', 'Tax'
'Assessment, 'Duty' என்ற
ஆங்கில வார்த்தைகளுக் கிணையான
அழகான தனிச் சொற்களுக்காக
அங்கி யெழும் விவாதம் நடந்தது
இந்தி மொழியில் 'சூர்க்கா' வென்று
சங்கைக்கா யொருசொல் மட்டுமே
சொன்னாங்க, நாலுவார்த்தைகளுக்கும்

மற்ற மொழிக் காரர்களிடமிருந்து
மௌனமொழி மாத்திரமே கிடைத்தது
ஏற்றநற் சொற்களை யாருமங்கே
எதிர்பார்த்தளவு சொல்லவில்லை.
ஈற்றில் கூட்டத் தலைவர்
ரா.பி.சேதுப்பிள்ளை யவர்களை
உற்றுப் பார்த்தபடி "தமிழில்
இருந்தால் சொல்லுங்கள்!" என்றார்.

மங்காத் தமிழ் மொழி வாழ்த்தி
மணிமகுடம் சூடச் சென்ற
தங்கத் தமிழ்ப் பேராசிரியர்
தயக்கமேதுமின்றி உடனந்த
ஆங்கில வார்த்தைகள் நான்கிற்கும்
அமைவான வார்த்தைகளாகச்
சுங்கம், கடமை, தீர்வை
வரி யென்று வடிவாகச் சொன்னார்.

இப்போது நடந்த நிகழ்வல்ல
இது கடந்த நூற்றாண்டில் நடந்தது
அப்போதே தமிழ் மொழி 'செம்மொழி'தான்
என்பதைச் சொட்டாய் உறுதியாச்சி...!
எப்போவோ அதிகார பூர்வமாக
அறிவிக்க வேண்டிய விடயமிது
இப்போதுதானிதற்கான நேரகாலம்
இயைந்து வர விரும்பின போலும்

**கலைக்கொழுந்தன்**
**கல்முனை**

# எல்லாரும் முட்டாள்கள்

ஒரு கிராமத்தில், மலைக் குன்றுக்குப் பக்கத்தில் ஓர் அடர்ந்த காடு இருந்தது. அந்தக் காட்டில் பெரிய விழுதுகள் கொண்ட ஆல மரம் ஒன்றும் இருந்தது. அந்த ஆலமரத்தில் பல பறவைகள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தன. எல்லாப் பறவைகளும் பகலில் இரை தேடச் செல்லும். இரவு ஆனதும் அம் மரத்தை வந்தடையும்.


ஒரு நாள் எல்லாப் பறவைகளும் இரை தேடச் சென்றன. ஆனால் ஒரு பெரிய பறவை மட்டும் உடல் நல இன்மையால் இரை தேடச் செல்லாது அந்த மரத்திலேயே தங்கியிருந்தது.

அவ்வேளை, வேடன் ஒருவன் அந்தக் காட்டில் வேட்டையாட வந்தான். காட்டில் அலைந்து திரிந்தான். ஒரு மிருகமும் அவன் கண்ணில் அகப்படவில்லை. களைப்படைந்த அவன் அந்தப் பெரிய மரத்தின் கீழ் இளைப்பாறினான். களைப்பின் காரணத்தால் சற்று நேரத்தில் உறங்கிவிட்டான். உறக்கம் தெளிந்ததும் மீண்டும் வேட்டையாடப் போகலாம் என்று நினைத்து எழுந்தான். அப்பொழுது அவனுக்குப் பக்கத்தில் பறவையின் எச்சம் விழுந்தது. அந்த எச்சம் சில நொடியில் பொன்னிறமாக மாறியது. இதைப் பார்த்த வேடன் அதிசயமாக இருக்கிறதே என்று மேலே அண்ணாந்து பார்த்தான்.

மரத்தில் ஒரு பறவை இருப்பதைக் கண்டான். அந்தப் பறவை அதிசயமான பறவை யாக இருக்க வேண்டும் என்று நினைத்தான். எனவே எப்படியாவது இந்தப் பறவையை பிடிக்க வேண்டும் என்று கீழே தானியங்களைப் போட்டு வலையை விரித்துவிட்டு மரத்துக்குப் பின்னால் ஒளிந்து கொண்டான். கீழே தானியம் இருப்பதைக் கண்ட பறவை தானியத்தைத் திண்பதற்காக வந்து வலையில் சிக்கிக்கொண்டது. உடனே வேடன் அந்தப் பறவையை பிடித்துக் கூட்டில் அடைத்துக் கொண்டான். அந்தப் பறவையை வீட்டிற்கு கொண்டு போனான்.

அன்றிரவு அந்தப் பறவை பேசியது. "வேடனே! நீ! அரசனின் கோபத்திற்கு ஆளாகப் போகிறாய் காரணம் எந்த அதிசயப் பொருள் கிடைத்தாலும் அது அரசனுக்குச் சொந்தம். நான் அதிசயப் பறவை என்று நீ என்னைக் கொண்டு வந்தது மக்களுக்குத் தெரியவந்தால் இச் செய்தி அரசனையும் சென்றடையும் என்றது.

இதைச் செவிமடுத்த வேடன் காலையில் முதல் வேலையாக அந்தப் பறவையைக் கொண்டு போய் அதன் குணாதிசயங்களைக் கூறி அதனை அரசனிடம் ஒப்படைத்தான். அரசன் மகிழ்ச்சியுடன் அதனை ஏற்றுக்கொண்டான்.



இதனை அவதானித்த மந்திரி 'அரசே! இப்படிப்பட்ட பறவையை நாம் வைத்திருந்தால் நாட்டுக்குக் கேடு விளையும். எனவே கூட்டைத் திறந்துவிடுங்கள்" என்று ஆலோசனை கூறினார். கேடு என்றால் இதனை வைத்திருப்பது கூடாது என அரசனும் உடனே கூட்டைத் திறந்து விட்டான்.

பறவை பறந்து சென்றது. அப்போது அது கூறியது நான் அதிசயப் பறவை என்று நம்பிய வேடன் ஒரு முட்டாள். வேடனின் கதையை நம்பிய அரசன் ஒரு முட்டாள். அதை நம்பிய மந்திரி ஒரு முட்டாள். மொத் தத்தில் இவர்கள் எல்லோரும் அறிவாளிகள் என்று நான் நம்பினேனே. எனவே நானும் ஒரு முட்டாள் என்று மனதில் கூறிக்கொண்டு பறவை பறந்து போயிற்று.

**- கலைச்செல்வி**

# சிறுவர் இலக்கியப் பரப்பில் பாரதியாரின் பங்களிப்பு

கலாபூஷணம் தம்பு சிவசுப்பிரமணியம்

நவயுக புரட்சிக் கவிஞன் பாரதியின் 'பாப்பாப் பாட்டு' தமிழ் குழந்தைகளை பெரிதும் ஈர்த்திருந்தமையானது அப்பாடலின் சிறப்பை உணர்த்தி நிற்கின்ற செய்தியாகும். பாப்பாப்பாட்டு மட்டுமல்லாமல், அவர் எழுதிய நவதந்திரக் கதைகள், வேடிக்கைக் கதைகளைப் படிக்கும்போது அவர் ஒரு 'குழந்தை இலக்கியவாதி' என்பதை அறிந்துகொள்ள முடியும். குழந்தைகளின் அறிவு வளர்ச்சி, மனவளர்ச்சிக்கு உதவக்கூடிய வகையில் அவருடைய படைப்புக்கள் அமைந்திருக்கின்றன. 'கூடி விளையாடு பாப்பா' என்று ஒற்றுமையையும், 'குழந்தையை வையாதே' என்று அன்பையும், 'தேம்பி அழும் குழந்தை நொண்டி - நீ திடம் கொண்டு பேராடு பாப்பா' என்று போராட்ட உணர்வையும் போதிக்கும் வகையில் அமைந்த பாரதியின் குழந்தைக் கவிதைகள் அர்த்தமுள்ள ஆக்கங்களாகும்.

பாரதியின் 'ஓடிவிளையாடு பாப்பா' பாடல்தான் குழந்தைப் பாடல்களுக்குச் சிகரமாக அமைந்திருக்கின்றது. 'ஊருக்கு நல்லது சொல்லும்' முரசுப்பாட்டு குழந்தைகளுக்கு நல்லதையே உணர்த்துகின்றது. ஔவையாரின் ஆத்திசூடிக்கு நிகராகப் பாரதியின் புதிய ஆத்திசூடியும் குழந்தைகளின் சொத்தாகி விட்டதை யாவரும் ஏற்றுக் கொள்வார்கள். அமரத்துவம் வாய்ந்த பஞ்ச தந்திரக் கதைகள் குழந்தைகளுக்கு நீதி சொல்லும் இலக்கியமாகும்.

*"காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு*
*கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு*
*மாலை முழுதும் விளையாட்டு - என்று*
*வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா"*

இப்பாடலிலே அறிவையூட்டும் கல்வியையும் மனமகிழ்ச்சியையூட்டும் பாடல்களைப் படிப்பதையும் மாலை நேரங்களில் தேக ஆரோக்கியத்தைக் கொடுக்கக் கூடிய விளையாட்டையும் 'வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா' என்கிறார்.

'சின்னஞ் சிறுகுருவி', 'வன்னப்பறவை', 'கோழி', 'காக்காய்', 'பசு', 'நாய்', 'குதிரை', 'மாடு', 'ஆடு' என்பவற்றைத் தமது பாப்பாப் பாட்டு வாயிலாகக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்திய பாரதியார் அவற்றின் மேல் அன்பு காட்ட வேண்டும் என்பதையும் சொல்லி வைத்துள்ளார். குழந்தைகள் மனதில் நல்ல விதைகளைப் பாடல்களால் விதைத்துள்ளார்.

*மேலும் "பொய்சொல்லக் கூடாது பாப்பா - என்றும்*
*புறஞ் சொல்ல லாகாது பாப்பா"*

*"பாதகஞ் செய்பவரைக் கண்டால் - நாம்*
*பயங்கொள்ள லாகாது பாப்பா"*

*"துன்பம் நெருங்கிவந்த போதும் - நாம்*
*சோர்ந்துவிட லாகாது பாப்பா"*

என்று குழந்தைகள் உள்ளத்தில் நல்ல படிப்பினைகளை ஊட்டுவதன் மூலம் சிறப்பான கருத்துக்களை முன் வைத்துள்ளார்.

'முரசு' என்ற கவிதையிலே...

*"ஒற்றைக் குடும்பந் தனிலே - பொருள்*
*ஓங்க வளர்ப்பவன் தந்தை!*
*மற்றைக் கருமங்கள் செய்தே - மனை*
*வாழ்ந்திடச் செய்பவள் அன்னை!"*

தந்தையர் அன்னையர் கடமைகள் பற்றி குழந்தைகள் தெரிந்திட வைத்துள்ளார். மேலும் 'சாதிக் கொடுமைகள் வேண்டாம் - அன்பு தன்னில் செழித்திடும் வையம்! என்றும் கூறி நல்ல சிந்தனையை உருவாக்கியுள்ளார்.

*"அன்பென்று கொட்டு முரசே! மக்கள்*
*அத்தனை பேரும் நிகராம்!*
*இன்பங்கள் யாவும் பெருகும் - இங்கு*
*யாவரும் ஒன்றென்று கொண்டால்!*

பாரதியார் குழந்தைகள் மனத்தில் 'புதிய ஆத்திசூடி' மூலம் வளமான கருத்துக்களை முன் வைத்துள்ளார்.

'அச்சம் தவிர்', 'ஆண்மை தவறேல்', 'உடலினை உறுதி செய்', 'கற்றது ஒழுகு', 'செய்வது துணிந்து செய்', 'தீயோர்க்கு அஞ்சேல்', 'தோல்வியில் கலங்கேல்', 'நினைப்பது முடியும்', 'புதியன விரும்பு', 'பேய்களுக்கு அஞ்சேல்', 'யாவரையும் மதித்து வாழ்' போன்ற குழந்தைகளுக்குத் தேவையான நல்ல அறிவுரைகளை இயம்பியுள்ளார்.

'நாட்டு வணக்கம்' என்ற பாடலும் குழந்தைகளுக்காகவே இயற்றப்பட்டுள்ளது.

*"இன்னுயிர் தந்தெமை ஈன்று வளர்த்து, அருள்*
*ஈந்ததும் இந்நாடே - எங்கள்*
*அன்னையர் தோன்றி மழலைகள் கூறி*
*அறிந்ததும் இந்நாடே!"*

என்ற கூறியவர் "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே!" என்கிறார்.

பாரதியாரின் கவிதைகள் பெரும்பாலும் இளம் சமுதாயத்தினரை நோக்கியதாகவே குறிப்பாகக் குழந்தைகளை மனதில் கொண்டு பாடப்பட்டவையாகவே அமைந்திருக்கின்றன. காரணம் அவர் வாழ்ந்தகாலச் சமுதாயம் அடிமைப்பட்டு ஒடுக்கப்பட்டு பயப்பிரமையுடன் இருந்திருக்கின்றது. அவர்களுக்கு எதைச் சொன்னாலும் தெளிவு ஏற்படாது எனக்கண்டு சொல்லவந்த எண்ணங்களை குழந்தைகள் மனதில் பதியவைக்க எண்ணினார். அதன் பிரதிபலிப்பே குழந்தைப் பாடல்களின் வரவாகும்.

நாட்டுப்பற்றை ஊட்ட வேண்டும் என்ற நோக்கில் பாரததேசம் என்னும் கவிதையில் நாட்டின் பெருமையினையும் முன்னெடுக்க வேண்டிய கடமைகளையும் எடுத்தியம்பியுள்ளார்.

*"வெள்ளிப் பனிமலையின் மீதுலவு வோம் :அடி*
*மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்*
*பள்ளித் தலமனைத்தும் கோயில்செய்குவோம்; எங்கள்*
*பாரத தேசமென்று தோள்கொட்டுவோம்."*

*"ஆயுதம்செய் வோம் நல்ல காகிதம் செய்வோம்*
*ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்*
*ஓயுதல்செய் யோம் தலை சாயுதல்செய் யோம்*
*உண்மைகள் சொல் வோம்பல வண்மைகள் செய்வோம்"*

என்று நாடு முன்னேடுக்க வேண்டிய செயற்பாடுகளை முன்வைக்கிறார். குழுந்தைகள் மனத்தில் ஆணித்தரமான கருத்துக்களை ஊட்ட முனைந்துள்ளளர்.

"தாயின் மணிக்கொடி பாரீர்!" என்ற கவிதையில் பாரத நாட்டுக் கொடியினைப் புகழ்ந்து கூறியுள்ளார்.

*'கம்பத்தின் கீழ் நிற்றல் காணீர் - எங்கும்*
*காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்*
*நம்பற் குரியவர் அவ்வீரர் - தங்கள்*
*நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பார்!"*

"தமது தாய்நாட்டின் தேசியக்கொடி என்றும் பட்டொளி வீசி பறந்துகொண்டே இருக்க வேண்டும். அதற்காக எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்க வேண்டும்" என்று பாரதியார் வருங்கால சமுதாயத்தை நோக்கி முன்னிறுத்துகின்றார்.

கல்வி என்பது மனித சமுதாயத்தை மேம்படுத்தும் கருவி. வாழ்க்கையை நெறிப்படுத்திச் சிறந்த இலக்கை அடைய வழிவகுக்கும் சட்டம். கல்வி தனிமனித வாழ்வுக்கும் குடும்ப வாழ்வுக்கும் சமுதாய வாழ்வுக்கும் ஏற்றம் தரத்தக்கதாகும். இத்தகைய முக்கியத்துவம் மிக்க கல்வி பற்றிய சிந்தனைகளை பாரதியாரும் முன்வைத்துள்ளார்.

"மனிதன் மனிதனாக வாழ வேண்டுமானால் கல்வி மிக இன்றியமையாத ஒன்றாகும். சமுதாயத்திற்குப் பயனுள்ள மனிதர்களை உருவாக்குவதே கல்வியின் நோக்கமாகும். அடிப்படைக் கல்வியை ஒவ்வொரு குடும்பத்தினரும் பெற்றால்த்தான் தேசம் நல்வழிப்படும்" என்று கூறும் பாரதி குடும்பக் கல்வியே தேசக் கல்விக்கு அடிப்படை என்கிறார். கல்வியை அவரவர் தாய் மொழியில் கற்றாத்தான் அக்கல்வி மாணவர்களைச் சென்றடையும். தாய்மொழிக் கல்வியே சிறந்தது என்றும், அதன் மூலம் கற்பதே எளிது என்றும் ஆய்வுகளை மேற்கொண்டு வெற்றி பெறுவதற்கு இக்கல்வி முறைதான் உகந்தது என்றும் வலியுறுத்துகின்றார்.

*"வீடுதோறும் கலையின் விளக்கம்*
*வீதிதோறும் இரண்டொரு பள்ளி*
*நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்*
*நகர்களெங்கும் பலப்பல பள்ளி"*

இப்பாடலின் வாயிலாகக் கல்வியின் தேவையை வலியுறுத்தி ஊர்தோறும். வீதிதோறும் பள்ளிகளை நிறுவவேண்டும் என்கிறார்.

மூட நம்பிக்கைகள் மலிந்திருந்த நிலையை மாற்றிமைக்கும் பொருட்டுக் குழந்தைகளுக்குப் பூமிப்படங்கள், கோளங்கள், வர்ணப்படங்கள் முதலியவற்றை உபயோகப்படுத்தி கண்டங்கள் பற்றியும் அவற்றிலுள்ள முக்கிய தேசங்கள் அவற்றின் ஜனத்தொகை, நாட்டின் நிலை, வியாபாரம், முக்கியமான விளையாட்டுக்கள், முக்கியமான கைத்தொழில்கள் இவற்றைக் குறித்து விளக்கிக் கூறி மாணவர்கள் அறிந்து கொள்ளச் செய்ய வேண்டும். சிறப்பு வாய்ந்த சிறப்புத் தொழில்கள், கோயில்கள் பற்றிய அறிவினையும் அவர்களுக்கு வழங்குவதால் பழங்கால நினைவுச் சின்னங்கள் அழிவிலிருந்து மீட்டுருவாக்கம் செய்யவும் புதியவற்றை உருவாக்கவும் முடியும் என்கிறார்.

பாரதி தாய் நாட்டு நூல்களுடன் பிறநாட்டு மொழிகளிலுள்ள அரிய நூல்களையும், வரலாறுகளையும் தமிழ் மொழியில் மொழிபெயர்த்துப் பயன்பெற வேண்டும் என்றும் கூறி மாணவச் செல்வங்களுக்கு வழிகாட்டி நிற்கின்றார்.

*"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்*
*தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்*
*இறவாத புகழுடைய புது நூல்கள்*
*தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்"*

தமிழ் மொழியின் சிறப்புக்கும் கல்விகற்கும் மேம்பாட்டுக்குமான வழிமுறைகளை பாரதியார் முன்வைக்கின்றார். தமிழ் இலக்கியச் செழுமைக்கு இவரது புதுமைக் கருத்துக்கள் உந்துசக்தியாக இருக்கின்றன.

மனித நேயம் மேம்பட மத நல்லிணக்கத்தையும், தர்மங்களில் சிறந்ததான ஜீவகாருண்ணி யத்தையும் மாணவர்கள் உணரும்படி செய்தால் வீடும், நாடும் முன்னேற்றமடையும் என்கிறார்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - நம்மில்
ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே"

"எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓரினம்
எல்லோரும் இந்தநாட்டு மன்னர்"

மேற்கூறிய கவிதைவரிகள் பயனுள்ள கருத்துக்களை முன்நிறுத்தி நிற்கின்றன.

"ஒளி படைத்த கண்ணினாய்', 'உறுதி கொண்ட நெஞ்சினாய்', 'களி படைத்த மொழியினாய்', 'கடுமை கொண்ட தோளினாய்', 'தெளிவு பெற்ற மதியினாய்', 'சிறுமை கண்டு பொங்குவாய்', 'எளிமை கண்டு இரங்குவாய்', 'ஏறு போல் நடையினாய்' ஆகிய சொற்பதங்கள் 'ஒளிபடைத்த கண்ணினாய் வா! வா! வா!' என்ற கவிதையில் பரக்கக் காணலாம்.

'பாரத சமுதாயம்' என்னும் கவிதையில்.....

*"மனித ருணவை மனிதர் பறிக்கும்*
*வழக்கம் இனியுண்டோ?*
*மனிதர் நோக மனிதர் பார்க்கும்*
*வாழ்க்கை இனியுண்டோ?"*

*"இனியொரு விதிசெய் வோம் - அதை*
*எந்த நாளும் காப்போம்*
*தனியொருவனுக் குணவிலை யெனில்*
*ஜகத்தினை அழித்திடுவோம்."*

இப்படியாக பிஞ்சு உள்ளங்களில் பொதுமைக் கருத்துக்களைப் பதிய வைத்துள்ளார்.

மேலும் 'செந்தமிழ் நாடு' என்னும் கவிதையை இலகுதமிழில் தந்து குழந்தைகள் படித்துக் குதூகலிக்க வைத்துள்ளார்.

*"செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்*
*தேன்வந்து பாயுது காதினிலே - எங்கள்*
*தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு*
*சக்தி பிறக்குது மூச்சினிலே"*

*"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து*
*வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - நெஞ்சை*
*அள்ளும் சிலப்பதி காரமென்றோர் - மணி*
*யாரம் படைத்த தமிழ்நாடு!"*

'தமிழ் மொழி வாழ்த்து'ப் பாடலும் சிறியோரைக் கவரும் வகையில் தீட்டப்பட்டுள்ளது.

*"வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி*
*வாழிய வாழியவே!"*
*"எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!*
*என்றென்றும் வாழிய வே!"*

மேலும் பாரதியாரின் தமிழ், சுதந்திரப்பள்ளு, விடுதலை வண்டிக்காரன் பாட்டு, அம்மாக் கண்ணு பாட்டு, சிட்டுக் குருவியைப் போலே, மனத்தில் உறுதி வேண்டும், அன்னையை வேண்டுதல் ஆகிய ஆக்கங்கள் குழந்தை இலக்கியங்களாகவே அமைந்திருக்கின்றன.

*"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்*
*உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்.*
*விழலுக்கு நீர் பாய்ச்சி மாய மாட்டோம் - வெறும்*
*வீணருக்கு உழைத்துடலம் ஓய மாட்டோம்!*

'சுதந்திரப் பள்ளில்' இக் கவிதை இடம்பெற்றுள்ளது.
*'விடுதலை' என்ற கவிதையில்...*

*"ஏழை யென்றும் அடிமை யென்றும்*
*எவனும் இல்லை ஜாதியில்*
*இழிவு கொண்ட மனித ரென்பது*
*இந்தி யாவில் இல்லையே!*

என்ற கூறிவைக்கின்றார். 'அன்னையை வேண்டுதல்' இப்படியாக அமைகிறது.

*"எண்ணிய முடிதல் வேண்டும்*
*நல்லவே எண்ணல் வேண்டும்*
*திண்ணிய நெஞ்சம் வேண்டும்*
*தெளிந்தநல் லறிவு வேண்டும்!*
*பண்ணிய பாவ மெல்லாம்*
*பரிதிமுன் பனியேபோல*
*நண்ணிய நின்முன் இங்கு*
*நசித்திடல் வேண்டும் அன்னாய்!*

இப்படியாக பாரதியாரின் பதினெட்டுக் கவிதைகள் சிறுவர் இலக்கியம் சார்ந்தவையே.

பாரதியாரின் நவதந்திரக் கதைகள் மிகவும் சுவாரிஸ்சமானவையாக உள்ளன. அவை குழந்தைகளுக்கு நிறைவான வாழ்க்கைப் பாடங்களைக் கற்றுக் கொடுக்கின்றன. அதில் முக்கியமான ஒரு போதனை 'பயனில்லாத காரியத்தைச் செய்ய வேண்டாம்' என்பதாகும். 'சங்கீதம் படிக்கப் போன கழுதையின் கதை' மூலம் இவ்வுண்மையை நகைச்சுவையுடன் குழந்தைகளுக்குச் சொல்லியிருக்கின்றார் பாரதி. 'கதைக்குள் கதை' சொல்லும் பஞ்சத்திரக் கதைப் பாணி போல் நவதந்திரக் கதைகளிலும் பாரதி கிளைக் கதைகளைக் கூறுகிறார்.

கழுதை சொல்லும் கிளைக் கதையான ' மாணிக்கஞ்செட்டி மானி அய்யனை நகைத்தது' யாரையும் குறைத்து மதிப்பிடுவது கூடாது' என்னும் கருத்தை குழந்தைகள் மனதில் பதியவைத்துள்ளார். 'ரோஜாப் பூ என்ற பாம்பின் கதை' 'கர்த்தப சுவாமிகள் என்ற ஆண்டி கதை' கர்த்தப சுவாமியைப் பாம்புப் பெண் வசப்படுதியது. தட்டிக் கொண்டான் செட்டி கதை ஆகிய கதைகள் யாவும் ஒரு கதையுடன் மற்றக் கதையைத் தொடர்புபடுத்திப் பல படிப்பினைகளை உணர்த்தும் கதைகளாக அமைந்துள்ளன.



நவதந்திரக் கதைகளின் இரண்டாம் பகுதியில் காட்டுக்கோயில் கதை சொல்லப்பட்டுள்ளது. இக்கதையில் விவேக சாஸ்திரி என்பவர் தமது பிள்ளைகளை விவேகமுள்ளவர்களாக ஆக்குவதற்காக காட்டுக் கதையைச் சொல்வதாகக் கூறப்பட்டுள்ளது. வீரவர்மன் என்ற சிங்கத்திற்கும் விகாரன் என்ற நரிக்கும் இடையில் நடக்கும் சம்பாசணை இடம் பெற்றுள்ளது. அதில் 'மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்', 'மௌனம் சம்மதம்' போன்ற வார்த்தைகள் முன்வைக்

கப்படுகின்றன. வீரவர்மன் விகாரனைப் பார்த்து "தண்டிராஜன் உனக்கு ஏன் மந்திரிப் பதவி தரவில்லை? என்று கேட்கிறது.

"நற்றா மரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போற்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர், முதுகாட்டிற்
காக்கை யுகக்கும் பிணம்"

"என்று வீரவர்மன் என்ற சிங்கத்திற்கு பதில் சொல்லியது விகாரன் என்னும் நரி.

"திண்ணன் என்ற மறவன் கதை', 'உபாயவஜ்ரன் என்ற நரியின் திறமை', 'பிரமாணப் பிள்ளை நாலு சாஸ்திரம் படித்துக் கொண்டு வந்த கதை' என்பனவும் பாரதியாரால் எழுதப்பட்ட கதைகளே. இந்தியாவின் அமர இலக்கியமான பஞ்சதந்திரக் கதைகளுக்கு இணையானது பாரதியின் நவதந்திரக் கதைகளாகும்.


பாரதியாரின் வேடிக்கைக் கதைகளும் சிறுவர் இலக்கியத்திற்கு அணிசேர்த்துள்ளன. 'ஆனைக்கால் உதை' என்னும் கதையில் 'அர்த்தமற்ற பயத்தை ஒழிக்க வேண்டும்' என்ற அறிவுரையைக் குழந்தைகளுக்குக் கூறியுள்ளார். மேலும் 'கவிஞனும் கொல்லனும்', 'அமெரிக்காவுக்குப் போன சீன ராஜகுமாரன்', 'சாஸ்திரியார் மகன்', 'அந்தரடிச்சான் சாஹிப்கதை' ஆகிய கதைகள் முறையே 'கற்றுக் குட்டித்தனம்' ஆகாது. எதையும் முழுமையாகக் கற்றுக்கொண்டு வெளிப்படுத்த வேண்டும் என்ற அறிவுரையையும் கேள்விப் படுவதெல்லாம் உண்மையல்ல. உண்மையை அறிந்து கொண்டு பேச வேண்டும். அகந்தையுடன் பேசக்கூடாது என்ற கருத்தையும், 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்றும், தொழில் செய்து உழைத்து வாழ வேண்டும் என்பதையும், இந்திய மன்னர்களின் கேலிக்குரிய நிருவாகத்தை வேடிக்கையாகக் காட்டி அந்நியர்களிடம் அடிமைப்பட்டிருப்பதையும் குழந்தைகள் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற வகையில் கதைகளைப் பாரதியார் யாத்துள்ளார்.

பாரதியாரின் வேடிக்கைக் கதைகள் வரிசையில் 'கிளிக்கதை' மிகவும் முக்கியம் வாய்ந்தது. போலிச் சாமியார்கள் மக்களை எப்படி ஏமாற்றுகிறார்கள் என்பதைப் பற்றிய கதை இது. மூடநம்பிக்கையை எதிர்க்க குழந்தைகளுக்கு இக்கதை படிப்பினையை நல்கும். 'சிறுகதை' என்ற கதையில் ஒரு காரியத்தைப் பாதியிலேயே விட்டுவிடக் கூடாது பிறருக்கு நன்மை தருமானால் அதை முழுமையாகச் செய்ய வேண்டும் என்ற அறிவுரையைக் குழந்தைகளுக்குச் சொல்கிறது.

"எந்தச் சூழ்நிலையிலும் நம்பிக்கையை இழந்துவிடக் கூடாது என்று தன்னம்பிக்கையை வலியுறுத்தும் கதையாக "இருள்" என்ற கதையும் 'தூங்காதே தம்பி தூங்காதே' என்ற போதனையைச் சொல்லுவதுடன் விழிப்புணர்ச்சி இல்லையென்றால் துன்பப்பட நேரிடும் என்ற கருத்தை விளக்கும் 'குண் டூசி வியாபாரம்' என்ற கதையும், சுதந்திரத்தை வலியுறுத்தும் 'ஓநாயும் வீட்டு நாயும் என்ற கதையும் குழந்தைகளை விழிப்படையச் செய்யும் நோக்கில் எழுதப்பட்டவையாகும்.

'கொட்டைய சாமி' என்ற கதையில் நாட்டுப்புறப் பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. பாரதியாரின் கவிதைகளும் நவதந்திரக் கதைகளும், வேடிக்கைக் கதைகளும் சிறுவர் இலக்கியக் களத்தில் முனைப்பான பங்களிப்பை வழங்கியுள்ளன.

# வளைவுகள்



"நமது பாடசாலைக்கு, பாடசாலையின் பெயர் வளைவொன்றை அமைக்குமாறும், அதற்கான முழுப் பொறுப்புக்களையும் தாங்கள் ஏற்றுக்கொள்வதாகவும் பிரித்தானியப் பழைய மாணவர் சங்கம் அறிவித்துள்ளனர். இந்தப் பெயர் வளைவைக் கட்டுவது பற்றி ஆலோசிப்பதற்காகவே இன்று இந்த நிர்வாகசபைக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது."

பாடசாலை அபிவிருத்திச் சபையின் நிர்வாக சபைக்குத் தலைமை தாங்கிக் கொண்டிருந்த இப்பாடசாலையின் அதிபர் நிர்வாக சபை கூட்டப்பட்டதற்கான காரணத்தைக் கூறி நிகழ்வை ஆரம்பித்து வைக்கிறார்.

தலைவருக்குப் பக்கத்தில் அபிவிருத்திச் சபையின் செயலாளர் குணநாயகமும், குணநாயகத்துக்கருகில் சபையின் பொருளாளர் தம்மலிங்கமும் அமர்ந்திருக்கின்றனர். நானும் நிர்வாக சபையின் உறுப்பினன் என்ற வகையில் அமர்ந்திருக்கின்றேன்.

"பின்தங்கிய கிராமங்களில், நமது கிராமமும் ஒன்று என்பதை நீங்கள் எல்லோரும் ஒத்துக்கொள்வீர்களென்று நான் எண்ணுகின்றேன்... கல்வி அதிகாரிகள் வளர்ந்த பாடசாலைகளையும், தங்களுக்கு வேண்டிய பாடசாலைகளையும் மேலும் மேலும் வளர்ப்பது பற்றிச் சிந்திப்பார்களே தவிர, நமது பாடசாலை போன்ற வளம்குறைந்த பாடசலைகள் பற்றி அக்கறைப்பட்டுக்கொள்வதில்லை என்பதும் உங்களுக்குத் தெரியும். "இப்பாடசாலையில் படித்து, இப்போது பிரித்தானியாவில் வாழும் பழைய மாணவர்கள் தங்கள் கிராமத்தின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டு, நமது பாடசாலைக்கு ஒரு பெயர் வளைவைக் கட்டித்தருவதற்கு முன்வத்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியது.... மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள்... சகலரது ஒத்துழைப்போடும் நாம் இதைச் செய்து முடிக்க வேண்டும். இந்த முயற்சியில் உங்களுக்கு ஏதாவது புதிய அணுகுமுறைகள்... அல்லது கருத்து முரண்பாடுகள் இருந்தால்... அவற்றை இச்சபையில் வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்...." அதிபர் தனது தலைமையுரையை நிறைவு செய்து கொள்கிறார்.

"கரும்பு தின்னிறதுக்கு கைக்கூலி வேணுமா... சேர்... பிரித்தானியாவிலை வாழ்ற எங்கடை உறவுகள்... நன்றியுணர்வோடு இப்படியொரு உதவியைச் செய்ய முன்வந்திருக்கிறார்கள்... இதிலை மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை...." இப்படிக் கூறி இச்சபையின் செயலாளர் குணநாயகம், சில விநாடிகள் தரித்து நின்று மீண்டும் தொடர்கிறார்.

"பிரித்தானிய பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக எனது தம்பியின்ரை மகன் தான் இருக்கிறார். நான் இரவைக்கு அவரோடை 'வைபரிலை' தொடர்பு கொண்டு மேற்கொண்டு செய்ய வேண்டியவை பற்றித் தெளிவாகக் கதைக்கிறன்..." குணநாயகம் தனது கருத்தைக் கூறி முடிக்கிறார்.

'கடைக்காரக் குணம்' குணநாயகத்தை இக்கிராமத்தில் இப்படித்தான் அழைப்பார்கள். இக்கிராமத்திலுள்ள கடைகளில் ஓரளவு வசதியானதொரு கடையை குணநாயகம்தான் நடத்துகிறார். அதனால்த்தான் இவரைக் 'கடைக்காரக்

குணம்' என்று இக்கிராமத்து மக்கள் அழைக்கிறார்கள். இக்கிராமத்தைச் சேர்ந்த பெரும்பாலானோர் குணம் கடையில் வாடிக்கையாளர்களாகவே இருக்கின்றார்கள். கடைக்கு கணக்குக் கொப்பி வைத்து, கடையில் கடன் வாங்காத ஒருவரைக் காணமுடியாது. அந்த வகையில் இக்கிராமத்தைச் சேர்ந்த அநேகமானவர்கள் குணத்துக்கு கடன்காரர்களாகவே இருக்கின்றனர்...!

அதனால் இக்கிராமத்தில் குணத்தை யாரும் எதிர்ப்பதில்லை...! சபை உறுப்பினர்கள் தங்களின் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

பிரித்தானியா பழைய மாணவர் சங்கம் இப்பாடசாலைக்கான பெயர் வளைவு கட்டித்தர முன்வந்தத்தில் எனக்கும் நிறைந்த மகிழ்ச்சியுண்டு. அதேவேளை, அந்த மகிழ்ச்சிக்குள் ஒரு 'அபிப்பிராயமும்' கருத்துக் கொண்டிருந்தது. நான் எனது மகிழ்ச்சியைத் தெரிவிக்க முனைந்தால், எனது மகிழ்ச்சிக்குள் கருக்கொண்டிருக்கும் அந்த 'அபிப்பிராயத்தையும்' கூற வேண்டி வரும்... எனது அபிப்பிராயத்தைக் குணம் போன்றவர்கள் எவ்வளவுக்கு ஏற்றுக் கொள்வார்கள் என்ற மன அச்சத்தில் நான் மௌனமாகவே இருக்கின்றேன்.

"என்ன முத்து சேர்... ஒரு அதிபராக இருந்தனீங்கள்... நீண்டகால கல்வி அனுபவம் உள்ளனீங்கள்... அனுபவசாலி... ஏதாவது சொல்லுங்கோவன்..." அதிபர் என்னைப் பார்த்துக் கூறுகிறார். சபையில் இருந்தவர்கள் எல்லோரும் என்னைப் பார்க்கின்றனர். நான் சிரித்தபடி நிமிர்ந்து உட்காருகின்றேன்...

என்னைப் பற்றி நான்தான் கூற வேண்டும்.

எனது பெயர் தம்பிமுத்து.

மிகவும் வறுமைப்பட்ட ஒரு குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவன். எழுபத்தியோராம் ஆண்டு தற்செயலாகவென்றுதான் கூற வேண்டும் எனக்கும் ஆசிரிய நியமனம் கிடைத்தது. முப்பது ஆண்டுகள் ஆசிரியனாகக் கடமையாற்றி இறுதியில் ஆறு ஆண்டுகள் கிராமப்புறப் பாடசாலை ஒன்றில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவன். 'ஆசிரியத்துவத்தைக்' காப்பாற்றிக் கொள்ள அதற்கான சில பண்பாடுகளைச் சுமந்திருக்கின்ற மனச்சுமை ஒரு பக்கம், பொருளாதாரச் சுமை இன்னொருபக்கம். எனது குடும்பத்தைத் தவிர வேறெந்த இடத்திலும் நான் என்னை முக்கியத்துவப்படுத்திக் கொள்வதில்லை.

நான் இன்று இச்சபையில் மௌனமாக இருந்தமைக்கு வழமையான எனது இயல்பு நிலையும் ஒரு காரணமாக அமைந்ததென்றும் கூறலாம்.

தம்பிமுத்து என்ற எனது பெயரைச் சுருக்கி அதோடு எனது பதவியையும் இணைத்து 'முத்து மாஸ்ரர்' என்றுதான் என்னை எல்லோரும் அழைப்பார்கள்.

"முத்து மாஸ்டர் ஏதாவது சொல்லுங்கோ..." அதிபர் திரும்பவும் என்னைப் பார்த்துக் கூறினார்.

அதிபர் - சுந்தலிங்கம், அயல்க்கிராமத்தைச் சேர்ந்தவர். ஒரு வர்த்தகப் பட்டதாரி, ஐம்பது வயதுக்குள்தான் இருக்கும். தலைமைப் பதவிக்கான வாட்ட சாட்டமான தோற்றம். அடர்த்தியான கட்டையாக வெட்டப்பட்ட தலைமயிர், கம்பளி மயிர்கொட்டி போன்ற தடித்த மீசை, பொதுநிறம், விளையாட்டுத்துறையில் வல்லவர். ஒரு அதிபரிடம் என்னதான் நிர்வாகத் திறமைகள் இருந்தாலும், பாடசாலைச் சூழலின் ஆதிக்கப் போக்குகளை அனுசரித்துத்தான் போக வேண்டியதொரு தேவை தவிர்க்கமுடியாததாகி

விடுகின்றது என்பது எனது அனுபவபூர்வமான உண்மை...

அதிபர் சுந்தலிங்கத்துக்கும் இங்கு அந்த நெருக்கடியுண்டு. கடைக்காரக் குணம் போன்ற வர்களைத் தவிர்த்து இப்பாடசாலையை இயக்கமுடியாது. அதே வேளை அவர்களை அரவணைத்துக்கொண்டு சரியான நிர்வாகத் தையும் முன்னெடுக்க முடியாது.

அதிபர் இரண்டாவது தடவையும் ஏதாவது கூறும்படி என்னிடம் கேட்டது... எனக்கு பெரும் நெருடிக்கடியாக இருக்கின்றது.. ஏதாவது கூறத்தான் வேண்டும் என்ற முடிவுக்கு நான் வருகிறேன்...

எல்லோரும் என்னையே பார்க்கின் றனர்...!

எனது மனத்தில் கருக்கொண்டு, இப்போது கருவண்டாய் எனது மனத்தைப் பிராண்டிக் கொண்டிருக்கும் அந்த அபிப்பிராயத் தைக் கூறிவிடுவதென்ற முடிவோடு எழுந்து நிற்கின்றேன். எல்லோரும் இருந்தபடிதான் தங்களது அபிப்பிராயங்களைக் கூறினார்கள்.

அவர்களைப் போல் இருந்தபடி எனது அபிப்பிராயத்தைக் கூற எனது மனச்சாட்சி இடங்கொடுக்கவில்லை.. அதனால்த்தான் எழுந்து நிற்கின்றேன்.

" சேர்.. நீங்கள் இருந்தபடியே உங்கடை அபிப்பிராயத்தைச் சொல்லலாம்..." அதிபர் என்னைப் பார்த்துக் கூறுகிறார்.

"பரவாயில்லை சேர்.. நான் நின்றே கூறுகிறேன்.." அடக்கமாக நான் கூறுகிறேன்.

"இதே மண்ணில் பிறந்து, இதே மண்ணில வளர்ந்த எங்களின் உறவுகள்... அந்நிய மண்ணில் வாழ்ந்தாலும் பிறந்த மண்ணை மறக்காமல் நமது பாடசாலைக்கு ஒரு பெயர் வளைவு கட்டித்தர முன்வதிருப்பதை நினைக்கும் போது அவர்களை எப்படி வாழ்த்து வதென்று எனக்குத் தெரியாமல் இருக்கின்றது. அதிபர் கூறியது போல் பாடசாலைக்குப் பெயர் வளைவு கட்டுகின்ற இந்த முயற்சியை நாங்கள் எல்லோரும் ஐக்கியப்பட்டுச் செய்து முடிப்போம். இம்முயற்சிக்கு எனது பூரணமான ஆதரவுண்டு." நான் எனது பேச்சை முடிக்காமல் முடித்து விட்டு சபையோரைப் பார்க்கின்றேன் எல்லோருடைய முகங்களும் பூரித்துப்போய் இருக்கின்றன.!

"எனது மனத்திலுள்ள இன்னுமோரு கருத்தையும் இச்சபையில் கூறிவைக்க ஆசைப்படுகின்றேன்.. நானும் இக்கிராமத்தைச் சார்ந்தவன். எனது பேரப்பிள்ளைகளும் இங்கு தான் படிக்கிறார்கள். இப் பாடசாலையின் நன்மை தீமைகளில் எனக்கும் சமபங்குண்டு. அதனடிப்படையில்த்தான் நான் இந்தக் கருத்தை வெளிப்படுத்த முடிவு செய்தேன்..." எனது பேச்சை நிறுத்திவிட்டுக்கொண்டு சபையோரைப் பார்க்கின்றேன்.

வானத்தில் பறந்துகொண்டிருந்த பட்டம் காற்றின் வேகம் குறைந்தபோது தலைகுத்தி நிமிர்வது போல் ஒவ்வொருவடைய முகங்க ளிலும் சஞ்சலம் கலந்த கேள்விக்குறி...?

நான் தொடர்கின்றேன் ..

"ஒரு மனிதனின் கௌரவம்... அவனது நடத்தைப் பண்புகளில்த்தான் தங்கியுள்ளது. அதுபோல ஒரு குடும்பத்தின் கௌரவம் அந்தக் குடும்பத்தின் நடத்தைப் பண்புகளில்தான் தங்கியுள்ளது. அதேபோல, ஒரு பாடசாலையின் கௌரவம் அந்தப் பாடசாலையின் பண்பு விருத்தியில்த்தான்தங்கியுள்ளது. இந்தச் சபையில் உள்ளவர்கள் எனது கருத்தை ஒத்துக் கொள்வார்களென நம்புகிறேன்.

இப்பாடசாலைக்கான பெயர் வளைவு கட்டுகின்ற முயற்சியில் நிறையக் கூலியாட்கள் தேவைப்படுவார்கள். அந்தக் கூலியாட்களின் தேவையை இப்பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் பெற்றோர் நலன்விரும்பிகளும் நிறைவேற்றினால் கூலியாட்களுக்கு வழுங்கப் பட வேண்டிய கூலிக்காசைச் சேமிக்கலாம். சிறு துளி பெரு வெள்ளம் எங்களுக்கு ஒரு தொகைப் பணம் மிஞ்சும். "இப்படிக்கூறிவிட்டு நான் மீண்டும் சபையைப் பார்க்கின்றேன். காற்றின் வேகம் குறைந்த போது தலைகுத்தி நிமிர்ந்த பட்டம் இப்போது சுழன்றடிக்கின்றது. நான் என்ன சொல்லப் போகின்றேன் என்ற ஆவலாதி அவர்களுக்கு.

நான், எனது அபிப்பிராயத்தைத் தொடர்ந்து கூறுகின்றேன்.

பெயர் வளைவு கட்டுகின்ற முயற்சியில் எங்களால் சேமிக்கப்படுகின்ற பணத்தை இப்பாடசாலையில் கற்பிக்கின்ற ஆசிரியர் களதும், மாணவர்களதும் பண்பு விருத்திச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தலாம் என்பது என் அபிப்பிராயமாகும்.

"ஒரு ஆலயத்தின் மூலஸ்தானத்தில் இறைவன் இருப்பது போல், ஒரு பாடசாலையின் மூலஸ்தானத்தில் பண்புதான் இருக்கின்றது. பண்பற்ற கல்வி இந்தச் சமுதாயத்திற்கு எந்த வகையிலும் பயன்படாது என்பதை நான் உங்க ளுக்கு விளக்க வேண்டிய அவசியமில்லை என்றெண்ணுகின்றேன்.." நான் எனது பேச்சை முடித்துவிட்டு எனது இருக்கையில் அமர்கின் றேன்.

சபையில் குண்டூசி விழுந்தால் சத்தம் கேட்கின்ற அமைதி. தலைகுனிந்திருந்து எனது பேச்சை அவதானித்த அதிபர். தலையை நிமிர்த்தாமல் மேற்கண்ணால் என்னைப் பார்க்கின்றார். அவரது கண்களின் இமைகள் இரண்டும் வளைந்து துடிக்கின்றன.

குணம், தர்மலிங்கம், ஜெயக்குமார், ரமேஷ்குமார், திருச்செல்வம்... இப்படி எல்லோ ருமே மௌனமாக இருக்கின்றனர்.

செயலாளர் குணம் மெல்லிய செருமலு டன் பேச ஆரம்பிக்கின்றார். அதிபர் உட்படச் சகலரும் குணத்தைத்தான் பார்க்கின்றனர். குணம் ஏதாவது கூறுவாரென்பதும் எனக்குத் தெரியும். முத்து சேர் நீங்கள் படிச்சவர். அனுபவ முள்ளவர். அதிபர் பதவியில் இருந்தவர். இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர். நீங்கள் இப்படிக் கதைக்கிறது ஆச்சரியமாக இருக்கிறது. நான் இந்தப் பாடசாலையிலை செயலாளராகவும் பொருளாளராகவும் அங்கத்தவனாகவும் தொடர்ந்து இருந்து வாறன். எத்தனையோ அதிபர்கள் வந்து போயிருக்கிறார்கள். ஆனால் ஒருவர் கூட நீங்கள் சொல்ற பண்பு விருத்திச் செயற்பாடுகள் பற்றிப் பேசினதில்லை. அது தவிர நமது பாடசாலை இதுவரையிலை ஒழுங்காகத் தான் இயங்கி வந்திருக்கு. அதாலை நீங்கள் சொல்ற பண்பு விருத்திச் செயற்பாடு அவசியம் இல்லையெண்டுதான் நான் நினைக்கிறன். அது தவிர, பெயர் வளைவு கட்டவென்று பிரித்தானிய பழைய மாணவர் சங்கம் காசு தருகிறார்கள். இதுக்குள்ளை மாணவர்களையும், பெற்றோர் களையும், ஆசிரியர்களையும் வேலைக்குக் கூப்பிடுவதென்பது சாதாரண விஷயமல்ல. ஒவ்வொரு வீடுவீடாய்ப் போய் வேலைக்கு வாருங்கோ வேலைக்கு வாருங்கோ எண்டு கூப்பிடமுடியுமா? வீடு வீடா என்னைப் போய் கூப்பிடச் சொல்றீங்களா? இல்லை அதிபரைப் போய் கூப்பிடச் சொல்றீங்களா,

சரி முத்து சேர், சீமெந்து குழைக்கவும் தண்ணி அள்ளவும் கல்லுப் பொறுக்கவும் பெற்றோரைக் கூட்டிவாற முயற்சியை நீங்கள் பொறுப்பெடுங்கோ. நீங்கள் சொல்றது போலை செய்வம்" குணம் மிக இறுக்கமாகக் கூறி முடிக்கிறார்.

அங்கிருந்தவர்கள் எல்லோரும் மேற் கண்ணால் என்னைப் பார்த்தபடி சொண்டுக்குள் சிரிக்கின்றனர்..!

அந்தச் சபையில் நிர்வாணமாய் நிற்பது போன்ற உணர்வெனக்கு...

எனது நெஞ்சு எரிகின்றது.. ஒன்றுக்குப் பின் ஒன்றாகச் சமூகப் பண்புகள் அருகிக் கொண்டு போவது பற்றி என்னால் நிறையக் கூறமுடியும். எனது வாய்க்குள் நாக்குத் துடிக்கின்றது. நான் என்னை அடக்கிக் கொள்கிறேன். காரணம்? எனது சுயநலம்? குணம் கடைக்குச் சாமான் வாங்கச் செல்லும் போது கொண்டு போகின்ற கடன்கணக்குப் பதிகின்ற கணக்குக் கொப்பிதான் எனக்கு நினைவுக்கு வருகின்றது. பல்லி முட்டை போன்ற பென்சன் தொகை. மாதத்தில் பத்து நாட்கள்தான் என்னிடம் காசிருக்கும். இருபது நாட்களும் வெறுங்கைதான். குணத்தான் கடன் தருவான்.

அவனோட முரண்பட்டுக்கொள்ள என்னால் முடியவில்லை.

"இல்லைக் குணமண்ணை காலமாற்றத் திற்கேற்ப பண்புகளும் மாறத்தான் செய்யும். அது தவிர்க்க முடியாதென்பது எனக்குத் தெரியும். பண்பே அற்றுப் போறதொரு நிலை உருவாகிக் கொண்டிருக்கு, அதனாலைதான் நான் பண்பு விருத்தி அவசியம் என்று சொன்னன். நான் பிரச்சினையை மூடிமெழுகுகின்றேன். அதை விட வேறுவழி எனக்கு இருக்கவில்லை."

"சேர் உங்கடை காலத்திலை கக்கூசுக் குப் போறதெண்டால் பனைவடலியளுக்கை போவியள். இப்ப கக்கூசு வீட்டுக்கு நடுவிலை இருக்கு. அதை விட்டிட்டு பனைவடலிக்கை போகச் சொல்லுறியளா?" குணம் சேட் கொலரின் பிற்பகுதியை லாவகமாக இழுத்து விட்டபடி... நிமிர்ந்து உட்கார்ந்திருந்து என்னிடம் கேட்கிறார்.

எல்லோரும் கெக்கலி கொட்டிச் சிரிக் கின்றனர்.

நான் கூனிக்குறுகிப்போய் இருக்கின் றேன்...?

"தம்பிமுத்துசேர் அதிபராக இருந்த பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் இவரை வைச்சு எப்படித்தான் சமாளிச்சுது களோ" அதிபருக்குப் பக்கத்தில் இருந்த பாஸ்கரன் தனக்கருகில் இருந்த வேலுப்பிள்ளை யிடம் இரகசியமாகக் கூறுவதுபோல் கூறுகின் றான். எனக்கு மட்டுமல்ல சபையில் இருந்த எல்லோருக்கும் கேட்கின்றது. சபையில் மீண் டும் சிரிப்பொலி.. நான் கேட்காதது போல் பாவனை செய்கின்றேன். ஆனால் நான்?

எனக்குள் நானாகி.. தீமிதிப்புச் செய்கிறேன்...!

"சரி.. இனி அந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டிட்டு அடுத்த நிகழ்ச்சிக்கு வருவம்" அதிபர் சூழ்நிலையைத் திசைதிருப்புகின்றார்.

அடுத்து, பெயர் வளைவு கட்டப்படுவதை பொறுப்பாகக் கவனித்துக்கொள்ள ஒரு குழு தெரிவு செய்யப்படுகின்றது. அதிபரின் தலைமை யில் கடைக்காரர் குணத்தையும் இப்பாடசாலை யில் விளையாட்டுத்துறை ஆசிரியராகக் கடமையாற்றும் முருகேசு மாஸ்டரையும் உள்ள டக்கி முருகேசு மாஸ்ரர் கட்டிட வேலைகளில் அனுபவம் மிக்கவர் என்ற சபையோரின் சிபார்சி லேயே இவரையும் உள்ளடக்கினர். ஒரு குழு தெரிவு செய்யப்பட்டதொடு நிர்வாக சபைக் கூட்டம் நிறைவு பெறுகின்றது.

இந்தப் பாடசாலை அபிவிருத்தி நிர்வாக சபைக் கூட்டம் சனிக்கிழமை காலை பாடசாலை அதிபரின் அலுவலகத்தில் காலை பத்து மணி யளவில் நடைபெற்று முடிந்தது. துரியோதனன் சபையில் திரௌபதை துயிலுரியப்பட்டது போல் நிர்வாக சபையில் நான் துயிலுரியப்பட்ட சம்பவம் சிரட்டை நெருப்புத் தணலாய் எனது இதயத்தைச் சுட்டதென்பது உண்மைதான். நான் அதை

எனது குடும்பத்தினர் உட்பட எவருக்குமே கூற வில்லை.

எனக்கிப்போது எழுபது வயது. எழுபது வருடங்கள் நான் வாழ்க்கின்றேன். அந்த அனுபவங்களால் எனது இதயம் மரத்துப் போய் விட்டதென்பதுதான் உண்மை...!

நிர்வாகசபைக் கூட்டம் சனிக்கிழமை காலை பத்து மணியளவில் நடந்து முடிந்தது. அதே சனிக்கிழமை பிற்பகல் ஐந்து மணியிருக் கும் வெளியே சென்றிருந்த எனது மனைவி தவமணி முகம் காய்ந்து போய் வீட்டுக்கு வந்தாள். அவள் எனது மனைவி. எனது வாழ்க்கையைப் பங்குபோட்டுக் கொண்டவள். அவளைப் பற்றி எனக்கு நன்கு தெரியும். அவளது மனதுக்குள் ஏதோவொரு பிரச்சினை இருப்பதை நான் ஊகித்துக்கொண்டேன்.

"என்ன தவம்.. கனநேரமாயக் காணயில்லை..." தவமணி என்ற எனது மனைவியின் பெயரைச் சுருக்கி 'தவம்' என்றுதான் நான் அழைப்பேன்.

"வெளியிலை தலை காட்டமுடியாமல் இருக்கு..." தவமணி கொதிக்க ஆரம்பிக்கிறாள்.

"ஏன்... என்ன பிரச்சினை..." நான் எதுவுமே புரியாதவன் போல் கேட்கிறேன்.

"காலமை நடந்த கூட்டத்திலை என்ன கதைச்சனீங்கள்..." தவமணி சீறுகிறாள்.

"பாடப் புத்தகங்களிலை உள்ள பாடங் களை வாசிச்சுக் காட்டிறது கற்பித்தலில்லை. அந்தப் பாடத்தினை உள்ள பண்பாடுகளை பிள்ளையளுக்கு விளக்க வேணும். படிக்கிற புள்ளையளுக்கு ஆசிரியர்கள் உதாரணமாய் இருக்க வேணும். கல்வியின்ரை உயிர் - பண் பாடுதான், அதைத்தான் நான் சொன்னனான். அது பிழையே" மனைவியிடம் நான் கேட்கிறேன்.

"உந்தப் பள்ளிக்கூடத்திலை படிப்பிக்கிற வாத்திமாருக்கும் படிக்கிற புள்ளையளுக்கும் பண்பாடு பற்றிப் படிப்பிக்க வேணுமெண்டு நீங்கள் சொன்னீங்களாம்... எண்டுதான் கடைக்காரர் குணம் சொல்லுறான். அங்கை நின்ற சனங்களெல்லாம் என்னைப் பார்த்துச் சிரிக்குதுகள்..." அவளது கண்கள் கலங்கி விட்டன.

பண்புவிருத்திச் செயற்பாடுகள் பற்றி நான் கதைத்தவைகள் இப்போது புதியதொரு வடிவம் பெற்றுவிட்டதை நான் உணர்ந்து கொண்டு மௌனமாக இருக்கின்றேன்.

அதன் பின்பு எனது மனைவி என்னிடம் பேசவில்லை. எனது மனைவி எப்படிப்பட்டவள் என்பது எனக்குத் தெரியும் நான் அவளிடம் எதுவுமே பேசவில்லை.

இரவு எட்டு மணியிருக்கும். நாங்கள் இரவுச் சாப்பாடு சாப்பிடும் நேரம். நான், எனது மனைவி, எனது மகன் குடும்பம், பேரப்பிள்ளை கள் குசுனி வாசலோடு அமைந்திருக்கும் சிறிய மண்டபத்தில் அரைவட்ட வடிவில் எல்லோரும் சப்பாணிகொட்டி அமர்ந்திருப்போம். நடுவே எனது மனைவி அமர்ந்திருந்து எல்லோருக்கும் உணவு பரிமாறுவாள். அவளது மடியில் இரண்டு வயதான எனது கடைசிப் பேரன் அமர்ந்திருப்பான். வயிறு நிறையிதோ இல்லையே மனம் நிறைஞ்சுபோய்விடும்.

"சாப்பிட வருங்கோவன்" தவம் என்னை சாப்பிட அழைக்கிறாள். அவள் என்னைச் சாப்பிட அழைப்பாள் என்பது எனக்குத் தெரியும். நான் எழும்பி அவளுக்கருகில் வருகின்றேன்.

"என்ன தவம் கோவமா..." நான் தாழ்ந்த குரலில் அவளிடம் கேட்கிறேன்.

"உங்களை ஆராவது கூடாமல் கதைச்சால் நான் தாங்கமாட்டன்...." அவளது

கண்களில் கண்ணீர் பனித்திருக்கின்றது. ஆனால் வாயில் இலேசான தொரு சிரிப்பு நானும் சிரித்துவிட்டுச் சாப்பிட அமர்கின்றேன்.

சில மணித்தியாலங்களுக்குள் எனக்கும் எனது மனைவிக்குமிடையே நடந்து முடிந்த சம்பவங்களை எனது மனம் மதிப்பீடு செய்கின்றது.

சீறிப்பாய்ந்தாள்... கோபம் பாராட்டினாள்... என்னைச் சாப்பிட அழைத்தாள்... அழுதபடி சிரித்தாள்...

இந்த நடவடிக்கைகள் ஒரு குடும்பப் பெண்ணுக்கு இருக்க வேண்டிய குடும்பப் பண்பின் வெளிப்பாடுகள்.

"தமிழ்ப் பேராளிகளின் தோல்விக்குப் பிறகு மாணவர்களைப் பற்றியும் ஆசிரியர்களைப் பற்றியும் வெளிவருகின்ற செய்திகளைக் கேட்கும் போது மனதுக்குப் பெரும் வேதனையாய் இருக்கு. ஆசிரியர்கள் பண்பாடுள்ளவர்களாக இருக்க வேணும். ஆசிரியர்கள் பண்பாடுகள் பற்றிப் போதிக்க வேணும், மாணவர்கள் பண்பாட்டுடன் வளர்க்கப்பட வேணும். பாடசாலை அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் இதைத்தான் நான் சொன்னன். ஆசிரியர், மாணவர்களிடம் பண்பாட்டு விருத்தியில் கவனம் செலுத்த வேண்டும் என்றுதான் நான் சொன்னன். இதைக் குணம் கயிறு திரித்து விட்டிருக்கிறான்." நான் சாப்பிட்டபடி தவமணிக்குக் கூறுகிறேன்.

"நீங்கள் தவறாய் கதைக்க மாட்டியள் என்டது எனக்குத் தெரியும். இவன் கடைக்காரக் குணத்தான் கடை விறாந்தையிலை எவ்வளவோ சனங்கள் நிக்கிது அவ்வளவு சனங்களுக்கும் கேட்கக் கூடியதாக உங்களைப் பற்றித் தவறாகச் சொல்லுறான். சனங்களெல்லாம் என்னைப் பார்த்துச் சிரிக்குதுகள். என்னாலை தாங்கமுடியாமல் இருந்திது..." தவமணி கடையில் நடந்தவற்றைக் கூறுகிறாள்.

அன்றைய பொழுது பெரும் பூகம்பத்தோடு முடிகின்றது!

பெயர் வளைவு கட்டப்படுவதைக் கவனிப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்ட குழுவில் சேர்த்துக்கொள்ளப்பட்ட முருகேசு மாஸ்ரர் மிகவும் செல்வாக்கானவர். இவர் வவுனியாவிலிருந்து தொழிலாளர்களை வரவழைத்து இரண்டு மாதங்களில் பெயர் வளைவைக் கட்டிமுடித்து விட்டார்.

பதினொரு இலட்சத்துக்குக் கணக்குக் காட்டப்பட்டது. பிரித்தானியப் பழைய மாணவர் சங்கம் அத்தொகையை ஏற்றுக்கொண்டனர்.

பெயர் வளைவுத் திறப்பு விழாவெகு சிறப்பாக ஒழுங்கு பண்ணப்பட்டிருந்தது. பாடசாலைக் கட்டிடத்துக்கும் பெயர் வளைவுக்குமிடையே சிறியதொரு நிலப்பரப்பு இருந்தது. அந்த இடத்தில்த்தான் மாணவர்களின் காலை வணக்கம் ஒன்றுகூடல் இடம்பெறும். இந்த நிலப்பரப்பின் இடது பக்க மூலையில் ஏறத்தாள ஐம்பது வயது மதிக்கத்ததொரு மருதமரம். இந்த மருத மரத்தின் கீழும் சில வேளை வகுப்புக்கள் நடக்கும். இந்த மருதமரப் பக்கமாக ஒரு மேடை அமைத்து மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. மாணவர் சார்பில் குணத்தின் மகளும், பெற்றோர் சார்பில் குணமும், ஆசிரியர்கள் சார்பில் முருகேசு மாஸ்ரரும், அதிபரும், பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டுள்ள வலயக் கல்வி அதிகாரியும் பேசுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

திட்டமிட்டபடி பிற்பகல் மூன்று மணிக்கு விழா ஆரம்பிக்கப்பட்டு, பேச்சுக்களின் பின்பு கலை நிகழ்ச்சிகளும் நடந்து விழா முடிய இரவு எட்டு மாணியாகிவிட்டது. பாடசாலைத் தளவாடங்களும் ஏனைய பொருட்களையும் ஒதுக்குவதில் மேல் வகுப்பு மாணவர்கள் ஈடுபட்டிருந்தனர். ஒன்பது மணியளவில் சில பெற்றோரையும் மாணவர்களையும் தவிர



செல்வராஜா
கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்
உங்கள் எண்ணம் போல் நகைகளையும் புடைவைகளையும்
தெரிவு செய்து கொள்ளுங்கள்
பொன்னுருக்கலுக்கான வசதிகள்
செய்து தரப்படுவதுடன் தாலிக்கொடிகள்
அனைத்தும் தங்கத்தின் விலைக்கே
செய்து தரப்படும்
கூறைப் புடைவைகள்
பட்டுப்புடைவைகள்
மற்றும் சீக்கூன் அனைத்தும்
30%
விலைக் கழிவில்!
SELVARAJA
Gold House & Textiles
Exclusive Designer Jewellery & Sarees
YOU
ARE
THE
BEST
FOR
YOU
WE ARE THE BEST
162B, Mitcham Road, London SW17 9NJ
Tel : 020 8767 3795 | 07825 005 269

**23 வருட கால அனுபவம்**

# Linga & Co

**Legal Advisors & Immigration Specialists**

## We Specialise in:

- Asylum and Immigration Matters
- Human Rights applications
- Appeals
- Detention and Bail
- Entry Clearance Application and Appeal
- Injunctions & Judicial Reviews through associate solicitors
- Work Permits
- EEA Application (Sponsor)
- Student Visa, Visitor's Visa
- Highly Skilled Migration Programme
- Naturalisation Applications

- Family Law
- Employment Law
- Criminal Law



**V.P.Lingajothy**
LLB(Hons), M.Sc., Dip Fms, ACILEX
Principal
immigration Specialist
E-mail: MRLINGA@AOL.COM

ஐரோப்பிய மனித உரிமைகள் சட்டம் சார்பாக தகுந்த ஆலோசனைகளை இப்போது நாங்கள் வழங்குகிறோம்.

நீங்கள் அல்லது உங்கள் உறவினர் இங்கிலாந்திற்கு 2007 ஆம் ஆண்டுக்கு முன்னர் வந்துள்ளார்களாயின் உடன் தொடர்பு கொள்ளவும்.

**மிகவும் நம்பிக்கையான வெற்றிகரமான நிறுவனம்**

General Line : 020 8544 9285

Fax : 020 8542 9530

46, High Street
Collierswood
London SW19 2BY

OISC


**Emergency Line : 07771 646 441**

# Easan & CO

*Chartered Management Accountants*

## Specialists in arranging Commercial Loans

- Self Assessment Tax Return
- CIS Refunds
- Accounts & Book Keeping
- VAT Returns
- PAYE
- Management Accounting



S.Eswaranathan ACMA
(Easan)

196 Merton High Street
South Wimbledon
London SW19 1AX

Tel: 020 8543 8484
Fax : 020 8540 0107
Mobile : 07801227017

# HENSHOU ISSHINRYU KARATE ACADEMY


59 Cranley Road, Ilford, Essex, IG2 6AF

Tel: 020 8518 3288, Mob: 07950346432, Email: info@henshou.com, Web: www.henshou.com

AFFILIATED TO ISSHINRYU WORLD KARATE ASSOCIATION – OKINAWA, JAPAN AND
ALL INDIA ISSHINRYU KARATE ASSOCIATION - INDIA



## DEVELOP YOUR SELF DEFENCE, SELF CONTROL SELF DISCIPLINE, COURAGE & LEADERSHIP




*Renshi Raveendran is a 6th Dan Black Belt who has trained directly under Master Shihan Hussaini(India), Grandmaster Christopher Chase (USA) and Grandmaster Kichiro Shimabuku(Japan)

*Trained and coached over 1000 students from various branches (Students age varies from 5yrs to 65 yrs-male and female).

*His Students have won many awards from various local competitions and world Isshinryu Karate competitions held in the USA

தமிழர்கள் செறிந்து வாழும் பல பகுதிகளில்
றென்ஷி ரவீந்திரனது நேரடிக் கண்காணிப்பில்
தகுதி வாய்ந்த ஆசிரியர் குழுவின் அனுசரணையுடன்
இஷின்றியு கராத்தே வகுப்புக்கள்
சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது





**OUR BRANCHES:**

EASTHAM, MANOR PARK, NEWBURY PARK
WALTHAMSTOW, PLUMSTEAD, LEWISHAM
CROYDON, MITCHAM, BRISTOL, HARROW
SOUTHEND, SWINDON

**CONTACT : RENSHI KANDIAH RAVEENDRAN** (6th DAN BLACK BELT)

**TEL : 020 8518 3288**

**MOB : 07950 346 432**

**Email : info@henshou.com Web : www.henshou.com**

ஏனையவர்கள் சென்று விட்டனர். நானும் வீட்டுக்கு வந்துவிட்டேன்.

மறுநாள் விடியப்புறம்... ஐந்தரை மணியிருக்கும். நான் வழமையாகவே ஐந்து மணிக்கெல்லாம் கண்விழித்து விடுவேன். எனது மகன் கிளிநொச்சியில் வேலை செய்கிறான். எனது மகனுக்கு மத்தியானச் சாப்பாடு செய்து கொடுத்து விடுவதற்காக, எனது மனைவியும் மகளும் குசினிக்குள் விடியப்புறம் சமைக்கத் தொடங்கி விடுவார்கள். இது வழமையான நடைமுறை. ஆனால் இன்று அவர்களின் பேச்சில் வித்தியாசம் தெரிகின்றது.

என்னவாக இருக்கும்? நமது குடும்பத்துக்குள் ஏதாவது நடந்திருந்தால் எனது மனைவி நிட்சயமாக எனக்குக் கூறியிருப்பாள். எனக்குத் தெரியக் கூடாத விஷயமாக இருக்குமா? நான் எழும்பிக் குசுனிக்குள் செல்கிறேன். இருவரும் பேச்சை நிறுத்திவிட்டு ஆளையாள் பார்க்கின்றனர். அவர்களின் முகங்களில் ஒருவித பீதி...?

"என்னப்பா... என்ன விஷயம்" திரும்பவும் நான் கேட்கிறேன்.

"நேத்து எங்கடை பள்ளிக்கூடத்திலை திறப்பு விழா முடிஞ்சப்பிறகு பெரிய அடிபுடியாம். சுடலையடிப் பொடியள் நாலைஞ்சு பேர் ஆஸ்பத்திரியிலையாம். எங்கடை பெடியளும் நாலைஞ்சு பேர் ஆஸ்பத்திரியிலையாம். நீங்கள் வெளியிலை போகதையுங்கோ பொலிஸ்காரர் வருவாங்கள்" மனைவி கூறுகிறாள்.

என்ன நடந்திருக்கும்...? எனக்குத் தலை விறைத்துப் போய்விட்டது.!

"என்ன நடந்ததாம்...". நான் ஆச்சரியத்தோடு கேட்கிறேன்.

"நேத்து திறப்புவிழாவுக்கு ஸ்பீக்கர் புடிச்சது தானே. பாடசாலை வாசலிலை நிக்கிற மருத மரத்திலைதானே ஸ்பீக்கர் கோண் கட்டினவங்கள். அந்த மரத்திலை ஏறி அந்தக் கோணை மருதமரத்திலையிருந்து இறக்கிற திலை ஏற்பட்ட பிரச்சினையாம். சாதிப் பிரச்சினையாம்" தவமணி தான் விளங்கியதைக் கூறுகிறாள்.

நமது கிராமத்துப் பிரச்சினை. விசாரிக்காமல் விடமுடியுமா. யாரிடம் விசாரிப்பது, எனது மனம் எனது கிராமத்தைச் சுற்றி வருகின்றது. விஸ்வலிங்கம் அவரில்த்தான் எனது மனம் தரிக்கின்றது. விஸ்வலிங்கம் புரட்சிகர மனப்பான்மை கொண்டவர். எதையுமே யதார்த்தமாகப் புரிபவர். அதனால்த்தான் எனது மனம் அவரை விரும்பியது.

நான் சேட்டை எடுத்துப் போட்டுக் கொண்டு விஸ்வலிங்கத்தின் வீட்டை நோக்கிப் புறப்படுகின்றேன்.

"சுடலையடிப் பொடிஉளும் ஆஸ்பத்திரியிலையாம். எங்கடை பொடியளும் ஆஸ்பத்திரிலையாம். சாதிப் பிரச்சினையாம்" எனது மனைவி என்னிடம் கூறியவைகள் எனது செவிப்பறையில் எதிரொலிக்கின்றன."

நான் விஸ்வலிங்கத்தின் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருக்கின்றேன். படலைக்குப் படலை சனக்கூட்டம்.

சுடலையடிப் பொடியள், சாதிப்பிரச்சினை, எனது மனம் வெந்து வெடிக்கின்றது. இந்தச் சுடலையடியார் பரிதாபத்துக்குரியவர்கள். காங்கேசன்துறை இதுதான் இவர்களின் பூர்வீக நிலம். இலங்கை இராணுவத்தால் துரத்தப் பட்டு ஏதிலிகளாக வந்தவர்கள். பூனை தன் குட்டிகளைக் காவுவது போல் தங்கள் உறவுகளையும், பொருட்களையும் காவிக் கொண்டு மரத்தடிகளிலும் பாடசாலைகளிலும் பாழடைந்த கட்டிடங்களிலும் தங்கியவர்கள். இறுதியில் நமது கிராமத்தின் கிழக்குப் பக்கமாக அமைந்துள்ள நமது மாயத்தின் அருகில் மயானத்தோடு இணைந்

துள்ள தரிசு நிலத்தில் ஒவ்வொரு கொட்டில்களைப் போட்டுக்கொண்டு தங்கினர். அதுவே அவர்களின் வாழ்விடமாகி விட்டது. ஆரம்பத்தில் இருபது குடும்பங்கள் வரையில் இருந்தவர்கள் இப்போது ஐம்பது குடும்பங்கள் வரையில் பெருகிவிட்டனர். இவர்கள் சுடலக் கருகில் வாழ்வதால் இவர்களைச் சுடலையடியார் என்றே எல்லோரும் அழைக்கின்றனர். இந்தச் சுடலையடி மக்களின் பிள்ளைகளும் நமது கிராமத்துப் பாடசாலையில்த்தான் படிக்கின்றார்கள்.

மரம் ஏறுவதுதான் இவர்களின் நிரந்தரத் தொழில். சிலர் இப்போதும் அதே தொழிலைச் செய்கிறார்கள். ஏனையவர்கள் கிராமம், கிராம மாகச் சென்று கூலி வேலை செய்கிறார்கள்.

நமது கிராமத்தில் உள்ளவர்கள் சமூக அமைப்பின்படி கூறுவதானால் இவர்களும் உச்சமான சாதியைச் சேர்ந்தவர்கள் அல்ல. பெரும்பாலானவர்கள் கடல் தொழில் செய்பவர்கள். விரல் விட்டு எண்ணக் கூடிய தொகையில் அரசாங்க வேலைகளிலும் இருக்கிறார்கள்.

நான் விஸ்வலிங்கம் வீட்டை அடைகின்றேன்.

“சேர் வாருங்கோ. நீங்கள் சொல்லி அனுப்பியிருந்தால் நான் வந்திருப்பன்...” விஸ்வலிங்கம் இடதுசாரிப் போக்குடையவர். எந்த விஷயத்திலும் நியாயத்தையும் மனிதாபிமானத்தையும் முதன்மைப்படுத்துபவர். அவரிடம் தனியானதொரு மதிப்பு எனக்குண்டு. அதனால்த்தான் நான் அவரைத் தேடி வந்தேன்.

“நேற்று திறப்பு விழா முடிஞ்சாப் பிறகு பாடசாலையிலை சில அசம்பாவிதங்கள் நடந்து போச்சு...” நான் மிகவும் கஷ்டப்பட்டுப் பிரச்சினையை ஆரம்பிக்கின்றேன்.

“விழாவுக்கு ஸ்பீக்கர் கொண்டு வந்த பொடியன் எனக்கு வேண்டியவன். நான் அவனோடைதான் நிண்டனான்...” விஸ்வலிங்கம் கூறுகிறார்.

“என்னையா நடந்தது...” நான் யாசிப்பது போல் கேட்கிறேன்.

“பாடசாலைக்கு முன்னால் நிக்கிற மருதமரத்திலைதான் ஸ்பீக்கர் கட்டியிருந்தது. விழா முடிஞ்சாப்பிறகு, ஸ்பீக்கர் கொண்டு வந்த பொடியன் நடுக்குறிச்சி பேரம்பலத்தாற்றை மகன் பாஸ்கரனிட்டை மருதமரத்திலை கட்டின ஸ்பீக்கர் கோனை இறக்கித்தரும்படி கேட்டான். அதுக்கு பாஸ்கரன் என்ன செய்தான், சுடலையடிக் கொசுக்கற்றை மகன் தம்பிராசனைக் கூப்பிட்டு அந்த மருதமரத்திலை ஏறி அந்த ஸ்பீக்கர் கோணை இறக்கும்படி சொன்னான். கொசுக்கற்றை மகன் தம்பிராசான் தனக்கு மரத்திலை ஏறத்தெரியாது எண்டு சொன்னான். டே தம்பிராசா நீ மரத்திலை ஏறத் தெரியாது எண்டு சொல்ற கதை மீன் குஞ்சு தனக்கு நீத்தத் தெரியாது எண்டு சொல்ற கதையாய் இருக்கு எண்டு பாஸ்கரன் நக்கலாய் சொன்னான். உனக்கு மீன் குஞ்சைவிட வேறை என்னடா தெரியும் எண்டு தம்பிராசா திரும்பிக் கேட்டான். மைக் பொருத்திற ஸ்ராண்ட் கம்பியைத் தூக்கிக் கொண்டு பாஸ்கரன் தம்பிராசனை நோக்கி ஓடிவந்தான். சுடலையடிப் பொடி, பொட்டையளும் நிறையப் பேர் நிண்டதுகள். இந்தக் கிராமத்துப் பொடி பொட்டையளும் நிறைய நிண்டத்துகள். பிறகென்ன யுத்தகளம், இரண்டு பகுதிப் பொடியளுக்கும் காயம். இதுக்கிடையிலை சுடலையடிப் பொட்டையள் ஓடிப் போய் சுடலையடி ஆக்களுக்குச் செய்தியைச் சொல்லியிருக்கிதுகள். அங்கையிருந்து ஒரு கூட்டம் பள்ளிக்கூடத்துக்கு வந்திட்டிது. அது மாதிரி எங்கடை பொட்டையளும் வீடுகளுக்கு ஓடிப்போய் செய்தியைச் சொல்லியிருக்கிதுகள். எங்கடை கூட்டங்களும் வந்து சேர்ந்திட்டுதிகள். இதுதான் நடந்தது சேர்.” விஸ்வலிங்கம் முக்கிய செய்திகளைக் கூறிமுடிக்கிறார். எனக்குக் காது விறைத்துப் போய்விட்டது. என்னால் பேசமுடியவில்லை. நான் மௌனமாக இருக்கின்றேன்.

"என்ன சேர் யோசிக்கிறியள்..." விஸ்வலிங்கம் கேட்கிறார்.

"என்னத்தைப் பேசுகிறது... இது பாடசாலை மாணவர்களுக்கிடையிலை நடந்திருக்கு. அதுதான் பெருத்த கேவலம். இப்பத்தையில் பிள்ளையளிட்டைப் பண்பெண்பது அடியோடை இல்லாமல் போச்சு. பெருங்கவலையா இருக்கு. பாடசாலைப் பெயர் வளைவு கட்டி அந்தத் திறப்பு விழா நடத்தி சூடாறத்துக்கு முன்னம் சாதிக் கலவரம். இப்படியொரு பள்ளிக்கூடம் தேவையா...? எனது மனம் கொதிக்கிறது.

"சேர் நான் சொல்றதைக் கொஞ்சம் கேக்கிறீங்களா..." விஸ்வலிங்கம் மிக அடக்கத்தோடு என்னிடம் கேட்கிறார்.

"என்னையா சொல்லப் போறியள். சொல்லுங்கோ..." நான் மிகவும் அலுத்துப் போன மன நிலையில் கேட்கிறேன்.

"நீங்கள் உங்கடை காலத்துப் பாடசாலைகளோடு இக்காலத்துப் பாடாசலைகளையும் ஒப்பிட்டுப் பாக்கிறியள். அதாலைதான் உங்கடை மனம் அவலப்படுகிறது." விஸ்வலிங்கம் மிகவும் மிகவும் அமைதியாகப் பேசுகிறார்.

நான் எதுவுமே பேசாமல் விஸ்வலிங்கத்தின் முகத்தைப் பார்த்தபடி இருக்கின்றேன். அவர் தொடர்கிறார்.

"சேர்... அப்போதைய கல்வி நிலையங்கள் ஆலயங்களாகவே மதிக்கப்பட்டு வித்தியாலயங்கள் என்று அழைக்கப்பட்டன. அந்த வித்தியாலங்கள் மனிதத்தைத்தான் விழைவித்தன.

இன்று அந்த வித்தியாலயங்கள் தொழிற்சாலைகளாக மாற்றப்பட்டு விட்டன. இங்கு பரீட்சையில் சித்தியடையக் கூடிய கற்பித்தல் செயற்பாடுகள் தான் நடக்கின்றன. அத்தோடு விஞ்ஞான தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மாணவர்களின் சமூகத் தொடர்பு களைத் திசைதிருப்பி அவர்களின் சிந்தனை விருத்தியின் எல்லைகளைச் சுருக்கிவிட்டது. இதுதான் இன்றைய சமூகநிலை." இப்படிக் கூறிய விஸ்வலிங்கம் கண்ணிமைக்காமல் என்னைப் பார்க்கிறார்.

நானும் எதுவுமே பேசாமல் அவரையே பார்க்கின்றேன்.

அவர் மீண்டும் பேச ஆரம்பிக்கிறார்.

"எங்களுடைய பாடசாலையின் அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பண்புவிருத்திச் செயற்பாடுகள் மேற்கொள்வது பற்றி நீங்கள் பேசியதையும் அதைச் சபையோர் மறுத்தது பற்றியும் நான் கேள்விப்பட்டேன். மிகவும் வேதனைப்பட்டேன். இன்றைய விஞ்ஞான யுகத்தில் கல்வி நிலையங்களுக்குப் பெளதீக வளங்கள் அவசியம் என்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை." இப்படிக் கூறிவிட்டு விஸ்வலிங்கம் மீண்டும் மெளனிக்கிறார். நான் அவரைப் பார்த்தபடியே இருக்கின்றேன்.

அவரது கண்ணிமைகள் இரண்டுக்கும் இடைப்பட்ட பகுதியில் சுருக்கங்கள் விழுந்து நெழிகின்றன. சுட்டு விரலால் கீழுதட்டைத் தடவியபடி மீண்டும் பேச ஆரம்பிக்கிறார். "மாணவர்களின் மனங்களில் மனித பண்புக் கூறுகளை விளைவிக்காத பெளதீக வளங்களின் வளர்ச்சி நாட்டில் சிறைச்சாலைகளைத்தான் தோற்றுவிக்கும்" விஸ்வலிங்கம் இப்படிக் கூறிவிட்டுத் தலை குனிந்து இருக்கிறார்.

நான் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்படுகின்றேன். நமது பாடசாலையில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்ட பெயர் வளைவு தெரிகின்றது. பெயர் வளைவின் கீழ் பொலிஸ் வாகனம் நிற்பதும் தெரிகிறது.

- கே.ஆர்.டேவிட்

# நாட்டுக்கூத்து

கூத்தது காண வென்றே
குவிந்திடும் மக்கள் கூட்டம்
பார்த்ததைச் சுவைக்கும் நன்கு
பாயதில் அமர்ந்தவாறே
மூத்தவர் இளையோரெல்லாம்
முதலிடம் பிடித்துக்கொள்வார்
பூத்திடும் காலைப்போது
பூரிப்பில் எழுந்து போவார்

சித்திரை வந்தால் போதும்
தேனகம் மட்டக்களப்பில்
மத்தள ஓசை கேட்கும்
மாடதன் வண்டில் தன்னில்
எத்திசை இருந்தும் மக்கள்
ஏகுவார் களரி நோக்கி
புத்துணர்வூட்டும் எங்கள்
பூர்வீக நாட்டுக் கூத்து

ஆட்டத்தைச் சொல்லலாமோ
அகமதில் நிறைந்து கொள்ளும்
பாட்டதைப் பேசலாமோ?
பரம்பரைக்கலை விழாவை
போட்டியே போட்டுக் கொண்டு
பொழுதிரா முழுதும் காணும்
கூட்டத்தைக் கூறலாமோ?
கூத்ததன் மகிமை என்னே!

முன்னவர் தந்த சொத்து
முத்தமிழ் வாழும் கூத்து
விண்ணது தானும் கண்டு
வியந்திடச் செய்யும் கூத்து
கண்ணெனக்காக்க வேண்டும்
கலையது நிலைக்க வேண்டும்
என்னரும் தமிழர் போற்றும்
இணையிலாக்கலையே வாழ்க!

- **வாகரைவாணன்**

# தமிழ்த்தாயே வாழியவே

தமிழே எங்கள் உயிர் என்போம்
தமிழே எங்கள் தாய் என்போம்
தமிழே எங்கள் கலை என்போம்
தமிழே எங்கள் வாழ் வென்போம்

அழகும் எழிலும் ஒன்றல்லோ
அதிலே மலர்வது தமிழல்லோ
இனிமை தருவது தமிழல்லோ
இன்பம் தருவதும் அதுவல்லோ

அடியார் பாடிய அன்புத்தமிழ்
அறிஞர் படைத்த அழகு தமிழ்
கம்பன் கையில் தவழ்ந்த தமிழ்
காவியம் போற்றும் காதல் தமிழ்

மங்கா மதியாய் நின்றுலவும்
மாறாச் செல்வம் ஆன தமிழ்
தரணி தன்னில் புகழோடு
தமிழ் தாயே நீயும் வாழியவே!

- **சிவஞானம் மகேந்திரராஜா**




## பொங்கல் வாழ்த்துக்கள்

'தாயக ஒலி'யின் வாசகர்களுக்கும் சந்தாதாரர்களுக்கும் விளம்பரங்கள் தந்து எம்மை ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கும் விளம்பரதாரர்களுக்கும் படைப்பாளிகளுக்கும் ஆலோசனைகள் நல்கிக் கொண்டிருக்கின்ற ஆற்றல் மிக்கோர்களுக்கும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் மற்றும் 'தாயக ஒலி'யின் வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்படும் அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்களை அன்புடன் தெரிவிப்பதில் பெருமையடைகின்றோம்.

இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம்

# சங்ககாலத் தமிழரின் 'கடவுட் கோட்பாடு'

வாகரைவாணன்

தமிழர் வரலாற்றின் கொடு முடியாகத் திகழ்வது சங்ககாலம் (கி.மு. 500-கி.பி.200) ஆகும். இது காரணமாகவே அக்காலத்தைப் பொற்காலம் என்றும் வீரயுகம் என்றும் போற்றுவர்.

இப்போற்றலுக்கும் புகழுரைக்கும் தமிழரின் தனித்துவம், தன்னம்பிக்கை, மத உணர்வோ, கடவுள் வணக்கமோ இல்லாத உலகியல் போக்கு (Materialistic Way of Life) விண்ணையும் ஆய்வுக்குட்படுத்தும் விஞ்ஞான அறிவு. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பாடு, மன்னனை இறைவனாகக் கருதும் மாண்பு, போர்க்களத்தில் வீர மரணம் எய்திய மாவீரர்களின் நடுகற்களைக் கடவுளாகக் கருதி கைகுவிக்கும் வழக்கு, கொடைத்திறம் என்பவற்றை ஏதுக்களாகக் குறிப்பிடலாம். உலகப் பெரு நாகரிகங்களில் சமேரிய நாகரிகமும் (கி.மு.5000) சிந்து சமவெளி நாகரிகமும் (கி.மு 3000) அடங்கும். இவ்விரு நாகரிகங்களும் திராவிடருடையது என்னும் கருத்து ஆய்வாளர்களால் முன்வைக்கப்படுவதுண்டு. குறிப்பாக, சிந்து சமவெளி நாகரிகம் திராவிடருடையது என்னும் கருத்தை முன்வைத்தவர்களில் ஸ்பானிய நாட்டு அருட் தந்தை கீராஸ் (Heras) அடிகள் மிக முக்கியமானவர்.

தற்போது ஆய்வாளர் ஐராவதம் மகாதேவன் சிந்துசமவெளி எழுத்துக்கள் திராவிட மொழி சார்ந்தவை என்று குறிப்பிட்டுள்ளமை கீராஸ் அடிகளின் கருத்திற்கு வலுச் சேர்ப்பதாக அமைந்துள்ளது. ஆனால் இவ்விரு நாகரிகத்தையும் தோற்றுவித்தவர்கள் திராவிடரெனில் அவர்களையும் இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முற்பட்ட சங்ககாலத் தமிழரையும் பெரிதும் வேறுபடுத்தி வைப்பது கடவுள் பற்றிய கோட்பாடா கும். எனவேதான் சங்க இலக்கியங்களினூடாக அதனை இக்கட்டுரை ஓரளவேனும் ஆராய முற்படுகின்றது.

சங்க காலத்தை அக்காலத்தின் தொடக்கத்தில் வாழ்ந்த தமிழரின் சுயசிந்தனைக்குரிய காலம் என்றே கொள்ளவேண்டும். அந்த அளவுக்கு அம்மக்களின் உள்ளம் இயற்கையுடன் ஒன்றித்திருந்தது. அவ்வியற்கையில் குறிப்பாக நிலத்தின் அழகிலும் இளமைப் பொலிவிலும் தம்மைப் பறிகொடுத்த தமிழர் அவை இரண்டையும் ஒன்றாக்கி அதற்கு 'முருகு' (இச்சொல்லுக்கு அழகு, இளமை என்று பொருள்) என்று பெயரிட்டு அதனைத்தம் தெய்வமாகவே கொண்டனர்.

தமிழறிஞர் திரு.வி.க. அவர்கள் இக்கோட்பாடு பற்றி எழுதுகையில் அழகினையே தமிழர் முருகனாக வழிபட்டனர் என்பார். (டாக்டர் அ.தட்சணாமூர்த்தியின் தமிழர் நாகரிகமும் பண்பாடும் - பக்கம் 294)

அழகைத் தெய்வமாக ஆராதித்த தமிழர்கள் தாம் பெரிதும் போற்றும் வீரம், வெற்றி என்னும் விழுமியங்களை ஒன்றாகவே கருதி அதற்குக் கொற்றவை (கொற்றம் + அவ்வை) என்று பெயரிட்டு அதனையும் தெய்வமாகக் கண்டனர். பின் இது மறவர்களின் பாலை நிலத் தெய்வமாகவும் கொள்ளப்பட்டது. தமிழரின் இவ்வீரத் தெய்வம் பிற்காலத்தில் ஆரியரின் காளி, துர்க்கையாக மாற்றப்பட்டமையை சிலப்பதிகாரம், கலிங்கத்துப்பரணி ஆகிய நூல்கள் உணர்த்தும்.

சங்ககாலத் தமிழரின் இயற்கைத் தெய்வங்கள் இரண்டும் அம்மக்களின் அகம், புறம் என்னும் வாழ்க்கைப் பண்பாட்டைத் துல்லியமாக வெளிப்படுத்தும். அழகின் தெய்வமாக முருகன் வணங்கப் பட்டாலும் அவன் கொற்றவையைப் போல் போர் தெய்வமாகவும் விளங்கியமையை சங்க இலக்கியங் களிலிருந்து அறியலாம்.

இத்தகு தெய்வங்களைப் படைக்கும் பண்பாட்டுப் பணியில் தமிழர் மட்டுமன்றி கிரேக்கர், உரோமர், எகிப்தியர் முதலானோரும் ஈடுபட்டிருப்பினும் அத் தெய்வங்களின் இயல்புகளுக்கும் தமிழர் தெய்வங்களின் இயல்புகளுக்குமிடையே காணப்படும் வேறுபாடு மலைக்கும் மடுவுக்கும் இடையே உள்ளதைப் போன்றது. ஆனால் தமிழர் தெய்வ வழிபாட்டோடு ஆரியர் தெய்வ வழிபாடு கலந்த பின்பு (திருமுருகாற்றுப்படை, பரிபாடல் ஆகிய நூல்களில் இதனைக் காணலாம்) தமிழர் தெய்வங்கள் தம் தனித்தன்மையை இழந்துவிட்டன. (இதனை முருகன் ஆறுமுகனாகவும் கார்த்திகேயனாகவும் கந்தனாகவும் மாற்றப்பட்டமை காட்டும்)

தமிழர் தாம் 'படைத்த 'முருகு' என்னும் தெய்வம் வள்ளி என்பவளை மனைவியாகக் கொண்டிருந்தமையை 'முருகு' புணர்ந்தியன்ற வள்ளி போல' என்று நற்றிணை (பாடல் 82) கூறுவதன் மூலம் அறிகின்றோம். ஆனால் வள்ளி என்னும் சொல்லுக்கு வளம் என்னும் (வள்-வளம்) பொருள் இருப்பதால் அது மலை வளம் மிக்க குறிஞ்சி நிலத்தையே குறிக்கும். இதிலிருந்து வள்ளி, முருகு என்னும் பெயர்கள் குறிஞ்சி நிலத்தையும் அதன் இயற்கை அழகையும் சுட்டி நிற்கின்றமை கண்கூடு. ('முருகு' வின் இரண்டாம் மனைவி என்று சொல்லப்படும் தேவயானை பரிபாடல் காலத்திற்குப் பின் ஆரியரால் உருவாக்கப்பட்ட படைப்பாகும்.)

தமிழர் தனித்துவம் மிக்க தம் வாழ்க்கை முறையால் தலை நிமிர்ந்து நின்ற காலத்திலே (சங்க காலத்தின் தொடக்கத்தில்) தமிழ்நாட்டினுள் மெல்ல ஊடுருவிய வட இந்திய வைதிகம், சமணம், பௌத்தம் ஆகிய சமயங்கள் பழந்தமிழருக்கொவ்வாத போதனைகளை முன்னெடுத்த நிலையில், வைதிகத்தின் பௌராணிகக் கதைகளாலும் தத்துவ விளக்கங்களாலும் கவரப்பட்ட பல்யாகசாலை முது குடுமிப் பெருவழுதி, சோழன் இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகிய அரசர்கள் அதன் வசமாயினர். ஆயினும் சங்க காலத் தமிழரில் மிகப் பெரும்பாலானோரை வைதிகத்தாலோ அல்லது ஏனைய சமயங்களாலோ ஆட்டி அசைக்க முடியவில்லை. அந்த அளவுக்கு அவர்களின் பாரம்பரியப் பண்பாடு மிக இறுக்கமாகவே இருந்தது.

சங்க இலக்கியங்களில் வருணன், இந்திரன், முக்கண் செல்வர், விட்டுணு, பிரமன் ஆகிய தெய்வங்கள் இடம்பெற்றிருக்கின்றமையைக் கொண்டு தமிழர்கள் அத் தெய்வங்களை வழிபட்டனர் எனக் கருதுவது தவறென்பதை நடுகல் வழிபாடு கி.பி 12ம் நூற்றாண்டு வரை அவர்களிடமிருந்து பிரிக்க முடியாமல் தொடர்ந்து இருந்தமை வெளிப்படுத்தும். எனினும் இவ்வழிபாடு இன்றும் தமிழ் நாட்டின் சில பகுதிகளில் இடம்பெறுவதாக அறிய முடிகின்றது.

வட இந்தியாவில் ஆரியர்கள் நான்கு வேதங்களைப் பாடிக்கொண்டிருந்த நேரத்தில் தமிழ் நாட்டில் தம் வாழ்க்கையை அகம்புறம் என்று வகுத்து வாழ்ந்த தமிழருக்கு வீரமே தெய்வமாக விளங்கியமை ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல.

தமிழரின் இந்த வாழ்க்கைப் போக்குத்தான் அவர்களை வைதிகத்தின் பக்கம் செல்லவிடாமல் தனித்து நடைபோட வைத்துள்ளது. சங்ககாலத்தில் வட இந்திய இதிகாசக் கதைகள் (இராமாயணம், மகாபாரதம்) வழக்கில் இருந்த போதும் தமிழர் அவற்றுக்குக் காது கொடுக்காமல் விட்டமைக்கும் அதுவே காரணம்.

பல்லவர் காலத்தில் (கி.பி 6-9வரை) தமிழரிடையே பெரும் செல்வாக்குப் பெற்று, மாணிக்கவாசக ரால் 'தென்னாடுடையவனே' என்று போற்றப்பட்ட சிவன் பற்றி தொல்காப்பியம் பேசாமைக்கும் சங்க இலக்கியங்கள் அப்பெயரையே குறிப்பிடாமைக்கும் சிவ வழிபாடு அப்போது பெரிதாக இடம்பெறவில்லை என்பதையே காட்டும்.

இது போன்று தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் சமயம், மதம் என்னும் சொற்கள் இடம்பெறவில்லை என்றும் மறைமலை அடிகளின் கூற்றும் (தமிழ் மதம் பக்கம் 46) அன்றையத் தமிழர், சமயம் என்னும் தளைக்குள் கட்டுப்படாது முருகு, கொற்றவை, நடுகல் முதலான வழிபாடுகளிலேயே முழுமையாக ஈடுபட்டமையை உணர்த்தும்.

தமிழர் தனித்துவமான ஓர் இனம். அதனை நிரூபிக்கும் அடையாளங்களில் ஒன்று அவர்களின் நடுகல் வழிபாடு. எனவேதான் அவ்வடையாளங்களைக் கொண்டுள்ள சங்கப்பாடல்களில் மூன்றும் அவற்றின் சுருக்கமான பொருளும் இங்கே முன்வைக்கப்படுகின்றது.

அவன் ஒரு மாவீரன். எதிர்த்து வந்த படையை முன்னேறாது தடுத்து நிறுத்தியதோடு எதிரியின் யானை ஒன்றையும் கொன்று வீழ்த்துகின்றான். அவன் உயிரும் பிரிகின்றது. இத்தகைய பெருவீரனை நினைவுகூரும் விதத்தில் நடப்பட்ட நடுகல் மீது அவ்வூர் மக்கள் நெல்லையும் பூவையும் சொரிந்தபடி இதனை விட வேறு கடவுள் இல்லை என்கின்றனர். அப்பாடல் வருமாறு :

***ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி***
***ஒளிறு ஏந்து மருப்பின்களிறு எறிந்து வீழ்ந்தெனக்***
***கல்லேபரவின் அல்லது***
***நெல் உகுத்துப்பரவும் கடவுளும் இலவே (புறம் - 335)***

அவள் ஒரு மறப் பெண். போர்க்களம் புகுந்த தன் கணவன் வெற்றியோடு வீடு திரும்ப வேண்டுமென்று தனது முந்தையரின் நடுகல்லைக் தொழுது நிற்கின்றாள். அதாவது வீரத்தை வணங்குகின்றாள். அப்பாடல் இங்கு தரப்படுகின்றது.

***களிறு பொரக்கலங்கு, கழல்முள்வேலி***
***அரிது உண்கூவல் அங்குடிச் சீறூர்***
***ஒலிமென் கூந்தல் ஒண்ணுதல் அரிவை***
***நடுகல்கைதொழுது பரவும் (புறம்306)***

அவன் ஓர் ஊர்த்தலைவன், மாவீரன். அதனால் அவன் வாழும் வீடு அரவம் வாழும் புற்று என வர்ணிக்கப்படுகின்றது. இக்கருத்தைத் தரும் பாடல் இது.

***இல்லடு கள்ளின் சில்குடிச்சீறூர்***
***புடை நடுக்கல்லின் நாட்பலியூட்டி***
***நன்னீர் ஆட்டி நெய்ந்நறைக் கொணீஇய***

*மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும்*
*அருமுனை இருக்கைத்து ஆயினும் வரிமிடந்து*
*அரவுஉறை புற்றத்து அற்றே (புறம்-329)*

நடுகல்லை வழிபட்ட தமிழர் தம் மன்னனையும் தெய்வமாக வழிபட்டமையையும் சங்க இலக்கியம் சொல்லும். மனிதன் என்பவன் தெய்வமாகலாம் என்று இன்று அல்ல அன்றே உணர்த்தியவன் தமிழன். இதனை

*முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு*
*இறை என்று வைக்கப்படும்.*

என்று வள்ளுவர் மொழிவதற்கு சங்ககாலத் தமிழ் பண்பாடே காரணம். ஏனெனில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் வள்ளுவர்.

சங்ககாலத்துத் தமிழனுக்கு உலகின் உயிராக விளங்கியவன் மன்னவன். அரசன் எவ்வழியோ குடிகளும் அவ்வழி என்னும் உயர்ந்த குறிக்கோளை உடையவர்கள் தமிழர்கள். இதனை புலவர் மோசிகீரனார்.

*நெல்லும் உயிரன்றோ நீரும் உயிரன்றோ*
*மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் (புறம் 188)*

என்று அழகாகப் பொருள்படக் கூறுவார்.

சங்ககாலத்துப் புலவர்களில் பொய்கையார் என்பவரும் ஒருவர். தொண்டி என்பது அவரது ஊர். சேரமான்கோக்கோதைமார்பன் ஆட்சிக்குட்பட்டது அது. அதனால் அரசனின் அருமை பெருமைகளை அவர் நன்கறிவார். ஒருநாள் இரவலன் ஒருவனை அவர் சந்திக்க நேரிடுகின்றது. அப்போது அரசனைப் பற்றி அவ்விரவலனிடம் அவர் கூறும் போது 'அவன் எம் இறைவன்'(புறம்-48) என்கிறார்.

மன்னனைத் தெய்வமாக வணங்கிய சங்காலத் தமிழர்கள் அவன் அரண்மனையையே கோயிலாகவும் (கோ-அரசன்,இல்-மனை) கொண்டார்கள் என்பதினை புறப்பாடலில் (378) இடம்பெற்றுள்ள 'சோழன்கோயில்' என்னும் சொல்லாட்சி தெளிவுபடுத்தும்.

இவ்வரலாற்றை நன்கு கற்றறிந்தவரான பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்கள் இயற்கை நெறிக்கால மக்கள் மனதில் மன்னன் பெற்ற இடத்தை தோத்திர பாடல்கள் காலத்தில் கடவுள் பெற்றார் (தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் - பக்கம் 96) என்று கூறுவார்.

பேராசிரியர் சொல்லும் தோத்திரப் பாடல்களுக்கான காலம் என்பது சங்ககாலத் தமிழரோடு எவ்விதத்திலும் சம்பந்தம் இல்லாத புராண இதிகாசக் கதைகளை இசைப்பாடல்களாக்கிய பல்லவர் காலம் (கி.பி 6-9 வரை) தான்.

நாடாண்ட பல்லவர்கள் தமிழர் அல்லாதவர் என்பதினால் அவர்களும் பக்தி வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய பக்கத்துணையானார்கள். அந்த வெள்ளத்தில் முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழரால் கட்டிக்காக்கப்பட்ட சங்ககாலம் என்னும் வீரயுகத்தின் ஒரு பெரும் அடையாளமான 'கடவுட் கோட்பாடும்' மூழ்கிப்போனதை என்ன வென்று சொல்வது?

# தாகம் தீர்த்த முயல்

முயலுக்கு ஒரே தாகமாக இருந்தது.

எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்தது. தண்ணீர் கிடைக்கவில்லை.

அலைந்து திரிந்து களைத்துவிட்டது.

வழியில் ஒரு தென்னை மரத்தினைக் கண்டது.

அதில் இளநீர் குலை குலையாகத் தொங்கியது.

ஆ... இளநீர்!

தென்னை மரத்தில் முயல் ஏற முயன்று பார்த்தது முடியவில்லை.

தென்னை மரத்தில் அணில் ஒன்று ஏறுவதைக் கண்டது. அணிலிடம் இளநீர் பிடிங்கித்தரும்படி கேட்டது.

அணில் இளநீரை தனது வாயினால் அரித்தது. இளநீர் கீழே விழுந்தது.

குரும்பை மாத்திரமே இருந்தது இளநீர் இருக்கவில்லை.

மரத்துக்கு மரம் தாவியபடி குரங்கு ஒன்று அங்கே வந்தது.

முயல் குரங்கிடம் இளநீர் பிடிங்கித் தரும்படி கேட்டது.



குரங்கு இளநீர் ஒன்றைப் பிடிங்கிப் போட்டது. இளநீர் கீழே விழுந்ததும் வெடித்துச் சிதறியது.

இளநீர் வெடிக்காமல் இருக்க கீழே இலைகள் ஓலைகளைப் பரப்பியது முயல்.

அப்பொழுது ஏதோ சரசரக்கும் சத்தம் கேட்டது. முயல் ஓடிச் சென்று ஒளித்துக் கொண்டது.

அவ்வழியாக வந்த தோட்டக்காரர் தென்னை மரத்தில் இருந்த குரங்கினை கண்டார்.

ஒரு தடியைக் கொண்டு குரங்கினைக் கலைத்து விட்டார்.

குரங்கும் போய்விட்டது.

நான் எப்படி இளநீர் குடிப்பது ஒரே தாகமாக இருக்கின்றது என்று யோசித்த முயல் தென்னை மரத்தில் சாத்தி வைத்திருந்த தடியைக் கண்டது.

அத்தடியால் இளநீரைப் பிடிங்கியது.

இளநீர், பரப்பி வைத்த இலைகள் ஓலைகளுக்கு மேல் வந்து விழுந்தது.

முயல் சந்தோஷமாக இளநீரைக் குடித்துத் தாகத்தைத் தீர்த்துக் கொண்டு தனது இருப்பிடம் சென்றது.

**- ஹேமா ஹதீபன்**

# கனடாவில் சோக்கல்லோ சண்முகம்

**வைரமுத்து திவ்வியராஜன்**

சமூக இருப்பில் மனிதர்கள் தம்மை ஏதோ விதத்தில் அடையாளப்படுத்தவும் தம்மால் இயன்ற பங்களிப்பினை வழங்கவும் விரும்புவர். தமது கல்வி, கலை பொருளாதார வளங்களினாலும் தமது தனித்துவமான திறமைகள் ஆளுமைகளினாலும் இத்தகைய சமூகப்பங்களிப்பினை அவர்கள் ஆற்றுவர். இந்த வகையில் தமது கலை ஆளுமைகளின் ஊடாக கலைப்பங்களிப்பினை சமூகத்துக்கு வழங்கி வரும் ஓர் அருங்கலைஞராக சோக்கல்லோ சண்முகம் என்று அழைக்கப்படும் மயில்வாகனம் தாமோதரம்பிள்ளை சண்முகநாதன் அவர்களை நாம் அடையாளப்படுத்தலாம்.

தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் சோக்கல்லோ சண்முகம் அவர்களை சிறந்த நாடகக் கலைஞரகாவும் வில்லிசைக் கலைஞராகவும் பலரும் அறிந்து வைத்திருக்கிறார்கள். இலங்கை யாழகத்தில் ஏழாலைக் கிராமத்தில் தாமோதரம்பிள்ளை - இரத்தினம் தம்பதிகளின் புதல்வராக 1935 ஆவணி ஒன்றில் சண்முகநாதன் பிறந்தார். இவர் சிறுவயதிலேயே கலைகளில் மிகுந்த நாட்டம் உள்ளவராகத் திகழ்ந்தார். தனது பத்தாவது வயதில் தனது நண்பர்களையும் சேர்த்துக்கொண்டு கிடுகுகளால் மறைப்புக்கட்டி வாங்கில்களை மேடை ஆக்கி 10சதம் அனுமதிச்சீட்டும் வைத்து கிராமத்தில் நாடகம் போட்டவர் இவர். சிறுவயதில் தாயார் இறந்ததன் பின்னர் மாமாவுடன் மலையகம் செல்ல நேர்ந்தது. அங்கு எட்டாம் வகுப்புவரை (JSC) கல்வியைத் தொடர்ந்த இவர் தேயிலைத் தோட்டத்தில் மேற்பார்வையாளராக சிலகாலம் வேலை செய்தார்.

எழுத்துத்துறையிலும் ஆர்வம் கொண்ட இவர் தனது 22வது வயதில் “கோமதியின் கணவன்” எனும் முதல் நாவலை அச்சிட்டு வெளியிட்டார். 1970களில் மீண்டும் யாழ் வந்த சண்முகம் அவர்கள் அப்போது காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலையில் வேலை செய்த நாடகக் கலைஞர் எஸ்.கணபதிப்பிள்ளை அவர்களின் பல நாடகங்களில் நடித்தார். திரு.கு.வினோதன் அவர்களின் உதவியுடன் 1978ல் கொழும்புக்கு வந்த சண்முகநாதன் அவர்கள் எஸ்.ரி.சிவநாயகம் அவர்கள் ஆசிரிய ராக இருந்த தினபதி, சிந்தாமணி பத்திரிகை நிறுவனத்தில் ஒப்புநோக்காளராக (Proof Reader) கடமை ஏற்றார்.

கொழும்பில் எனது நண்பர் சட்டத்தரணி சோ.தேவராஜா மூலமாக சண்முகம் அவர்களை ஓரளவுக்கு நான் அறிந்திருந்த போதிலும், கனடாவில் வாழ்ந்த அவரின் மகளின் இழப்பைத் தொடர்ந்து கனடாவுக்கு 2008ல் அவர் புலம்பெயர்ந்த பின்னாலேயே அவருடன் நெருக்கமாகப் பழகக் கூடிய வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. கனடாவில் இவர் ஒரு சிறந்த வில்லிசைக் கலைஞராகவும் சிறந்த நடிகராக வும் விளங்கி வருகின்றார். கனடாவில் வில்லிசையைத் தொடருவதில் இவருக்கு ஊக்கமளித்தோரில் அமரர் கே.எஸ்.பாலசந்திரன் அவர்கள் முக்கியமானவர். அவரே முதன் முதலில் தனது சொந்தச் செலவில் ஒரு வில்லினை வாங்கி இவருக்கு அன்பளித்து ஊக்குவித்தவர். வில்லிசை என்று வரும்போது தாயகக் கலைஞர்களான லடீஷ் வீரமணி, சின்னமணி, உடப்பு சோமாஸ்கந்தர், சுதுமலை வடிவேலு, மாஸ்டர் சிவலிங்கம், ராஜம் புஸ்பவனம் போன்றோர் இவரை ஊக்குவித்தவர்கள் ஆவர். இசையோடும்,


நடிப்போடும் கதை சொல்லுவது வில்லிசை ஆகும். (Musical Story Telling) நகைச்சுவை உணர்வு இதில் பெரிதும் மேலோங்கி இருக்கும். அதனையே பார்வையாளரும் அதிகம் விரும்பி இரசிப்பர். நகைச்சுவையைக் கொணரும் விதத்தில் சேர்ந்து பங்கெடுப்போர் பல்வேறு வினாக்களைத் தொடுப்பதும் கலைஞர் பதிலளிப்பதும் இடையிடையே குறுக்குக் கேள்விகள் எழுவதும் வில்லிசையை ஜனரஞ்சகமானதாக ஆக்கும் உத்தியாக அமைந்திருக்கும். பிரதான வாத்தியக் கருவிகளாக ஹார்மோனியம், மத்தளம், கடம், உடுக்கு, உறுமி, மிருதங்கம், தபேலா, கெஞ்சிரா போன்றவை பாவிக்கப்படும். தற்போது கீபோட், டட்றம்ஸ் ஆகியவைகளும் சில இடங்களில் வயலினும் பாவிக்கப்படுவதைக் காணலாம். நாட்டார் இசையில் பொதுவாக பல பாடல்கள் இசைக்கப்படுவதால் ஹார்மோனிய இசையையே பலரும் விரும்புகிறார்கள். அதில் ஒரு பழமையையும் இரசிகர்கள் காணுகின்றார்கள். பாடல்களின் இசையும் சுருதி, தாளம், தவறாமல் இனிமையாகப் பாடும் விதமும் கதை செல்லும் சொற்தெளிவும் நடிப்பும் மேலோங்கும் நகைச்சுவையும் வில்லிசையின் தரத்தினை உயர்த்தும். பிரதான கதை சொல்லி மாத்திரம் அன்றி சேர்ந்து இருக்கும் குழுவினர் அனைவருமே வில்லிசையின் சிறப்புக்குப் பங்களிப்பர். இது ஒரு கூட்டுக்கலை முயற்சி ஆகும்.

இனி வில்லிசையில் என்ன விதமான கதையைத் தேர்ந்தெடுக்கின்றோம் என்பதும் முக்கியமானதாகும். கண்ணகி கதை, திரௌபதி கதை, நல்லதங்காள் கதை, ஸ்ரீவள்ளி, சத்தியவான் சாவித்திரி கதை போன்ற வழமையான கதைகளுக்கு அப்பால் சமூகத்துக்குப் பயன்படக்கூடிய புதிய சமூகக்கதைகளைக் கையாளும் போது அவை சமூகத்தில் பல்வேறு தாக்கங்களையும் உருவாக்கும்.

கனடாவில் தனக்குப் பழக்கமான சில நண்பர்களையும் சேர்த்துக்கொண்டு வில்லிசை நிகழ்ச்சிகள் வழங்கி வரும் சோக்கல்லோ சண்முகம் அவர்களின் வில்லிசையில் கதைப்பொருளாக பாரதியும், பெண் விடுதலையும், சாதீய எதிர்ப்பும், மானிட சமத்துவமும் வெளிப்படுவதைக் காணலாம். மாக்சிய இடதுசாரிக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டவர் என்பதால் முற்போக்குக் கருத்துக்கள் பல வில்லிசையினூடு விதைக்கப்படும். அங்கதச் சுவையே இவரது வில்லிசையின் பலமாகும். காத்திரமான விடயங்களையும் நாசுக்காக வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் நகைச்சுவை கலந்து சொல்லுவது இவரது தனித்திறமையாகும். ஓர் அப்பாவித்தனம் இவரது முகபாவத்திலும் கதை சொல்லும் பாணியிலும் எப்போதும் குடிகொண்டிருக்கும். ஆயினும் சமூக அடிமைத்தனங்களைச் சாடும்போதும், சத்தியத்தைப் பேசும் போதும் இவர் ஒரு பாரதியாகவே மாறி விடுவதையும் இவரது பேச்சிலும் கண்களிலும் கனல் தெறிப்பதையும் நாம் காண முடியும். இவரது வில்லிசையில் இலக்கியத்தரமும் மிகுந்திருக்கும்.

இதுவரை தாயகத்திலும் கனடாவிலும் இவர் செய்த வில்லிசைகளை பின்வருமாறு பட்டியல் இடலாம்.

1. கவிராஜன் கதை
2. விபுலானந்தக் தேன்
3. காளி உபாசகர் - இராமகிருஷ்ண பரமஹம்சர்
4. தமிழ்க்கிழவி
5. யேசு காவியம்
6. சத்திய சாயிபாபா
7. மகாகவியின் கண்மணியாள் காதை
8. எம்.ஜி.ஆர்
9. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
10. வீரசிங்கம்



நவீன நாடக முன்னோடிகளான அ.தாசீசியஸ், நா.சுந்தலிங்கம், குழந்தை சண்முகலிங்கம். சோ.தேவராஜா, ஏ.ரி.பொன்னுத்துரை போன்றோரின் வழிகாட்டுதல்களுடனும் நட்புடனும் பல்வேறு நாடகப் பயிற்சிப் பட்டறைகளிலும் திரு.சண்முகம் அவர்கள் கலந்து கொண்டு தனது நாடக ஆளுமைகளையும் வளர்த்துக்கொண்டார்.

இவர் பங்கேற்ற பிரதான நாடங்களை பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. எந்தையும் தாயும் - குழந்தை சண்முகலிங்கம்
2. கோடை - மகாகவி உருத்திரமூர்த்தி
3. மோகப்பறவை - மெலிஞ்சி முத்தன் (கனடா அரங்காடல் நிகழ்வுக்காக)

ஈழத்துச் சினிமாவைப் பொறுத்தவரை 'பொன்மணி' திரைப்படத்தில் 'கார்ச் சாரதியாகவும்', 'தெய்வம் தந்த வீடு' திரைப்படத்தில் ஒரு கதாப்பிரசங்கியாகவும் இவர் நடித்திருப்பதையும் நாம் குறிப்பிட வேண்டும். தான் எடுத்துக் கொண்ட கலைப்பணிக்கு முழுமையாகத் தன்னை அர்ப்பணிப்பது இவரது அருங்குணமாகும். "பசிநோக்கார் கண் துஞ்சார் கருமமே கண்ணாயினார்" என்பது இவருக்கு மிகவும் பொருந்தும். தன்னுடன் இணைந்து குழுவாக இயங்குவோரிடமும் இதையே இவர் எதிர்பார்ப்பார்.

ஈழக்கலைஞர்கள் ஈழத் தமிழ்ச் சமூகத்தால் போதிய அளவுக்கு கௌரவப்படுத்தப்படுவதில்லை என்ற ஆதங்கங்களும் இவருக்கும் உண்டு. ஈழக்கலைஞர்களின் உழைப்பிற்கான சன்மானத்தை நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துவோர் பெரிதும் வழங்குவதில்லை. ஈழக்கலைஞர்களுக்கு எவ்வளவு திறமை இருந்தாலும் தொழில்முறைக் கலைஞர்களாக வளரமுடியாமைக்கு இது முக்கிய காரணமாகும். தமிழகத்திலிருந்து அழைக்கப்படும் சினிமாக்கலைஞர்கள், சின்னத்திரைக் கலைஞர்கள், நிகழ்ச்சி தொகுப்பர்களுக்குக் கொடுக்கப்படும் மரியாதையில் சிறிதளவேனும் ஈழத்துக்கலைஞர்களுக்குக் கிடைப்பதில்லை. புறந்தள்ளும் இந்தப் போக்கை எப்போதும் எதிர்த்து வரும் சோக்கல்லோ சண்முகம் அவர்கள் சிறிது அளவிலேனும் சன்மானம் வழங்காத எந்த அழைப்பையும் ஏற்பதில்லை என்பதில் மிகவும் பிடிவாதமாகவே இருக்கிறார். கிடைக்கும் சிறு சன்மானத்தொகையும் தன்னுடன் பங்குபற்றும் கலைஞர்களுக்குப் பகிர்ந்து கொடுத்து விட்டு தனக்கென்று எதையும் எடுத்துக்கொள்ளாத சூழ்நிலைகளே இவருக்கு அதிகம். மிகுந்த கருணை உள்ளம் கொண்ட சோக்கல்லோ சண்முகம் அவர்கள் தாயகத்தில் நலிந்து போன கலைஞர்களுக்கு தம்மால் இயன்ற உதவிகளை தன்னளவில் அடக்கமாவும் அமைதியாகவும் செய்து வருகின்றார்.

தாயகத்தில் சோக்கல்லோ சண்முகம் அவர்களின் குழுவில் பிரியா ஜெயந்தி, மணிமேகலை, சிதம்பரம், கதிரேசன், கானாப்பாடகர் நவகம்புர கணேஸ், ஏ.எம்.சி ஜெயசோதி, பாரதி, டைட்டஸ் வீரமணி மடுல்கிரிய விஜயரத்ன, லத்தீப், பொஹாரி, சந்திரதாஸ், ஹரிதாஸ், சுலோசனா பாலசுப்பிரமணியம், ஜெயனி பாலசுப்பிரமணியம் ஆகியோர் பிரதானமாகப் பங்கேற்றிருக்கின்றனர்.

போர் நடைபெற்றுக்கொண்டிருந்த சூழலில் இனங்களை ஒன்றுபடுத்தும் பணியிலும் சோக்கல்லோ குழுவினர் மௌனமாக ஈடுபட்டது கவனிப்புக்குறியது.

சோக்கல்லோ சண்முகம் அவர்கள் இலங்கை வானொலியிலும், ரூபவாகினி தொலைக்காட்சியிலும் நாடகங்கள், உரைச்சித்திரங்கள் எழுதிப் பங்குபற்றியதோடு "கிராமவளம்", "புதிய உலகம்", "புதிய பாதை" ஆகிய நிகழ்ச்சிகளின் தயாரிப்பாளராகவும் இருந்துள்ளார். மிக அண்மையில் கனடா முதியோர்

சங்கத்திற்காக ஸ்காபறோ நகரில் 30 நிமிடங்களுக்கு சுருக்கி நிகழ்த்தப்பட்ட "வீரசிங்கம்" என்னும் வில்லிசைக்கு என்னையும் ஒரு பார்வையாளனாக இவர் அழைத்திருந்தார். வில்லிசை தொடங்கி முடியும் வரை அந்த மண்டபத்தில் கூடியிருந்த பல நூற்றுக்கணக்கான முதியோர்கள் மெய்மறந்தும், வாய்விட்டும் சிரித்தும் ஒன்றிப் போய் இருந்தை அவதானித்தேன். மணிக்கணக்கில் விடியவிடிய ஊரில் செய்த வில்லிசையை கனேடியச் சூழலுக்கேற்ப 30 நிமிடங்களுக்கு மட்டுப்படுத்தி பார்வையாளரை பரவசப்படுத்தும் வகையில் செய்வது இலகுவல்ல. இதற்கு அபூர்வ திறமை வேண்டும். அந்தத் திறமையை சோக்கல்லோ சண்முகத்தின் குழுவினர் நிரூபித்தனர். இவரது குழுவில் திரு.வீ.ரீ.இராஜேந்திரன், திரு.கனி விமலநாதன், திரு.ருக்மணிகாந்தன், சங்கீத பூசணம் திருமதி நளினி குகசீலன், திருமதி.இராஜமீரா இராசையா, திருமதி நமோ நாகேஸ்வரி, ஆசிரியர் திரு.சின்னத்தம்பி, கலைக்குவியல் திரு.கமல், திருமதி.மாங்கையற்கரசி சிவசுப்பிரமணியம் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

சக கலைஞர்களைக் கௌரவிப்பதில் சோக்கல்லோ சண்முகம் முன்னிற்பார். தாயகத்தில் இலங்கையர்கோன், கலையரசு சொர்ணலிங்கம், நடிகமணி வி.வி.வைரமுத்து போன்றோருக்குப் பல்வேறு சந்தர்ப்பங்களில் பக்கபலமாக இருந்து உதவியிருக்கின்றார். கனடாவில் கலைஞர் கே.எஸ்.பாலச்சந்திரன் அவர்களது விருது விழாவுக்கான 'தலைக்கோல்' ஏற்பாட்டாளர் இவரே. மொன்றியல் நடராஜா அவர்கள் இதற்கான அனுசரணையாளராக இருந்துள்ளார். கே.எஸ்.பாலச்சந்திரன் பற்றி "பாலச்சந்திரன் என்றொரு கலை ஆளுமை " என்ற நூலையும் இவர் இதில் எழுதி வெளியிட்டார்.

கலைஞன் சமூகத்தை நேசிக்கின்றான். சமூகத்தின் ஓர் அங்கமாக சமூகத்திலிருந்து கற்றுக் கொண்டு அந்தச் சமூகத்தை இன்னும் உயரிய நிலைக்கு இட்டுச்செல்ல தன் கலை ஆற்றலை அவன் பயன்படுத்துகிறான்.

கட்டடக்கலைஞனைப் போல், பொறியியலாளனைப் போல், விஞ்ஞானியைப் போல், மருத்துவரைப் போல் சமூகத்தை வளப்படுத்தும் சமூக விஞ்ஞானியாகவே கலைஞன் விளங்குகின்றான்.

வில்லிசை என்னும் தமிழரின் பழமை வாய்ந்த கலையை புலம்பெயர்ந்து வாழும் கனேடிய மண்ணிலும் பேணி வரும் அருங்கலைஞர் சோக்கல்லோ சண்முகம். அவர்களையும் அவரின் குழுவினரையும் நன்றியுடன் பாராட்டிப் போற்றுவோம். வாழ்த்துவோம்.


## 'தாயக ஒலி' சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஒரு வருடச் சந்தா | : | ரூபா 900(அஞ்சல் செலவுடன்) |
| வெளிநாடு | : | $30(U.S), £20(U.K) |


உங்கள் தாயக ஒலியின் வளர்ச்சிக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரவு நல்குங்கள்.

**தொடர்பு :**

**திருமலை பாலா**
(Thirumalai Bala)
London
07956486014

**வங்கிக் கணக்கு விபரம்**
T.Sivasupramaniam
A/C No : 8100086490
Commercial Bank
Wellawatte, Sri Lanka

# பாடும் நிலா எஸ்.பி.பாலசுப்பிரமணியம்



தமிழ்த் திரைஇசை உலகில் 1960களின் பிற்பகுதியில் இருந்து ஆரம்பித்த பயணம் ஐம்பது ஆண்டுகளையும் தாண்டி வீறுநடை போடுகின்றது. சாதனை வீரராக உலாவரும் பாடும் நிலா எஸ்.பி.பாலசுப்பிரமணியம் அவர்கள் இற்றைவரை நாற்பதாயிரம் பாடல்களைப் பாடி கின்னஸ் உலகசாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார். தொடர்ந்து பின்னணிப் பாடகராக முன்னிலை பெற்றிருக்கும் இவர் இசை வரலாற்றில் மிகவும் முக்கியமான இடத்தைப்பெற்று முகிழ்ந்து நிற்கின்றார்.

இவர் தமிழில் ‘சாந்தி நிலையம்’ படத்திற்காக ‘இயற்கை யெனும் இளையகன்னி’ என்று தொடங்கும் பாடலை முதல்முதலாகப் பாடினார். ‘அடிமைப் பெண்’ திரைப்படத்துக்காகப் பாடிய ‘ஆயிரம் நிலவே வா’ என்னும் பாடலே முதலில் வெளிவந்தது. தமிழ், கன்னடம், தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளில் திரை இசைப்பாடல்களைப் பாடியுள்ள இவருக்குப் பல தேசிய விருதுகள் கிடைத்துள்ளன. தமது இனிமையான குரலால் இசை ரசிகர்களை உலகளவில் ஈர்த்து வைத்திருக்கும் எஸ்.பி.அவர்கள் நாற்பதுக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்து சிறந்த நடிகராகவும் வலம் வந்துள்ளார். ‘மனதில் உறுதி வேண்டும்’ ‘சிகரம்’ ‘கேளடி கண்மணி’ ‘பிரியமானவளே’ ஆகியன அவர் நடித்த முக்கியமான படங்களாகும்.

எஸ்.பி.பாலசுப்பிரமணியம் உலகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து இசை நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றார். அந்த வகையில் ஐம்பது ஆண்டுகால பூர்த்தியை முன்னிட்டு அவரைக் கௌரவிக்கும் இசைநிகழ்ச்சிகள் ரஸ்சியா, சிங்கப்பூர், டுபாய், இலங்கை ஆகிய நாடுகளில் நடந்தேறியுள்ளன.

தாம் கடந்து வந்த பாதையை மிக அடக்கத்துடன் எஸ்.பி.இவ்வாறு தெரிவிக்கின்றார். “ஐம்பது ஆண்டுகாலம் நான் என் இசைப்பயணத்தை மேற்கொண்டுள்ளேன் என எண்ணும்போது மிகவும் ஆச்சரியமாக உள்ளது. ஒருவரால் இவ்வாறு ஒரு பயணத்தைக் கொண்டு செல்ல முடியுமா என நினைக்க இயலாத அளவு எனது இசைப்பயணம் நகர்ந்துள்ளது என்றால் அதற்கு எனது அர்ப்பணிப்பு மட்டுமல்லாது என்னைப் பலப்படுத்திய இசையமைப்பாளர்கள் இசைச் கலைஞர்கள், கவிஞர்கள் என்னுடன் பயணித்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் பங்கு உள்ளது. அதேபோல் இசையைச் சலிக்காது கேட்டுக்கொண்டு என்னை மேலும் உற்சாகப்படுத்தும் எனது அன்பான ரசிகர்கள் அனைவருக்கும் எனது வளர்ச்சியில் பங்களிப்பு உள்ளது.”



இசையுலகில் சாதனை படைத்து நிற்கும் மாமேதை பாடுநிலா எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தை ‘தாயகஒலி’யும் வாழ்த்தி மகிழ்கிறது.

**அகவை 98இல் தடம் பதித்து 'மக்கள் பணியே மகேசன் பணி' என்ற இலட்சிய நோக்கோடு வாழ்ந்து கொண்டிருக்கும் பெரியார் பொ.கந்தையா (காந்தி ஐயா) அவர்கள் 1950ஆம் ஆண்டு பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலை வெள்ளி விழா மலருக்கு எழுதிய கட்டுரையை மீள்பிரசுரம் செய்கிறோம். அவரால் எழுதப்பட்ட மூலப்பிரதியை அவரே தந்து உதவியுள்ளார்.**

**- ஆசிரியர்**

# இலட்சிய வாழ்வு




எல்லோரும் வாழ்கிறார்கள். விலங்குகளும் பறவைகளுமே வாழ்கின்றன. மரஞ் செடிகளும் வாழ்கின்றன. விலங்குகள் இயற்கையை ஒட்டியே வாழ்ந்து வருகின்றன. நம்மை அண்டிச் சீவிக்கும் விலங்குகள் கூட இயற்கையில் இருந்து அதிகம் விலகிவிடவில்லை. மரங்களும் அப்படியே. ஆனால் அரிதான மானிடப்பிறவியைத் தாங்கி வாழ்ந்த மக்கள் இன்று இயற்கையை விட்டு இன்னல் வாழ்க்கையில் இறங்கித் தவிக்கின்றனர். இறங்கிய வழியையும் கண்டிலர். ஏறும் விதத்தையும் தெரிந்திலர். ஐயயோ பரிதாபம். ஆனால் வாழ்வுக்கு வரைவிலக்கணம் செலுத்துவதில், எழுதுவதில் மகா வித்துவான்கள் ஆகவும் காட்சி அளிக்கின்றனர். இயற்கை வாழ்வு வாழும் மனிதனை கிராமத்தில் மட்டு மல்ல தேசத்திலும் கூடக் காண முடியவில்லை அப்படியானால் சித்திரத்திலே தான் கீறிப் பார்க்க வேண்டும்.

அன்று வாழ்ந்த இயேசு கிறிஸ்துவை சித்திரத்தில் பார்க்கின்றோம். இலட்சிய வாழ்வை இங்கு காண்கின்றோம். கற்பனை செய்கின்றோம். ஆனால் அப்படி வாழ முடியாது என்று முடிவுகட்டி விடுகின்றோம். புத்தர் பெருந்துறவைப் படிக்கின்றோம். அவரது ஞான ஒளியைப் பார்த்துக் கடவுளின் அற்புதத்தை வியக்கின்றோம். அரசிளங்குமாரனான புத்தர், ஞானகுருவான சரித்திரத்தைப் படித்த பின்பும் நமது வாழ்வுப் பாதையில் நாலடி வைக்க நாணுகிறோம். கதாப்பிரசங்கங்கள் ஆகவே புத்தர் சரித்திரத்தைச் சொல்லி விடுவோம். அப்படியே நபிகள் நாயகத்தின் பெருமைகளைப் பேசுவதிலும் நாம் பின்நிற்பதில்லை.

இராமகிருஷ்ண பரமகம்சரை அவர் சீடர் விவேகானந்த சுவாமிகளைப் பலர் நேரில் கண்டனர். கூடி வாழ்தனர். அவர்களும் மறைந்து விட்டனர். மிக அண்மையில் வாழ்ந்து போன பகவான் ரமணரைப் பார்த்தோம். பகவான் அரவிந்தரைக் கண்டோம். நாம் செய்து கொண்ட மாற்றங்கள் என்ன. இலட்சிய புருஷர்களைப் பார்த்தும் அவர்களோடு பழகுவதும் மறைந்த பின் அவர்களைப் புகழ்வதும் அவர்களுக்குக் கோயில்கள் கட்டுவதும் தான் எமது இலட்சியங்களாகி விட்டன.

கடைசியாக காந்தியடிகளின் வாழ்க்கையை நோக்குவோம். அவர் யோகத்தில் ஆழ்ந்து இருக்கவில்லை. மோகத்தில் மூழ்கிக் கிடக்கவில்லை. தரித்திர நாராயணர்களுடன் கூடி வாழ்ந்தார். அவர்கள் சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொண்டார். எங்களால் கரிசனங்கள் படும் இன்னல்களைக் கண்டு இரங்கினார் தானும் ஓர் கரிசனனாகவே வாழ்ந்து அவர்களை இலட்சிய வாழ்வுக்கு இட்டுச்சென்றார். காந்தி வழி செல்கின்றோம் என்று கதர் உடுத்து மற்றவர் கண்ணுக்குக் காட்சியளிக்கும் நாம் கரிசனங்களுக்குச் செய்தது என்ன. இன்னும் பாடசாலைகள் வழிவிடலை கோயில் கதவுகள்

திறக்கப்படவில்லை. ஹோட்டல்கள் அவர்கள் பசியைப் போக்க வில்லை. பெரிய பதவிகள் அவர்களைச் சேர்க்கவில்லை. வேற்றுமைகள் இருந்தபடி இருக்கின்றன. கரிசனங்களுக்கு இல்லாத உரிமை களை நாம் அனுபவிக்க மறுக்க வேண்டும். காந்தியடிகளையாவது இயற்கையோடு இயைந்து வாழ விட்டோமா. எமது பிற்போக்குச் சக்தியும் சுயநலம் போக்கும் ஒரு கோட்சேயாக உருவெடுத்துக் காலத்துக்கு முன் காந்தி யடிகளைக் கடவுளடி சேர்த்தன.



வாழ்வுக்கு முன் சிலசொற்களைச் சேர்த்து பேசுகிறோம். இலட்சிய வாழ்வு, அமர வாழ்வு, சுதந்திர வாழ்வு, சுபீட்சவாழ்வு, சத்தியவாழ்வு, அன்புவாழ்வு என்றெல்லாம் கூறி விட்டு மனம்போன போக்கெல்லாம் போகிறோம். இலட்சிய வாழ்வு மனிதனின் கடமை என்பதை மறந்து விடுகின்றோம். நமது பிழைகளை ஒப்பு கொள்வ தற்குப் பதிலாக அவற்றை மறுக்க முற்படுகின்றோம். பஞ்சமாபாதங்களை பச்சையாகவே செய்ய கங்க ணம் கட்டி நிற்கின்றோம். கடைகெட்ட கைலஞ்சத்தையும் சீர்கெட்ட சீதனத்தையும் நாகரிகத்தின் சின்னங் கள் என்று கைக்கொள்கின்றோம். பலருடைய உதவியும் பெற்றுக் கட்டிய பொது, ஸ்தாபனங்களை நம்மில் பணம் படைத்தோர் சிலர் அபகரித்துக்கொண்டு தாம் ஆட்சி செலுத்தி அனுபவிப்பதோடு நின்று விடாமல் தமது சந்ததிக்கும் உரிமையாக்கி அழியாப் பழியை அநியாயமாகச் சம்பாதிக்கின்றோம். இவ்வாறு எல்லோரும் நகரலோகத்துக்கு நடைகட்டுகின்றார்கள். சுவர்க்கலோகத்தை சிந்திப்பதற்கோ சிலர் தானும் இல்லை. எல்லோரும் பாலைவனத்தில் பரிதவிக்கிறார்கள். பசுந்தரைகளைப் பார்த்து மகிழ மனிதர் எவருமில்லை.

வாழ்க்கையின் இலட்சியங்களை ஒவ்வொன்றாக எழுத இச் சிறுகட்டுரை இடந்தராது. ஆகவே இலட்சிய வாழ்வை வாழ்ந்து எம் கண்முன் நின்ற மாகத்மாவை மனதில் இருத்துவோம். இலட்சிய புருஷர்களின் வாழ்க்கை வரலாறுகளையெல்லாம் பிறர் எழுதி வைத்தனர். அவ்வாறு வாழ முடியா தென்று கூறி அவர்கள் உபதேசங்களை வாய்ப்பாடம் சொல்லும் அளவில் நின்று விட்டோம். இது மட்டு மல்ல மதத்தின் பேரால் போர்களையும் தொடுத்தோம். மதம் மனிதனை அணுக்குண்டு எல்லைக்கும் கொண்டு வந்து விட்டது. கடவுள் இந் நிலையில் காந்தியடிகளை அனுப்பியதோடு அவர் சரித்திரத்தை அவரே எழுதவும் செய்து ஒரே மதம் ஒரே கடவுள் ஒரே உலகம் ஒரே மக்கள் என்ற சமரசஞானத்தையும் மக்கள் குலத்துக்கு உணர்த்தினார்.

காந்தியடிகளின் சுயசரித்திரமான சத்திய சோதனைதான் இலட்சியவாழ்வை நமக்கு அளிக்கக் கூடிய ஒரே ஔடதம். இதனால் நமது உடல் உள நோய்கள் தீரும். சத்திய வேட்கை, அன்பாசை ஆகிய பசிகள் ஏற்படும். இவற்றுக்குக் கடவுள் நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் உணவாகக் கொள்ள வேண்டும். அப்போது இலட்சிய வாழ்வுக்கான விதிகள் நமது மனச்சாட்சியிற் புலனாகும். அதன் வழி செல்வோம். அது தனிவழியன்று. புதுவழியும் அன்று. அன்று அரிச்சந்திரன் சென்ற வழி இன்று காந்தியடிகள் சென்றவழி. வள்ளுவர் வகுத்த வழியும் இதுவே. இன்னும் எத்தனையோ பெரியோர்கள் சென்று சென்று சிறப்புற்றிருக்கும் வழியுமாகும். அதனால் நாம் பயமின்றி அந்த இலட்சிய வழியிலே செல்லுவோம்.

சத்திய சோதனை ஆகிய சாத்திரகூடத்தில் நமது இளைஞர்கள் வாழ்க்கைப் பரிசோதனை தொடங்க வேண்டும். பெற்றோர்களும் பெரியோர்களும் இலட்சிய வாழ்வைச் சிறுவர்களுக்கு வாழ்ந்து காட்ட வேண்டும். இதற்கு ஏற்றபடி கல்வி தொழில் பழக்கம் எல்லாம் கொடுக்கப்படல் வேண்டும். மாணவர்

களைப் பரீட்சையில் சித்தியெய்தப் பண்ணுவது பாடசாலையின் இலட்சியமாக இருக்கக் கூடாது. எத்தனை இலட்சிய புருஷர்களை எத்தனை இலட்சியப் பெண்களை உற்பத்தி செய்திருக்கிறது என்பதில் தான் ஒரு பாடசாலையின் வளர்ச்சியும் உயர்ச்சியும் தங்கியுள்ளன. காந்தியடிகள் தாயாருக்குச் சத்தியம் செய்து கொடுத்து இங்கிலாந்து சென்று தன் வாழ்கையைப் பேணியது போல நமது இளைஞர்களும் பெற்றோரு க்கோ ஆசிரியருக்கோ சத்தியம் செய்து கெடுத்துப் பிற்கால வாழ்வில் அதனைப் பேண வேண்டும். தெய்வத்தன்மைமிக்க இளஞ்சிறுவர்களிடம் இப்படிச் சத்தியம் கேட்பதற்கு பெற்றோரும் ஆசிரியரும் தம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இலட்சிய வாழ்வு வாழும் ஆசிரியர்கள் தான் பாடசாலை களில் அமர்த்தப்பட வேண்டும் மற்றவர்கள் தாமாகவே இந்தப் பொறுப்பில் இருந்து விலகிக் கொள்வது கௌரவம் என்பதோடு சமூகத்துக்கும் தேசத்துக்கும் செய்யும் பெரிய தர்மமும் ஆகும். இலட்சிய வாழ்வுக்கு எடுத்துக்காட்டாக பாடசாலைகளும் ஆசிரியர்களும் அமையும் போதுதான் மக்களிடையே நாளடைவில் இலட்சிய வாழ்வு முளை கொள்ளும். இலட்சிய வாழ்வே இயற்கை வாழ்வு, இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

கேட்டதைச் சொல்ல வந்தோம்

# பொருளாதார முன்னேற்றத்துக்கா கல்வி?

கல்வியைப் பலர் தங்கள் பொருளாதார முன் னேற்றத்திற்காகப் பயன்படுத்துகிறார்களே தவிர, கல்வி என்னும் செல்வத்தை தத்துவார்த்த ரீதியாக உணர்ந்து அதன்படி ஒழுகுவதில்லை. யாழ்ப்பாணத்து வாழ்வியலானது முதியோர் விடயத்தில் தோற்றுப் போய் விட்டது. யாழ்ப்பாணத் தில் தற்போது மிகக் கெடுமையான விடயம் என்னவென்றால் முதியோரை முதியோரில் லங்களில் கொண்டு சென்ற விடுவதேயாகும்.

யாழ்.மாவட்டத்தில் கல்விகற்றவர்கள் குறை வாகவிருந்த காலப் பகுதியில் மிக உயர்ந்த பண்பாடிருந்தது. ஆனால் தற்போது கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்த பின்னர் பண்பாடு கீழ்நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. தொல்புரம் சிவபூமி முதியோரில்லத்தில் வாழும் சில முதிய வர்கள் தமது நிலைமையை உணர்ந்து அழுவார் கள். குறிப்பாக முதியோர் இல்லத்தில் வாழ்ந்து வரும் முதியவர்கள் வெளிநாட்டில் வசித்து வரும் அவர்களின் பிள்ளைகளுடன் சிரமத் தின் மத்தியில் கதைப்பதற்குத் தெலைபேசி அழைப்பை ஏற்படுத்தித்தருமாறு கேட்டபார் கள். அவ்வாறு ஒரு தடவை ஒரு தாயாரின் பிள்ளைக்கு தொலைபேசி எடுத்த போது அவ ரின் பிள்ளை என்னுடன் கோபத்துடன் கதைத் தார். அதாவது இந்த நேரமோ ரெலிபோன் எடுக்கிறது? நான் வேலைக்குப் போய்வந்து இப்போதுதான் படுத்திருக்கிறேன். நீங்கள் வயதுபோன அவர்கள் சொன்னதாக ரெலி போன் எடுக்கிறதா? என என்னை நோக்கிக் கோபமாகக் கேள்வி கேட்டிருந்தார் என்றால் பாருங்களேன்.

இவ்வாறான கண்ணீர்க் கதைகளும் முதியோர் இல்லத்தில் பலவுண்டு. சமயமும் வாழ்வும் இணையாததொரு உலகத்திலிருக்கின்றோம். இவ்வாறான சம்பவங்களைக் கேள்விப்படும் போது வெட்கமாக இருப்பதுடன் துக்கமாவும் இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் எத்தனையோ கோவில் திருவிழாக்கள், கொண்டாட்டங்கள் என்பன சிறப்பாக நடைபெற்றாலும் மூத்தோர் களை முதியோரில்லங்களில் கொண்டு சென்று சேர்ப்பது எங்களுடைய எதிர்காலத்திற்குத் தீமையை ஏற்படுத்திவிடும். எனவே இச் செயலிருந்து அனைவரும் விடுபட வேண்டும். மூத்தோர்களை வீட்டில் பேணிப் பாதுகாத்து போற்றி வாழ வேண்டும்.

**செஞ்சொற்செல்வர்**
**கலாநிதி ஆறு.திருமுருகன்**

**1986ஆம் ஆண்டுக்கு முன்பு எழுதிய கட்டுரையின் தெளிவு தற்போதுள்ள சூழ்நிலையில் அதன் தாற்பரியத்தை அறிய வைத்துள்ளது**

# நமது காடுகள்



மனிதருக்காக இயற்கை வழங்கியுள்ள சுற்றுச் சூழலைப் பேண வேண்டிய தேவையைப் பற்றிய உணர்வு இலங்கையிற் பெரும்பாலானோருக்கு இல்லை. எனினும் சுற்றுச் சூழலியலாளரது பணிகள் காரணமாக, அண்மைய சில ஆண்டுகளாக நாம் பிறந்த சுற்றுச் சூழலைப் பற்றி மனிதர்கள் மேலுஞ் சிறிது உணர்வோடு உள்ளனர். மேற்குலகில் சூழலியல் அரசியலின் முக்கியமானவொரு அம்சமாகியுள்ளதனாற் சில நாடுகளில், குறிப்பாக ஜேர்மனியில் பசுமைக் கட்சி எனும் பேரில் சிறப்பானதொரு வகையான அரசியற் கட்சிதோன்றியுள்ளது. ஜேர்மனியில் பாராளுமன்ற ஆசனமொன்றையும் பெற்றுள்ள இக் கட்சி சுற்றுச் சூழலைப் பேணுவதை ஆதரிப்பதில் முன்னிற்கிறது.

மனிதருக்கும் அவர்களது சுற்றுச் சூழலுக்குமிடையிலான நெருக்கமான பிணைப்புப் பற்றிப் பலர் அறியமாட்டார்கள். மனிதருக்கும் மரங்கட்கும் இடையிலான உறவு தொடர்பாக இது மிகவும் உண்மை. மனிதரது இருப்புக்கு மரங்கள் அத்தியாவசியம் என்பதைப் பலரும் உணருவதில்லை. மரங்கள் இல்லையெனில் நாம் இறந்துவிடுவோம். மனிதர் காற்றிலுள்ள ஒக்சிசனை உள்மூச்செடுத்துக் காபனீரொக்சைட்டை வெளி மூச்செறிகின்றனர். மரங்கள் காபனீரொக்சைட்டை உள்வாங்கி ஒக்சிசனை வெளிவிடுகின்றன. அதை மனிதர் பயன்படுத்துகின்றனர். இது முறிக்கப்படக்கூடாத ஒரு சுற்று. இதனாலேயே சுற்றுச்சூழலியலாளர்கள் மரங்களைத் தறிப்பதை எதிர்த்து புதிய மரங்களை நடுவதை ஆதரிகிக்கின்றனர். மனிதர் செய்யக் கூடிய மிக மூர்க்கத்தனமான செயல் மரங்களையும் காடுகளையும் அழித்து அதன்மூலம் பூமியை ஒரு பாலைவனமாக்குவதுதான்.

ஒரு காலத்தில் இலங்கையின் முழு நிலப்பரப்பையும் காடுகள் மேவி நின்றன. அவை உலகின் வளமிக்க வளங்களுள் அடங்கும். பாதுகாக்கப்பட்ட சில பகுதிகளும் எட்டுவதற்குக் கடினமான சில இடங்களையும் விட்டால் இந்த முதுசத்தின் பெரும்பகுதி இழக்கப்பட்டு விட்டது. எஞ்சியுள்ளது மோசமாகச் சீரழிந்துள்ளது.

இக்காடுகள் அனைத்திலும் நம் மலை உச்சிகளில் வளர்ந்தவையே மிகப் பெறுமதியானவை. அவை இரண்டு பணிகளை ஆற்றின. காடுகளின் உயரமான மரங்கள் முகில்களில் இருக்கின்ற நீர்த்துளிகளை ஒடுக்கி மழையாக்கி உதவுகின்றன. அதனாலேயே மலையுச்சிகளில் பெருமழை பெய்யக் காண்கிறோம். இம் மரங்களின் நீண்ட வேர்கள் இன்னொரு பணியை ஆற்றுகின்றன. அவை மழைநீர் அனைத்தும் ஒரேயடியாக ஒடி வழியாமல் நிலத்தினுள் இறங்கி நிலையான நிலத்தின் கீழான நீரோடைகளின் வடிவிற் பாய உதவுகின்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நமது நாட்டை ஆக்கிரமித்த பிரித்தானியர் கோப்பி, தேயிலைத் தோட்டங்களை நிறுவுமுகமாக மலையுச்சிக் காடுகளை அழித்ததன் மூலம் நாட்டிற்கு பெரியதொரு கேட்டை விளைவித்தனர். இதன் மூலம் நெடிய மரங்களும் நீண்ட வேர்களும் அழிந்தன. அதன் பயனாக நமக்குக் கிடைத்த மழை வீழ்ச்சி குறைந்தது. மழை பெய்தபோது மறிக்க வேர்கள் இல்லாததால் மழைநீர் எல்லாமே ஒரேயடியாக கீழ் நோக்கிப் பய்ந்தது.

மேலுமொரு விடயமும் நடந்தது. காடுகளின் இடத்தில் பிரித்தானிய கொலனியவாதிகள் தேயிலைச் செடிகளை நட்டனர். தேயிலை நடுகையோடு தொடர்புடைய எவரும் உரமிடுவதற்காகத் தேயிலைச் செடியை சூழ மண்ணைக் கிளறிவிட வேண்டுமென அறிவர். அதன் விளைவாகத் தேயிலைச் செடிகளைச் சூழவுள்ள மண் இழக்கப்படுகிறது.

எனவே மழை நீர் கீழே ஓடுகிறபோது தேயிலைச் செடியைச் சூழக் கழன்ற மண்ணைத் தன்னோடு கொண்டு போகின்றது. இதில் வருத்தத்துக்குரியதெனில் கழுவுண்டு போவது மண்ணின் மிக வளமுள்ள பகுதி என்பதாகும். இது நாமறிந்த மண்ணரிப்புப் பிரச்சினையாகும். இதனாலேயே பாடசாலையில் நாம் படித்த அத்தனைக்கும் அப்பால் நமது ஆறுகள் எல்லாமே பழுப்பு நிறமாக உள்ளன. இலங்கையில் உள்ள ஒவ்வொரு ஆறும் மழைநீரோடு சேர்த்து நமது மலை உச்சிகளது மண்ணையும் கடலுக்குள் இறக்குகிறது. கொலனியக் காலத்தில் இலங்கையில் வெள்ளப்பெருக்கைத் தடுப்பதற்கான வழி வகைகளைப் பரிந்துரைக்குமாறு கேட்கப்பட்ட போது எழுதிய தனது அறிக்கையில் இலங்கை மெல்ல மெல்லக் கடலுக்குள் கழுவுண்டுபோவதாக பிரிட்டிஷ் நிபுணர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார். இது அப்படியே உண்மை.

நமது மலை உச்சிகளின் வண்டல் ஆறுகளுள் இறங்குகிறது. அதனால் ஆற்றுப்படுக்கைகளின் மட்டம் உயருகிறது. எனவே அவற்றால் முன்புபோல அதிகளவு நீரைக் கொண்டிருக்க முடிவதில்லை. இதனால் கரைகளை மீறி வெள்ளம் பெருகுகிறது. பஸ் மூலமோ புகையிரத மூலமோ களுத்துறையில் உள்ள இரண்டு பெரிய பாலங்களின் மீதாக பயணஞ் செய்யுமெவரும் களு கங்கை தன் முகத்து வாரத்தில் குவித்துள்ள வண்டலின் அளவைக் காணலாம். ஆறு அவ்விடத்திற் கடலுட்புக இயலாதபடி ஆற்றின் முகத்துவாரம் அடைபட்டுக் கிடக்கின்றது.

இது இப்பகுதிகளில் கப்பற் பயணத்தைப் பாதிக்கின்றது. களு கங்கையை எடுத்துக் கொண்டால் மிதி வள்ளங்கள் மூலம் தேயிலையும் றப்பரும் தோட்டங்களில் இருந்து ஆற்றின் வழியே கொண்டுவரப்பட்டன. இப்போது வண்டல் காரணமாக மிதி வள்ளங்களால் ஆற்றின் வழியே பயணஞ் செய்ய இயலாதுள்ளது. தேயிலையும் றப்பரும் தெரு வழியாக லொறிகளில் கொழும்பிற்கு வருகின்றன.

இவ்வாறு பிரித்தானிய கொலனிய வாதிகள் நமது நாட்டுக்கு பெருங்கேடு இழைத்தனர். அதைச் சரிக்கட்டுவது கடினம். எனினும் நீண்ட காலத்தில் அது இயலுமானது. இலங்கையில் அதிகாரத்துக்கு வந்த எந்த அரசாங்கமும் பிரச்சினையை விளங்கிக் கொண்டதாகவோ அதைத் தீர்க்க எதுவும் செய்ததாகவோ இல்லை.

கடல் மட்டத்தினின்று ஐயாயிரம் அடி உயரத்திற்கும் மேலாகத் தேயிலை பயிரிடுவதை இலங்கை தடை செய்ய வேண்டும். அதேவேளை, திட்டமிட்ட முறையில் காடு வளர்க்கும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். 15-20 ஆண்டுகளில் நமது காட்டு நிழலை மீட்க இயலும். அதன் பின்பு எமது ஆறுகளைத்

தோண்டி அவற்றின் படுக்கைகளில் மண்டிக்கிடக்கும் வண்டலை அகற்ற வேண்டும். போக்குவரத்து முறைகளில் மிகவும் மலிவானதாக நீர்வழிப் போக்குவரத்தை நமது ஆறுகளிலெல்லாம் இது இயலுமாக்கும். அத்துடன் இது நமது சம தரைகளில் வெள்ளம் ஏற்படுவதையும் தடுக்கும். இரத்தினபுரி யின் அருகே ஆண்டு தோறும் களுகங்கையின் கரைகளில் பருவ மழைவீழ்ச்சியால் பெருகும் நீரை அடக்க இயலாததால் வெள்ளப் பெருக்கு நிகழ்வது பற்றி அனைவரும் அறிவோம்.


அரசாங்கத்தின் தீர்வு ஏதென்றால் வெள்ளப்பெருக்கை நிரந்தரமாகத் தடுப்பதற்கு வழிதேடுவதை விட்டு இரத்தினபுரி நகரத்தை இன்றும் மேடானபகுதிக்கு இடமாற்றுவதாகும்.

பிரித்தானியர் போனதன் பின்னரும் அடுத்தடுத்து வந்த இலங்கை அரசாங்கங்கள், அபிவிருத்தி என்ற பேரில், எஞ்சியிருந்த காடுகளையும் அழிப்பதை அனுமதித்தன. மகாவலித் திட்டத்துக்காக 74,000 ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டன. பின்லாந்து ஆலோசகர் குழுவொன்று சென்ற ஆண்டு தயாரித்தளித்த வனத்தொழிற் திட்ட வரைவு ஒன்றின்படி, 34,000 ஏக்கர் மேட்டு நிலக்காடுகள் அழிக்கப் படுவது பரிந்துரைக்கப்பட்டது. எதிர்ப்புகளின் விளைவாக அப்பரப்பு 10,000 ஏக்கராகக் குறைக்கப்பட்டது. இவை யாவுமே பெறுமதிமிக்க மரப்பலகைகளை விற்பதற்காகத்தான்.

மரப்பலகை வியாபாரிகள் ஊழல்கார அதிகாரிகளது உதவியுடன் காட்டு மரங்களை சட்ட விரோதமாகத் தறிப்பதும் நன்கறியப்பட்டதே. இதனாலேயே யானைகள் கிராமவாசிகளைத் தாக்குகிற பிரச்சினை நமக்கு ஏற்பட்டுள்ளது. பண்டைக்காலத்தில் பருவமாற்றத்தை ஒட்டி யானைகள் நீர்தேடி யால முதல் வில்பத்துவரை காடுகளூடாகச் செல்ல இயலும். திட்டமிடாத முறையில் இடைவழியில் உள்ள காடுகளின் அழிப்பின் விளைவாக யானைகள் தம் நடைபாதையை இழந்தன. எனவே அவை சிறிய நிலப்பரப்புகட்குள் குறுக்கப்பட்டன. நீர் தேடிப்போகும் வழியிற் சந்திக்கும் கிராமவாசிகளை அவை தாக்குகின்றன. கவனமில்லாது யானைகளைக் கஷ்டப்படவைத்து, இப்போது அழிந்து கொண்டிருக்கும் விலங்கினம் ஒன்றைக் காப்பாற்ற கோடிக்கணக்கிற் செலவிடுகின்றோம்.

இவ்வாறு மரங்களும் காடுகளும் மனிதனின் இருப்புக்கு அத்தியாவசியமான சிறந்த நண்பர்கள் என்று காணலாம். எனவே மனிதர் மரங்களை அழிப்பதற்கு மாறாக அவற்றைப் பெருந்தொகையாக வளர்க்கக் கற்க வேண்டும்.

**-நா.சண்முகதாசன்**



# கண்ணீர் அஞ்சலி


## துரையப்பா நடராஜா

இணுவையம்பதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட உயர்திரு. துரையப்பா நடராஜா அவர்கள் மறைந்த செய்தி எம்மையெல்லாம் துயரில் ஆழ்த்தியுள்ளது. கனடா – இணுவில் திருவூர் ஒன்றியத்தின் உறுப்பினராகவும், இணுவில் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க உறுப்பினராகவும் இருந்து பொதுப் பணியில் தம்மை இணைத்துக் கொண்டவர். 'தாயக ஒலி'யின் வளர்ச்சியில் அக்கறையுடன் பெரிதும் ஆதரவு நல்கியவர். அன்னாரின் மறைவால் துயருறும் அவர்தம் குடும்பத்தாருக்கும், உறவினர், நண்பர்களுக்கும் 'தாயக ஒலி' தனது அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றது.

**–ஆசிரியர்.**

# விளையாட்டு இலக்கியம்

பேராசிரியர் சபா.ஜெயராசா



சமூக இருப்பிலிருந்து மேலெழுந்த இயல்பான ஆற்றுகை வடிவங்களே விளையாட்டுக்கள். நாட்டார் விளையாட்டுக்கள் அவற்றுக்குரிய கல்விப் பெறுமானங்களை உள்ளடக்கிய நிகழ்த்துகைக் களஞ்சிய நிலையில் இயங்குகின்றன.

தமிழர்களின் பொருண்மிய வரலாற்றுக்கும் விளையாட்டுக்களுக்குமிடையே நேர்நிலை உறவுகள் உண்டு. அதனை விளக்கும் சில எடுத்துக்காட்டுக்கள் வருமாறு.

அ. வேட்டுவ வாழ்க்கை -
நாயும் புலியும் விளையாட்டு, பழம்பொறுக்குதல்
ஆ. ஆயர் வாழ்க்கை -
பசுவைக் கண்டுபிடித்தல், பட்டி சேர்த்தல்
இ. வேளாண் வாழ்க்கை -
நீர்விளையாட்டு, பல்லாங்குழி
ஈ. வணிக வாழ்க்கை - தாயம், சதுரங்கம்.

உடலுறுப்புக்களின் ஒருங்கிணைப்புடன் (Coordination) இணைந்தும், அறிகைச் செயற்பாடு மற்றும் மனவெழுச்சிச் செயற்பாடு ஆகியவற்றுடன் இயங்கியும் மேலெழும் விளையாட்டு ஓர் அழகியல் வடிவமாகவும் தெய்வீக வடிவமாகவும் தமிழர் நாட்டாரியலில் நீட்சி கொண்டது.

திருப்பாவை, திருவெம்பாவை ஆகியவை நீர் விளையாட்டுக்களுடன் இணைந்து தெய்வீக இலக்கிய ஏற்றங்களைப் பெற்றன. இறைவனது செயற்பாடுகளை "விளையாட்டுக்கள்" என்ற குறியீடுகளுக்குள் அடக்கலும் தமிழர் பண்பாட்டில் இடம்பெற்றது.

"ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில் உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தறிந்தோம்" என்பது மணிவாசகரின் திருவெம்பாவைப் பாடலில் இடம்பெறும் அடிகள்.

தொன்மையான சடங்கிலிருந்து நாடகம் தோன்றியது என்ற கருத்து உண்டு. அதேவேளை குலக்குழு வாழ்க்கையில் இயற்கையோடும், விலங்குகளோடும் பகைவரோடும் நிகழ்த்திய போர்களில் இருந்தே விளையாட்டுக்களும் நாடகங்களும் தோன்றின என்ற பிறிதொரு கருத்தும் உண்டு.

போருக்கு ஆயத்தம் செய்தலும், மாதிரி இணக்கல் (Simulation) செய்தலும் விளையாட்டுக்களைத் தோற்றுவித்தன. அந்நிலையில் விளையாட்டு என்பது வெறும் பொழுது போக்காக மட்டும் அமையவில்லை. இலக்குடன் கூடிய செயற்பாடாகவும் அமைந்தது.

அந் நிலையில் விளையாயட்டுக்கள் ஒழுக்கத்தை வலியுறுத்துவனவாகவும் ஒழுங்கமைந்த பங்குபற்றல் செயற்பாடாகவும் அமைந்த கல்வியேற்றங்களைப் பெற்றன. அத்தகைய ஒரு தளத்திலிருந்தே தமிழ்ச் சூழலில் விளையாட்டுக்கள் ஆன்மீக நீட்சியை பெற்றன.

நாட்டார் விளையாட்டுக்களுக்கும் கல்விக்குமுள்ள தொடர்புகளை நோக்கும் பொழுது முதற்கண் மேற்கிளம்புவது விளையாட்டின் வழி உருவாக்கம் பெறும் தன்நம்பிக்கையுடன் இணைந்த அறிகைப் பிறப்பாக்கவிசை (Cognitive Activation) யாகும்.

நாட்டார் பண்பாட்டில் வயதுப்படி நிலைகளுக்கு ஏற்றவாறு விளையாட்டுக்கள் உருவாக்கம் பெற்றமை வளர்ச்சி நிலைக்கும் முதிர்ச்சி ஏற்றத்துக்கும் அறிகைப்பிறப்பாக்க விசைக்குமுள்ள தொடர்புகளைக் காட்டுகின்றது. சிறுவயதில் ஆடப்பெறும் சிறு தேர் உருட்டல் விளையாட்டும் சிற்றில் கட்டும் விளையாட்டும் குறிப்பிட்ட சிறுவயதினருக்குரிய அறிவு முகிழ்ப்போடு தொடர்புடையவை.

சிறுதேர் உருட்டலில் சக்கரச் சுழற்சி தொடர்பான அடிப்படை அறிவு செயல்வழியாகக் கற்றுக் கொள்ளப்படுகின்றது. நவீன அறிகை உளவியலில் அவ்வகை ஏற்பாடு கற்றலின் முதற்படியாக் கொள்ளப்படுகின்றது. அதாவது செயல் வழியாகக் கற்றல் முதலாவது படி, காட்சி வடிவமாகக் கற்றல் இரண்டாவதுபடி, குறியீட்டு வழியாகக் கற்றல் மூன்றாவது.

விளையாட்டில் ஆக்க மலர்ச்சியும் அழகியலும் ஒன்றிணைக்கப்படுதலை சிற்றில் கட்டும் விளையாட்டு வெளிப்படுத்துகின்றது. வளர்ந்தோர் நிலையில் அது நுட்பமான கலை ஏற்பாடுகளைச் செய்யும் பாவை விளையாட்டாக மாற்றமடைந்துள்ளது. திருப்பாவை, திருவெம்பாவை முதலாம் பாவை நோன்புக்கு பாவை விளையாட்டே அடிப்படையாயிற்று.

பெண்கள் ஆடிய பூம்பந்தாட்டம் இளவயதினருக்குரிய நாட்டார் விளையாட்டுக்களில் முதன்மை பெற்றதொன்றாகும். அந்த விளையாட்டு நாட்டாரின் புலக்காட்சியிலே கண்டறியப்பட வேண்டிய அறிகை வடிவம் ஒன்றனுக்குப் பயிற்சியளிப்பதாக அமைந்தது. எதிரிலிருந்து வரும் பந்து எவ்விடத்துக்கு வரும் என்ற ஊக்கத்துடன் ஒரு கற்பனை அசைவை ஏற்படுத்தித் துலங்கும் திறனுக்கு அது பயிற்சியளித்தது. நாட்டார் மொழியில் அது "பருந்துப் பாய்ச்சல்" எனப்பட்டது. நவீன விளையாட்டுக் கல்வியில் அது "நிழல்அசைவு" (Shadow Move) எனப்படும்.

ஆடல், பாடல், விளையாட்டு இலக்கிய ஆக்கம், வழிபாடு ஆகியவற்றுக்கிடையே நாட்டார் வாழ்க்கையிலே ஊடுருவிய ஒன்றிணைப்புக் காணப்பட்டது. அந்த ஒன்றிணைப்பு செவ்வியல் நிலையில் மணிவாசகரது திருவாசகத்திலே பல நிலைகளிலே இடம்பெற்றது. அதுவே மணிவாசகரின் கவித்துவத்துக்கு முடிவிலா இங்கிதத்தைக் கொடுத்தது.

நாட்டார் பண்பாட்டில் இளைஞர்களுக்குரிய விளையாட்டுக்கள் வீரவிளையாட்டுக்களாக அமைந்தன. சிலம்படி, ஏறுதழுவல், மற்போர் முதலியவை அவ்வகையில் அமைந்தவை. உடலின் வீர ஏற்றத்தைக் கல்விச் செயல் முறையில் உள்ளடக்கிய செயற்பாடு தொன்மையான கிரேக்கக் கல்வி மரபிலும் காணப்பட்டது. "உறுதியான உடலில் உறுதியான உள்ளம் உருவாகும்" என்பது கிரேக்கரின் வீரயுக நம்பிக்கை.

தமிழ் மரபில் நாட்டாருக்குரிய விளையாட்டுக்களாகப் பின்வருவன அமைகின்றன. அம்மானை, கழங்கு, கும்மி, சாழல், தோணேக்கம், உந்தி, சிலம்பம், மற்போர், ஏறுதழுவல், தாய்ச்சி, கிட்டிப்புள், வாரோட்டம், போர்த் தேங்காய், கிந்தியடித்தல், பசுவும் புலியும், கொழுத்தாடு பிடித்தல், ஊஞ்சலாட்டம், கரகம், காவடி, புலியாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், கோலாட்டம், சொக்கட்டான், கொம்புமுறி, பட்டம் விடுதல், பல்லாங் குழி, பாண்டி, வண்டியோட்டம், சதுரங்கம், பழம் பொறுக்கல், குளம்கரை, இராட்டினம், எவடம் எவடம் (எவ்விடம்-எவ்விடம்) கீச்சு மாய்ச்சுத் தம்பலம், கண்பொத்தி விளையாட்டு, முகமூடி விளையாட்டு, பாவை விளையாட்டு, நொடி விளையாட்டு, பூம்பந்தாடல் முதலியவை.

பால்நிலைப்பிரிவு சமூகத்திலே வளர்ச்சியடைய பெண்களுக்குரிய விளையாட்டுக்கள் என்ற தனிப்பிரிவு தோற்றம் பெற்றது. அம்மானை, கழங்கு, கும்மி, சாழல், தேணோக்கம், உந்தி, ஊசல் முதலியவை பெண்களுக்குரியவையாக வளர்ச்சியடைந்தன. பெண்களுக்குரிய நாட்டார் விளையாட்டுக்களிலே காணப்பட்ட ஒரு சிறப்புப் பண்பு அகத்தோடு பேசுதல் (Self Talk) அதாவது தங்களுக்குள்ளே தாங்கள் உரையாடிக்கொண்டு

விளையாடுதல். அகத்தோடு பேசுதல், சமய உரையாடலிலும் சமய வாழ்விலும் சிறப்புற்றிருந்தமையால் மணிவாசகர் பெண்கள் விளையாட்டுக்களைப் பாடலுக்கு எடுத்துக்கொண்டார்.

அத்தகைய ஒரு பின்புலத்தில் திருவம்மானை திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பொன்னூஞ்சல், முதலாம் ஆக்கங்களை மணிவாசகர் பாடினார்.

நாட்டார் விளையாட்டுக்கள் உள ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்குரிய நேர் வலுவையும் கொண்டுள்ளன. கவனக்கலைப்பான்களோடு இழுபட்டுச் செல்லாது மனத்தை ஒருங்கு குவிய வைத்தல் நாட்டார் விளையாட்டுக்குரிய சிறப்புப் பரிமாணம். மனத்தை ஒருங்கு குவியவைக்கும் அந்தச் செயற்பாடும் நாயன்மார்களையும் ஆழ்வார்களையும் நாட்டார் விளையாட்டுக்களின் மீதான கவனத்தை ஈர்ப்புச் செய்ததுடன் சமய இலக்கிய ஆக்கங்களோடு அவற்றைச் சங்கமிக்கவும் செய்தன.

விளையாட்டுக்களை மேற்கொள்ளும் பொழுது உடலின் ஆற்றல் சாதாரண நிலையைக் கடந்து மீப்பெருக்க நிலைக்கு மேலெழுகின்றது. அந்நிலையில் ஆடலுக்கும் மாயவித்தைச் (Magic) செயற்பாடுகளுக்குமிடையே ஒப்புமை காணப்பட்டது.

அத்தகைய பின்புலத்தில் மாயவித்தை - மருந்து - விளையாட்டு ஆகியவற்றுக்கிடையே முத்தரப்புத் தொடர்புகள் காணப்பட்டன. அம் மூன்றும் இயல்பாகச் சேரக்கூடிய நிலையில் இருந்தமையால் "சேர்த்திகள்" எனவும் அழைக்கப்பட்டது.

மந்திரத்தில் ஒரு சொல் அல்லது சொற்றொடர் மீள மீளச்சொல்லப்படுதல் போல் விளையாட்டிலும் ஆடலிலும் ஓர் அசைவு அல்லது அடைவு மீள மீளச் செய்யப்படுதல் உண்டு. மீள மீள ஒன்றை ஒப்புவித்தல் எதிர்பார்த்தவற்றை எட்டுவதற்குரிய செயற்பாடாகும் என்ற நம்பிக்கை மேலோங்கியிருந்தது. அதற்கு ஏற்றவாறு வளப்பெருக்கை மேம்படுத்துவதற்குச் சடங்குகளும், மாயவித்தைகளும் ஆடல்களும் மேற்கொள்ளப்பட்டன.

பாம்பு வளப்பெருக்கின் குறியீடாக நாட்டார் மரபிலே காணப்பட்டது. அதனை அடியொற்றி மகுடியாடல் பாம்பு நடனம், பாம்பாட்டம் முதலாம் ஆடல்களும் விளையாட்டுக்களும் தோற்றம் பெற்றன. கிரேக்க ஆடல் மரபில் பாம்பைக் கையில் ஏந்தியவாறு ஆடல் நிகழ்த்துதல் இடம்பெற்றது.

வளப்பெருக்கின் பிறிதொரு குறியீடாகக் கருதப்பட்டது நிறைகுடம், பாம்பை வளப்பெருக்கின் குறியீடாகக் கொள்ளல் குலக்குழுச் சமூகத்தில் இடம்பெற்றது. சில குலக்குழுக்கள் பாம்பைத் தமது குலக்குறியாகவும் கொண்டிருந்தன. வேளாண் சமூகத்தில் வளப்பெருக்கின் சிறப்புக் குறியீடாக அமைந்தது நிறைகுடம்.

நிறைகுடத்துடன் தொடர்புடைய ஆடலும் பாடலும் விளையாட்டுக்களும் நாட்டார் வழக்கில் சிறப்புற்றிருந்தன. கரக ஆட்டல் நிறைகுடத்தோடு தொடர்புடைய ஆடலின் வளர்ச்சி வடிவம். நிறைகுட விளையாட்டிலும் ஆடலிலும் கையளிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட ஒரு திறன் சமநிலைப்பாடு. தலையில் உள்ள நிறைகுடம் விழுந்து விடாது விரைவு நடையிடும் விளையாட்டு "சொங்கோடல்" எனப்பட்டது. அது வளர்ந்தோருக்குரிய ஒரு நாட்டார் விளையாட்டு சமநிலை பராமரித்தல் என்ற கல்விச் செயற்பாட்டை உறுகாட்சி (Concrete) நிலையிலே கற்றுக்கொள்வதற்குரிய விளையாட்டாக அது அமைந்தது.

நாட்டார் பண்பாட்டிலே சொல்சார்ந்த விளையாட்டுக்களும் (Verbal Games) இடம்பெற்றிருந்தன. அனைத்து வயதினருக்குமுரிய சொல் விளையாட்டுக்கள் வளர்ச்சியுற்றிருந்தன.

நொடிகளும் ஒருவகைச் சொல் விளையாட்டாகவே கருதப்படும். மொழியாற்றலும் விரைந்து தொழிற்படலும் சொல் விளையாட்டுக்களில் இடம் பெற்றன. ஒலிகளை அடியொற்றியவை, சொற்களை அடியொற்றியவை, பல கருத்துக்களைத் தருபவை கருத்துக்களை அடியொற்றிப் பழமொழிகளைக் கண்டறிபவை என்றவாறு சொல் விளையாட்டுக்கள் பலவகைப்பட்டவை.

சொல் விளையாட்டு, மழை விளையாட்டு எனவும் அழைக்கப்பட்டது. மழைக்காலங்களில் சிறுவரும் பெரியவர்களும் வீடுகளுக்குள்ளே முடங்கியிருக்கும் வேளைகளில் இவ்வகை விளையாட்டுக்கள் மேற்கொள்ளப்பட்டன. சொல்லை மழை என்று கூறும் மரபு நாட்டாரிடத்துக் காணப்பட்டது.

நாட்டாரின் சொல் விளையாட்டுக்கள் வரன் முறைக்கல்வியிலும், வரன்முறைச் செய்யுள் ஆக்கங்களிலும் செல்வாக்குகளை ஏற்படுத்தின. திரிவு, மடக்கு, சித்திரக்கவி, முதலாம் செய்யுள் வடிவங்கள், நாட்டார் மொழிவிளையாட்டுக்களில் இருந்து நீட்சி கொண்டவை.

நாட்டார் கல்விச் செயல் முறையோடு இணைந்த காட்சி வடிவங்களே அவர்களால் உருவாக்கப்பட்ட விளையாட்டுக்கள். விளையாட்டுக்களின் கலைச் செறிவும் கல்விச் செறிவும் வரன் முறையான கலையாக்கங்களிலும் இலக்கிய ஆக்கங்களிலும் ஊடுருவிப் பரந்த செயல் முனைப்பைக் கொண்டிருந்தன. விளையாட்டு என்பது கலையுமாயிற்று இலக்கியமுமாயிற்று.

# பாட்டாளி வர்க்கத்தின் விடிவுக்காய் உழைத்த மாமலை சரிந்தது



கியூபா நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ தமது 90ஆவது வயதில் இயற்கை எய்தினார். 1926ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13ஆம் திகதி பிறந்த இவர் கல்வியிலும் விளையாட்டிலும், பேச்சு வன்மையிலும் சிறந்து விளங்கினார். விவசாயம், வரலாறு, சட்டம் ஆகிய பாடங்களில் ஆளுமை மிக்கவராகவும் ஸ்பானிஷ் மொழியில் தொடர்ந்து ஐந்து ஆறு மணித்தியாலங்கள் பேசும் வல்லமை கொண்டவராகவும் இருந்தார்.

படிக்கும் காலத்திலேயே பொதுவுடைமைச் சித்தாந்தத்தில் பற்றுறுதி கொண்டவரானார். காஸ்ட்ரோ பொதுவுடைமைப் புரட்சியாளராகவும், பொதுவுடமை அரசியல்வாதியாகவும் செயலாற்றி உலகமே வியக்கும் வகையில் உயர்ந்து நின்றார். அமெரிக்காவுக்கும் முதலாளித்துவத்துக்கும் சிம்மசொப்பனமாக இருந்த காஸ்ட்ரோ கம்யூனிசத்தை தமது கொள்கையாக முன்நிறுத்தி கியூபா நாட்டைக் கட்டியெழுப்பினார். 1959 இல் கியூபா புரட்சிக்குத் தலைமை தாங்கி புல்ஜென்சியோ பாட்டிஸ்டாவின் அரசை வீழ்த்தி தலைமைப்பதவியை ஏற்றார். இவரது புரட்சிச் செயற்பாட்டுக்கு சேகுவரா துணைநின்றார் என்பது வரலாறு. 1959 முதல் 1976 வரை கியூபாவின் பிரதமராகவும் 1976 முதல் 2008 வரை ஜனாதிபதியாகவும் பொறுப்பு வகித்தார்.

1965 இல் கியூபாவின் பொதுவுடைமைக் கட்சியின் முதல் செயலாளராகப் பதவியேற்ற இவர், கியூபாவை சமூகவுடைமைக் குடியரசாகப் பிரகடனப்படுத்தினார். 49 ஆண்டுகள் தொடர்ச்சியாகக் கியூபாவை ஆட்சி செய்த பிடல் காஸ்ட்ரோ, 2008 பெப்ரவரி 24ஆம் திகதி பதவியிலிருந்து விலகி தமது சகோதரர் ரவுல் காஸ்ட்ரோவிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தார்.

உலகின் மேற்குப்பகுதியில் முதன் முதலாக ஒரு கம்யூனிச தேசத்தை உருவாக்கி, நீண்டகாலம் அதைக்கட்டிக்காத்து ஆட்சிசெய்து பெருமைபெற்ற மாமனிதர் பிடல் காஸ்ட்ரோவின் நாமம் என்றும் நிலைத்து நிற்கும். வரலாற்று நாயகன் என்றும் எம்முடனே வாழ்ந்து கொண்டிருப்பார்.

**- தம்பு சிவா**

# "தாயக ஒலி"




தமிழுக்கு அமுதென்று பேர். அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர். தமிழுக்கு நிலவென்று பேர்! இன்பத்தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர், தமிழுக்கு மணமென்று பேர்!. இவ்வாறு பி.சுசிலா அவர்களால் பஞ்சவர்ணக் கிளி திரைப்படத்தில் பாரதிதாசனின் பாடல் வரிகளை மிகவும் இனிமையாக பாடியிருப்பதைக் கேட்டிருக்கின்றோம்.

இவ்வாறு உலகமெல்லாம் தமிழின் மேன்மையை உலகறியச் செய்வதில் எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் பலர் தங்களுடைய பணியினை மேற்கொண்டே வருகின்றனர். அந்த வகையில் கடந்த பல வருடங்களாகக் காத்திரமான பங்களிப்பினை இலங்கையிலிருந்து வெளியாகும் 'தாயக ஒலி' என்கிற சஞ்சிகையின் ஊடாக இலக்கியவாதி, சிறந்த விமர்சகர், எழுத்தாளர், மதிப்புக்குரிய தம்புசிவா அவர்கள் பிரதம ஆசிரியராக இருந்து கொண்டு இருதிங்கள் ஏடாக இன்பத்தமிழை உலகமெல்லாம் ஒலிக்கச் செய்து வருகின்றார்.

இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும், இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வெளியிடும் தாயக ஒலி எனும் தாயக மண்ணின் தனித்துவம் காக்கும் இச்சஞ்சிகை உலகமெல்லாம் வாழும் இலங்கை மாதாவின் தமிழ்பேசும் மக்களுக்கு கிடைத்திருக்கும் ஒரு அரிய பொக்கிசமாகும். பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே எனும் பாரதியின் மூலமந்திரத்தை தாரகமாகக் கொண்டு கடந்த ஆடி - ஆவணி 2016க்கான தாயக ஒலி அதன் 24வது இதழை அண்மையில் வெளியாக்கி இருக்கின்றது. தமிழ்த்தூதுவர் தனிநாயகம் அடிகளார் உலகை வலம்வந்து தாய் மொழியாம் தமிழைத் தரணியெங்கும் பரவச் செய்தவர். வழமை போன்று அவரது மேல் முகப்புப் படத்துடன் ஒவ்வொரு இதழும் வெளியாவது தமிழுக்கு அமுதென்கிற பெயர் பொருத்தம் தானே.

அந்த வகையில் வழமைபோன்று இவ்விதழும் 56 பக்கங்களில் சுவைத்திடும் பல்வேறு திரட்டுக்களை ஒன்றாக்கித் தந்துள்ளமை பாராட்டுக்குரியது. தம்புசிவா என்கிற இலக்கிய ஆளுகையின் வெளிப்படுத்தல்கள் இங்கே பல்வேறு விடயங்களைத் தொட்டுக் காண்பிக்கின்றன. நீண்டகாலம் தன்னுடைய இலக்கியப் பணியினை செவ்வனே நிறைவேற்றுவதில் தம்புசிவா ஐயாவுக்கு நிகர் அவரே என்றுதான் கூற வேண்டும். வாசிப்போர் அருகி வருகின்ற இன்றைய நாட்களில் புலம்பெயர் மக்களின் தமிழ்த்தாகத்தை தாயகத்தின் தமிழ் வெளிப்படுத்தல்களை இவ்வாறு தாயக ஒலியின் ஊடாக ஒலிக்கச் செய்து மக்களின் மனங்களில் இடம்பிடித்திருக்கும் இவ்விதழின் பிரதம ஆசிரியரான தம்புசிவா அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இதழின் உள்ளே நுழைந்தால் அங்கே கட்டுரை, சிறுகதை, அறிந்தவையும் தெரிந்தவையும், கவிதை, ஆன்மீகம், குறுங்கதை, சிறுவர் கதை, நகைச்சுவைக் கதை, சிந்திக்க ஒரு கதை, உங்கள் விருந்து, நூல் அறிமுகம் மற்றும் ஏனையவை என்கிற தலைப்புக்களில் பல்வேறு விடயங்களை ஒன்றுதிரட்டி நம் கைகளில் தவழும் தாயக ஒலியின் மகிமையை என்னவென்று சொல்வது. பேனா முனையிலிருந்து

ஆசிரியர் தலையங்கம் 'முதியோர் என்ன தவம் செய்தனரோ!' எனும் தலைப்பில் சிறப்பானதொரு விடயத்தை முன்வைக்கிறார் தம்புசிவா அவர்கள். முதியோர் இன்றைய நாட்களில் படுகின்ற அவதிகளையும், ஆதங்கங்களையும் தத்துருபமான முறையில் தந்திருக்கின்றார் ஆசிரியர். வயோதிபத் தந்தையை நாயினும் கேவலமாக நாய்க் கூட்டுக்குள் அடைத்து வைத்த கொடூரமும், வயோதிபத் தாயை இருட்டறைக்குள் பூட்டி வைத்த பரிதாபமும் எமது நாட்டில் அரங்கேறியுள்ளமை தெரியவந்துள்ளது என்கிற வரிகளை வாசிக்கும் போது நாமும் முதியோராக மாறுகின்ற போது நினைக்கவே பயமாக இருக்கிறது. நமது நாட்டு முதியோர், மேற்குலகில் வாழும் முதியோருக்குமிடையிலான ஒப்பீடுகளையும் தந்து, இத்தகையவர்களைப் பிள்ளைகளாகப் பெற்ற இம்முதியவர்கள் என்னதவம் செய்தனரோ! என்று முடிகிறது ஆசிரியர் தலையங்கம்.

தாய்மொழிப் பற்றும் இலக்கிய ஆர்வமும் மிக்க மாமேதை கார்ல்மார்க்ஸ் எனும் தலைப்பில் மார்க்ஸ் பற்றிய பல்வேறு தேடல்களை இக்கட்டுரையின் ஊடாக காணக்கிடைக்கிறது. மார்க்ஸ் அவர்கள் உலகின் பொருளாதாரத்தை மாற்றியமைக்கின்ற கருத்துக்களை அறிமுகப்படுத்தியவர். மட்டுமன்றி இவர் ஒரு சிறந்த இலக்கியவாதியாக திகழ்ந்திருக்கின்றார் என்பதுடன் தன்னுடைய தாய்மொழிப் பற்றுமிக்க ஒருவராகத் திழ்ந்ததற்கான ஆதாரமிக்க தேடல்களை ஒருங்கே கட்டுரையாகத் தந்திருக்கின்றார் இச் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் தம்பு சிவா அவர்கள். 'மனித எச்சங்கள்' எனும் சிறுகதையை வவுனியூர் இரா உதயணன் தந்திருக்கிறார். வெள்ளை முள்ளிவாய்க்காலின் இறுதி யுத்தம் தந்த கொடூரத்தின் எச்சங்கள், அந்த எச்சங்களையும் மனிதமிருகங்கள் குத்திக் குதறும் போக்கும் இங்கே கதையாகப் பின்னப்பட்டுள்ளது.

பழந்தமிழர் வாழ்வில் அறிவியல் என்கிற மிகப் பெறுமதியான கட்டுரை ஒன்றினை முனைவர் பீ.அந்தோனி லூயிஸ் (தமிழ்நாடு) தந்திருக்கின்றார். வேற்று நாட்டவர்களின் தமிழ்ப்பணி எனும் தலைப்பில் தமிழைக் கற்று தமிழுக்குத் தொண்டாற்றிய இத்தாலிய நாட்டவரான ஜோசவ் பெஸ்கி என்கிற வீரமாமுனிவர், கோல்ட் வெல் பாதிரியார் போன்றோர்களை நினைவில் நிறுத்தி, எல்லிஸின் தமிழ் இலக்கியப் பணி பற்றியதான விடயம் 'அறிந்தவையும் தெரிந்தவையும்' எனும் அங்கத்தினுள் பொதிந்துள்ளது. புதுக்கவிதையின் தந்தை எனும் சிறுதலைப்பில் ந.பிச்சைமூர்த்தி அவர்கள் பற்றிக் கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்களும், தினகரன் முன்னாள் பிரதம ஆசிரியர் கலாசூரி ஆர்.சிவகுருநாதன் ஞாபகார்த்த கட்டுரைப் போட்டி 2016க்கான விடயங்களும், ஷெல்லிதாசனின் கவிதைப் பக்கமும் தாயக ஒலியை மேலும் சிறப்பிக்கச் செய்கின்றன.

இசைத் தமிழின் தொன்மை பற்றிய மற்றுமொரு கட்டுரையினை சுப்பு தந்திருக்கின்றார். இசையின் முக்கியத்துவம் அதன் தொடர்ச்சி இன்று எவ்வாறு காணப்படுகின்றது என்கிற பல்வேறு விடயங்கள் இங்கே தரப்பட்டுள்ளன. இசையின் ஆர்வலர்கள் கட்டாயம் வாசிக்க வேண்டிய அரிய கட்டுரையிதுவாகும். மற்றுமொரு கட்டுரையினை (என்னுடைய கட்டுரையிது) அட்டாளைச்சேனை மன்சூர் தந்திருக்கின்றார். தற்காலத்தில் மிகவும் பேசப்படுகின்ற ஒருவிடயமான சிறுவர் மீது அதிகரித்துச் செல்லும் துஷ்பிரயோகங்கள் பற்றி இக் கட்டுரை ஆய்கின்றது. அண்மைக் காலமாக பல்வேறு தரப்பிலிருந்தும் பாதிக்கப்படுகின்ற சிறுவர்கள், சிறுமியர்கள் தொடர்பான ஆய்வுரீதியாக எழுதப்பட்ட கட்டுரையாக இது பதிவாகியிருப்பது தாயக ஒலியை மேலும் ஒளிரச் செய்கின்றது.

மேலும் அண்மையில் அமரத்துவம் எய்திய அற்புத மனிதர் ஆ.மா.சுப்பிரமணியம் ஐயா அவர்களைப் பற்றிய நினைவாடல்களை தம்புசிவா அவர்களும், 'தோஷம்' எனும் குறுங்கதையினை திருமலை சுந்தா அவர்களும், சிறுவர் கதைகள் மற்றும் 'திருவிளையாடல்' புராணத்தில் கால்மாறி ஆடிய படலம் எனும்

தலைப்பில் கனடாவைச் சேர்ந்த ஆனந்தர் சுப்பிரமணியத்தின் கட்டுரையும், தொன்மமும் இலக்கியமும் என்கிற குறிப்பினை பேராசிரியர் அ.அறிவுநம்பி அவர்களும் இன்றைய நாட்களில் அவசியமான ஒன்றாகத் தேவைப்படுகின்ற 'மதமும் மத ஸ்தாபனங்களும்' என்கிற ஆன்மீகம் சார்ந்த கட்டுரையில் அமரர் பெ.பொ.சிவசேகரம் அவர்களது பதிவும் இதில் காணப்படுகின்றது. பேராசிரியர் சபா.ஜெயராசா அவர்களின் 'சாமியாரின் கதைகள்' எனும் தலைப்பில் இரண்டு குட்டிக் கதைகளும், எங்கோ கேட்டவை 'பரிசுப்பொருள்' என்கிற நகைச்சுவைக் கதையினை இணுவை இரகுவும், பண்டிதை பொன் பாக்கியத் தின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பற்றிய கட்டுரையும் இவ்விதழை அலங்கரிக்கின்றன.

மேலும் பரதேசி பரமசிவன் எனும் தலைப்பில் சிந்திக்க ஒரு கதையும், வியக்கவைக்கும் வீரமா முனிவரின் தமிழ்ப் பணிகள் பற்றிய நீண்டதொரு கட்டுரையின் ஊடாக பல்வேறு விடயங்களையும், சினிமாவை சூட்டிங் ஆக்கியவர் பற்றிய தகவல், 'ஐந்து கண்டங்களின் மண்' நூல் அறிமுகக் குறிப்புக்களும் இறுதியாக மதிக்கப்பட வேண்டிய முதுமை எனும் தலைப்பில் வைத்தியர் உமாபதி ஸ்ரீசங்கர் அவர்களது கட்டுரையும், கடந்த தாயக ஒலி சஞ்சிகைகள் பற்றி தினகரன், வீரகேசரி பத்திரிகைகளில் வெளியாகும் கருத்துக்கள் பற்றிய 'உங்கள் விருந்து' பக்கத்தில் ஒலித்துப் பதிவாயிருக்கிறது.

'பல்துறை ஆளுமைமிக்க செயற்பாட்டாளரை இழந்து நிற்கின்றோம்' எனும் தலைப்பில் அண்மை யில் இவ்வுலகை விட்டு நீங்கியிருந்தாலும் இலக்கியவாதிகளின் நெஞ்சங்களில் நீங்கா இடத்தைப் பிடித்துள்ள சிவா சுப்பிரமணியம் பற்றிய நினைவாடல்களை தம்புசிவா அவர்கள் தருகின்றார். முன் அட்டையில் கொடகே விருது பெற்ற மூத்த எழுத்தாளர்களை ஊடக அமைச்சர் முன்னில் கௌரவம் பெற்ற படமும் பதிவாகியிருப்பது தாயக ஒலி சஞ்சிகைக்கு முத்தாப்பாய் அமைந்திருக்கின்றது. மொத்தத்தில் மொழியாளர்களும் இலக்கிய ஆய்வாளர்களும் தொன்மைமிக்க தமிழின் தொன்மைத்துவத்தை அறிந்து கொள்ளும் வகையில் தாயக ஒலி உலகமெல்லாம் தவழ்கிறது. சிறிய தொகைக்குள் நிறைந்த பயனை தாயகஒலி வழங்கியிருக்கின்றது. இலக்கிய ஆர்வலர்கள், தமிழில் ஆய்வுகளை மேற் கொள்வோர், வாசிப்பினை போஷிக்கும் அனைவரும் ஆவணப்படுத்த வேண்டிய சஞ்சிகை தாயக ஒலி!.

- அட்டாளைச்சேனை மன்சூர்

## சிறுவர் பாடல்கள்

### அம்புலியே



அம்புலியே
அம்புலியே
வா வா வா

அயல் முழுதும்
பால் நிலவு
தா தா தா

அம்புலி என் தமிழ்ப் பாடல்
கேள் நீ கேள்

அம்புலி என் ஆடல்களும்
பார் பார் பார்

- அம்பி

### அம்மா

அம்மா அம்மா என் அம்மா
அம்மா அம்மா என் அம்மா

அச்சாச் சட்டை
எனக்குப் போட்டு

அள்ளித் தழுவி
மழலை பொழிந்து


அணைத்துக் கொஞ்சி
கொஞ்சி மகிழ்பவர்

அம்மா அம்மா என் அம்மா



- அம்பி

# அற்புதத்திலும் அற்புதம்




'தாயக ஒலி' யின் 25வது சிறப்பு மலரைத் தொடர்ந்து வெளிவந்த 26வது இதழ் கண்டேன். வழமையாக வெளிவரும் 48 பக்கங்களும் 26வது இதழுக்கு உண்மையிலேயே பெருமையைக் கொடுத்துள்ளன. அட்டையில் பலருக்குத் தெரியாத ஒரு வரலாற்று நாயகியின் உருவத்தைத் தரிக்க வைத்தமை ஆசிரியரின் தேடலில் கிடைத்த அற்புதமான செய்தியாகும். பற்பல புதியவிடயங்களை அள்ளிதரும் தனித்துவம் 'தாயக ஒலி'க்கு மட்டுந்தான் உண்டு. பேனாமுனையில் ஆசிரியரின் 'சிறுவர் உரிமைகளும் பாதுகாப்பும்' என்னும் அறிவுறுத்தல் எழுத்தின் ஆளுமைக்குக் கட்டியம் கூறுகின்றது 'மானிட வாழ்வின் பண்பாட்டுப் பதிவுகள்'. 'ஒரு பார்வை' என்னும் கட்டுரை பண்பாடு பற்றிய பல்வகையான விழுமியங்களைத் தெரியவைத்துள்ளது.

இலங்கையின் வரலாற்றில், ஆளுமை மிக்க படைப்பாளிகளாக முன்னிலைப்படுத்தப்பெற்ற வ.அ.இராசரெத்தினம், குறமகள் வள்ளி நாயகி மற்றும் ஆளுமைமிக்க அதிபர் தெ.து.ஜயரத்தினம் ஆகியோரின் முக்கிய பங்களிப்புகள் பற்றிய தகவல்கள் 'தாயக ஒலி'யில் இடம்பெற்றிருப்பது அதன் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது.

இரா.உதயணனின் **'இப்படியும் மனிதர்கள்'** சிறுகதை சமுதாயச் சீரழிவுகளைப் படம்பிடித்துக் காட்டிநிற்கிறது. பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான ஒரு இளம்பெண்ணின் பரிதாப நிலையைத் தத்துருவமாகச் சொல்லியுள்ளார்.


ஐ.நா.பற்றிய கட்டுரை பல தகவல்களைத் தந்துள்ளது. புதிய செயலாளர் நாயகம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளார். செயற்கை இனிப்புகள் சம்பந்தப்பட்ட பலதரப்பட்டதான அடைவுகளை முன்னிறுத்தி தமது முடிவை டொக்டர் எம்.கே.முருகானந்தன் முன்வைத்துள்ளார். பயன்தரக்கூடிய தகவல்கள் பரிமாறப் பட்டுள்ளன. நான் பிறந்த இணுவில் மக்லியோட் வைத்தியசாலை பற்றி நீண்ட வருடங்களுக்குப் பின் ஞாபகப்படுத்தியுள்ளார் திரு.பாக்கியநாதன் அகிலன் அவருக்கு எனது நன்றிகள். 'கேட்டதைச் சொல்ல வந்தோம்' என்ற பகுதியில் பல புதிய விடயங்கள் சிந்தனைக்கு விருந்தாக அமைந்துள்ளன. மொத்தத்தில் 'தாயக ஒலி'யில் தரப்பட்டுள்ள அத்தனை அம்சங்களும் அற்புதத்திலும் அற்புதம்.

**- தில்லைநாதன் வர்ணகுலசூரியன்**
**புதுக்குடியிருப்பு வடக்கு**

## அட்டைப்பட விளக்கம்

**விடியற்காலை, வயல்வெளியில் எருதுகள் பூட்டி உழவுசெய்கின்றான் உழவன். கஞ்சிப்பானை தலையில் சுமந்து கணவனை நோக்கி வருகிறாள் நங்கை. சூரியபகவானுக்கு நன்றிக்கடன் செலுத்த தைத்திருநாளில் முற்றத்தில் கோலமிட்டு, பூரண கும்பம் வைத்து, புதுப்பானையில் பொங்குகிறாள் ஒரு இல்லத்தரசி. கணவனும் பிள்ளையும் வணங்கி நிற்கின்றனர் தைபிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கையுடன்.**

# உங்களின் வாழ்வை வளமாக்கும் தியான சற்சங்கங்கள் அருட் பேருரைகள்









ஞானக்கண் என்று சொல்லப்படுகின்ற மூன்றாவது கண்ணை சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் விழிப் படையச் செய்து வரும் ஒரு ஞான சற்குருவின் தமிழ் அருட் பேருரைகள் தியான சற்சங்கங்கள் குறுகியகால காணொ ளிகளாக இப்போது இணையத்தில் கிடைக்கின்றன. இணைய முகவரி

https://www.youtube.com/user/NithyanandaTamil/videos


Whether it's a Celebration,
a Gift to Someone Special,
or just a Royal Treat for yourself...
discover a new heaven on earth:
POOJA
SWEETS & SAVOURIES
Best Quality Vegetarian Food
For Any Occasion
ORDER ONLINE FOR NEXT DAY DELIVERY *
www.poojasweets.com
TOOTING BRANCH
168-170 UPPER TOOTING
ROAD, LONDON, SW17 7 ER
T : 020 8672 4523
info@poojasweets.com
KINGSBURY BRANCH
KINGSBURY ROAD
LONDON, NW9 9ED
T : 020 8206 2206
kingsbury@poojasweets.com
CARDIFF BRANCH
3 ALBANY ROAD, ROATH
CARDIFF, CF24 3LH
T : 029 2021 4987
cardiff@poojasweets.com

With Compliments From

# N.Ranjithakumaran

MA (Human Rights)

## *Solicitor*

180 Mitcham Road
Tooting
London SW17 9NJ
UNITED KINGDOM

Tel - 0208 767 9717
Mobile - 0795 688 6749
Fax - 0208 767 9684

email : ranjit@ranjitandco.com







தமிழ்நாட்டின் முதல்வர்
செல்வி ஜெயலலிதா ஜெயராமுக்கு
தாயக ஒலியின் அஞ்சலிகள்

# Western Jewellers

Jewellers & Gem Merchants




வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள் உங்கள் வெஸ்டன் ஜுவல்லர்ஸ்

## First Tamil Jewellery Shop in UK

*Specialise in 22ct Gold, White Gold, Platinum & Diamond Jewellery*

**TOOTING BRANCH**
230, UPPER TOOTING ROAD
LONDON SW 17 7EW
UNITED KINGDOM
TEL: 020 8767 3445

**WEMBLEY BRANCH**
5, PLAZA PARADE
EALING ROAD,
WEMBLEY
HAO 4YA
UNITED KINGDOM
TEL : 0208 903 0909



*Season's Best is Summer, Saree's Best is Silk Emporium Sarees*

**SILK EMPORIUM**

122 Upper Tooting Road,
London SW17 7EN
Tel : 020 8672 1900

Opening Hours : Monday - Saturday ( 10.30 am - 6.30pm), Sunday (11.30am-6.30pm)

Luckyland

BISCUIT
MANUFACTURERS




NATTARANPOTHA, KUNDASALE, SRILANKA.
T: +94 081 2420574, 2420217, Fax : + 94 081 2420740
E-mail : luckyland@sltnet.lk

சிவராம் பதிப்பகம், 20(32), கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 221 9440